www.padippakam.com

16-31 ஜூலை 2000 ரூ. 5.00

# புதிய ஜனநாயகம்







படிப்பகம்

www.padippakam.com

# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

சமாளித்து வருகிறது, மைய அரசு.

## அம்மணமாக ஆடுவதே உலகமயப் பண்பாடு

''சானல் வீ'' என்ற பன்னாட்டு தொலைக்காட்சி நிறுவனம் இளைஞர்களை, குறிப்பாக இளம் பெண்களைக் குறி வைத்து ஒரு போட்டி நிகழ்ச்சியை மும்பயில் நடத்தியது. போட்டியில் கலந்து கொள்ளுபவர்கள் இசைக்கேற்ப நடனமாடிக் கொண்டே, தங்களின் ஆடைகளை ஒவ்வொன்றாகக் களைய வேண்டும். யார் பயமின்றி, தைரியமாகத் தங்களின் அங்கங்களைத் திறந்து காட்டுகிறார்களோ, அவர்களுக்குப் பரிசு. அவிழ்த்துப் போட்டு ஆடும் இந்த நடன நிகழ்ச்சியை ''சானல் வீ'' ஸ்டூடியோக்களில் நடத்தவில்லை; பட்டப்பகலில் மும்பய் நகரத் தெருக்களில் நடத்தி, நேரடியாக ஒளிபரப்பியது. இந்நிகழ்ச்சிக்கு மும்பய் நகர மக்களிடமிருந்து வந்த எதிர்ப்பையடுத்து, நிகழ்ச்சிக்குத் தடை விதிக்கப்பட்டு, நிகழ்ச்சியைத் தயாரித்தவர்கள் கைது செய்யப்பட்டனர். இந்த நிகழ்ச்சியை எதிர்ப்பவர்களுக்கு 'சானல் வீ' சொன்ன பதில்: ''உங்களுக்கு ஆபாசமாகத் தெரிவது, எங்களுக்குப் பண்பாடாகத் தெரிகிறது.''

## இந்து மதமும், பெண்களும்

மகாராஷ்டிரா மாநிலம் - அகமத் நகர் மாவட்டத்திலுள்ள சனி - சிங்கனபுர் என்ற ஊரில் அமைந்திருக்கும் கோவிலினுள் பெண்கள் நுழைவதற்கு உரிமை கிடையாது என்ற சனாதன தர்மம் தான் இன்று வரையிலும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. ''மூட நம்பிக்கைகள் ஒழிப்பு இயக்கம்'' எனும் சமூக சீர்திருத்த அமைப்பு, இந்தப் பாரபட்சத்தை நீக்கக் கோரிப் போராடி வருகிறது. சமீபத்தில் இந்த அமைப்பு பெண்களைத் திரட்டி ஆர்ப்பாட்ட பேரணியையும் நடத்தியது. இந்த ஆர்ப்பாட்டத்தால் கோயிலினுள் உள்ளே இருக்கும் சனி பகவானுக்கு ஆத்திரம் வந்ததாகத் தெரியவில்லை. ஆர்.எஸ்.எஸ்., சிவசேனா சனியன்கள்தான் மனு நீதியைக் காப்பாற்றுவதற்குத் தங்களது குண்டர்களை இறக்கி விட்டுள்ளன.

பெண்கள் வழிபட அனுமதி மறுக்கப்படும் ஆலயம்: ஆண்டவனாலும் ஆண்டவனின் அடியாள் படையாலும் காக்க முடியாத சனாதன தர்மத்தை இரும்பு தடுப்பு வேலி காந்து விடுமா?



## நியாயவிலைக் கடைகளின் இலட்சணம்

தில்லியில் இயங்கி வரும் நியாய விலைக் கடைகள் அநியாய விலைக் கடைகளாக மாறி விட்டது மிகவும் வெளிப்படையாகவே தெரியத் தொடங்கியுள்ளது. மைய அரசு அரிசிக்கும், கோதுமைக்கும் கொடுத்துவந்த மானியத்தைக் குறைத்த பிறகு, தில்லி நியாய விலைக் கடைகளில் ஒரு கிலோ கோதுமை ஒன்பது ரூபாய்க்கு விற்கப்படுகிறது. ஆனால், அதே தரமுள்ள கோதுமை, மளிகைக் கடைகளில் ஆறு ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இதனால் நியாயவிலைக் கடைகளை மூடிவிட வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகிவிட்டது. பெயருக்காகவாவது கடைகளை நடத்த வேண்டும் என்பதற்காக, தனியார் முதலாளிகளிடம் கோதுமையை வாங்கி, அதைக் குறைந்த விலைக்கு ஆறு ரூபாய்க்கு விற்று நிலைமையைச்

## தனியாரின் 'திறமை' மக்களின் அவதி

ஒரிசா மாநிலத்தைச் சேர்ந்த புவனேசுவரம், கட்டாக், பூரி உள்ளிட்ட 22 நகராட்சிப் பகுதிகள் மே மாதத்தின் பொழுது தொடர்ந்து பல நாட்கள் இருளில் மூழ்கிக் கிடந்தன. இதற்கு மின்தடை காரணமல்ல. இந்த நகராட்சிப் பகுதிகளுக்கு மின்சார வழங்கும் பொறுப்பு ஏ.ஈ.எஸ். என்ற அமெரிக்கப் பன்னாட்டு நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்நகராட்சிகள் மின்கட்டணத்தைச் செலுத்தத் தவறியதால், ஏ.ஈ.எஸ். மின்சாரத்தை நிறுத்தி விட்டது. இதனால், தெரு விளக்குகள் எரியவில்லை; குடி தண்ணீர் வரவில்லை... இப்படி பல பொதுப் பணிகள் நிலைகுலைந்து போயின. பொதுமக்கள் பட்ட அவதியைக் கண்டு கொள்ளாத ஏ.ஈ.எஸ்., கட்டணத்தைக் கறாராக வசூலித்த பின்தான் மின்சாரத்தை மீண்டும் வழங்கத் தொடங்கியது.

## சேவையா? கொள்ளையா?

மும்பய் மாநகராட்சி நடத்தி வரும் மருத்துவமனைகள் பொதுமக்களிடமிருந்து காசு பிடுங்குவதில் ஏறக்குறைய தனியார் மருத்துவமனைகளைப் போலாகிவிட்டன. இம்மருத்துவமனைகளில் கர்ப்பிணிப் பெண்களின் பிரசவத்திற்குக் கட்டணம் நானூறு ரூபாய்; இதய அறுவை சிகிச்சை, மூளை அறுவை சிகிச்சை போன்ற சிக்கலான அறுவை சிகிச்சையென்றால் கட்டணம் ரூ. 5,000/- ''போட்ட பணத்திற்கு ஏதாவது திரும்பக் கிடைக்க வேண்டாமா?'' என ''தொழில் தர்மம்'' பேசி, இச்சட்டபூர்வக் கொள்ளையை நியாயப்படுத்துகிறது, மும்பய் மாநகராட்சி.

## மேலைநாட்டுக் குழந்தைகளின் பரிதாப நிலை

''யுனிசெப்'' என்ற ஐ.நா. நிறுவனம் குழந்தை நலன் பற்றிய ஆய்வொன்றை சமீபத்தில் நடத்தியது. ஆய்வு நடத்தப்பட்ட 23 நாடுகளில், பிரிட்டனில் குழந்தைகளின் நிலைமை படுமோசமாக இருப்பது அம்பலமாகியுள்ளது. உலகின் மிகப் பெரிய பணக்கார நாடுகளில் ஒன்றான அந்நாட்டில், 20 சதவீதக் குழந்தைகள், கிட்டதட்ட 40 இலட்சம் குழந்தைகள் அடுத்தவேளை சோற்றுக்கு வழியில்லாத வறுமைக்கு ஆளாகியுள்ளனர். அமெரிக்காவில் குழந்தைகளின் நிலையோ பிரிட்டனை விட படுமோசம். குழந்தை நலன் பற்றிய பட்டியலில் பிரிட்டன் 19-ஆவது இடத்தையும், அமெரிக்கா 20 ஆவது இடத்தையும்தான் பிடித்துள்ளன. சொந்த நாட்டில் வறுமையை ஒழிக்க முடியாதவர்கள் தாராளமயம் மூலம் ஏழை நாடுகளின் வறுமையை ஒழித்து விடுவோம் என வீராப்பு பேசுவது எத்தகைய மோசடித்தனம்!

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 15

**இதழ் 16 -17**

1 ஜூலை 2000 - 31 ஜூலை 2000

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டு சந்தா: ரூ. 120.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 18

அட்டை ஓவியம் : கரோ

படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்

புதிய ஜனநாயகம்
அஞ்சல் பெட்டி எண்: 6015,
அசோக் நகர்,
சென்னை - 600 083.


## காசுமீர்: சுயாட்சிக் கோரிக்கை நிராகரிப்பு! மதரீதியில் கூறுபோட முயற்சி!

கூரையேறி கோழி பிடிக்க முடியாதவன், வானமேறி வைகுந்தம் போவதாகச் சவடால் அடித்தானாம். அதுதான் இந்திய அரசின் நிலை. இந்த நாட்டுக்குள் முற்றிவரும் தேசிய இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வழியைக் காணோம். இந்த இலட்சணத்தில் "இலங்கை - ஈழப் பிரச்சினைக்குப் பஞ்சாயத்துப் பண்ணத் தயார்" என்று மார்தட்டுகிறது இந்திய அரசு. குறிப்பாக, ஜம்மு - காசுமீர் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காணும் அதன் முயற்சி ஒருபோதும் பலிக்காது என்பதை அது இந்நேரம் உணர்ந்து கொண்டிருக்க வேண்டும். அதையும் முற்றாக உணரவில்லை; அமெரிக்க ஏகாதிபத்தியத் துணையுடன் அரசியல் தீர்வு காணும் முயற்சியும் தீராத சிக்கலில் மாட்டிக் கொண்டுவிட்டது.

பாகிஸ்தான் வசமுள்ள காசுமீர் பகுதியை மீட்பதே தமது இலட்சியம் என்று சவடாலடித்து வந்த இந்திய அரசு அதைக் கைவிட்டு, தற்போதுள்ள இராணுவக் கட்டுப்பாட்டு கோட்டையே சர்வதேச எல்லையாக ஏற்கும்படி அமெரிக்காவில் நிர்பந்திக்கப்படுகிறது. இத்தீர்வை ஏற்கும் நிலையிலுள்ள இந்திய அரசு, இதன்மூலம் பாகிஸ்தான் வசமுள்ள காசுமீர் பகுதியை மீட்கும் கனவை மறந்துவிட வேண்டியதுதான். அமெரிக்கா முன்மொழியும் திட்டத்தின்படி, இந்துக்கள் பெரும்பான்மையாக வாழும் ஜம்மு மாவட்டங்களையும் லடாக்கில் பௌத்தர்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதியையும் தனித்தனி துணை மாநிலங்களாக (யூனியன் பிரதேசங்களாக) மாற்றிவிடுவது; இசுலாமியர் பெரும்பான்மையாக வாழும் பிற மாவட்டங்களை காசுமீரோடு இணைத்து சுயாட்சி வழங்கி விடுவது. மதவாத அடிப்படையிலான இத்திட்டம் பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். கும்பலுக்கு ஏற்புடையதாகத் தெரிகிறது. எனவே, இந்திய அரசின் தீவிரப் பரிசீலனையில் இது இருக்கிறது.

இதற்கிடையே, ஜம்மு - காசுமீரில் இந்திய இராணுவ நிலைகளின் மீதான எதிர்த் தாக்குதல் பீதியூட்டும் நிலையை அடைந்தது. இந்திய அரசின் அரசு பயங்கரவாத - மனித உரிமை மீறல் அக்கிரமங்கள் அம்பலப்பட்டு, சர்வதேச நெருக்குதல்கள் அதிகரித்தன. அமெரிக்கா முன்மொழிந்த திட்டத்துடன் ஹுரியத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த இந்தியா முடிவு செய்தது. இதனால், மக்கள் ஆதரவுமின்றி, அதிகாரத்தையும் இழந்து விடுவோம் என்று பயந்த காசுமீர் பரூக் அரசு, கடந்த மாதம் அவசர அவசரமாக காசுமீர் சட்டப் பேரவையில் ஒரு மாநில சுயாட்சித் தீர்மானத்தை நிறைவேற்றியது. உண்மையில் சுயாட்சிக் கோரிக்கையை அக்கட்சி எப்போதோ மறந்து போனது. 1996 தேர்தல்களில் பத்தோடு பதினொன்றாக இருந்தது. ஆட்சிக்கு வந்த பிறகு மாநில சுயாட்சி ஆய்வுக் குழு அமைக்கப்பட்டு, அது இரண்டாண்டுகளுக்கு முன்பு அறிக்கை சமர்ப்பித்தது. 1999 ஆரம்பத்தில் சட்டப் பேரவை முன்பு வைக்கப்பட்டது. அதைத் தூசுதட்டி எடுத்து, சிறப்புக் கூட்டம் நடத்தி, காங்கிரசு - பா.ஜ.க.வின் கடும் எதிர்ப்புக்கிடையே நிறைவேற்றியது.

காசுமீரின் இந்த மாநில சுயாட்சித் தீர்மானம் பிரிவினைவாத அடிப்படையிலானது என்று காங்கிரசு, பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். பரிவாரங்கள் உடனடியாகவே கூச்சல் போடத் துவங்கிவிட்டன. இத்தீர்மானம் அரசியல் சட்டத்துக்குட்பட்டதுதான், நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படும் என்று பிரதமர் பரூக்குக்கு வாக்குறுதியளித்தார். ஆனால், பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். நெருக்குதல் காரணமாக, உடனடியாகக் கூடிய அமைச்சரவை காசுமீர் சுயாட்சித் தீர்மானத்தை அடியோடு நிராகரித்தது. இந்த ஜூன் 26 மாநில சுயாட்சித் தீர்மானத்தின் உள்ளடக்கம் முழுமையாக வெளியிடப்படவில்லை. ஆனால் அது, 1953-க்கு முந்திய நிலையை ஜம்மு - காசுமீரில் நிலைநாட்ட வேண்டும்; இராணுவம், அயலுறுவு மற்றும் தகவல் - தொடர்பு தவிர, அனைத்துத் துறைகளும் மாநில அரசு வசம் ஒப்படைக்கப்பட வேண்டும்; இந்திய உச்சநீதி மன்றம், பொதுத் தணிக்கை மற்றும் கட்டுப்பாட்டு ஆணையம், தேர்தல் ஆணையம் ஆகியவை ஜம்மு - காசுமீரில் அதிகாரம் செலுத்த முடியாது; காசுமீருக்கு என்று தனியான சிவில், போலீசு சேவை அதிகாரிகள் தேர்வு அங்கேயே நடக்கும் என்பன போன்றவை அத்தீர்மானத்தில் இருக்கும் என்று கூறப்படுகிறது.

ஜம்மு - காசுமீருக்கு, இந்தியாவின் பிற மாநிலங்களுக்கு இல்லாத சிறப்புச் சலுகைகள் பலவற்றை வழங்கும் 370-ஆவது சட்டப் பிரிவை அடியோடு இரத்துச் செய்வதே தனது இலட்சியம் என்று புறப்பட்டது, பா.ஜ.க. இன்றோ 370-ஆவது சட்டப் பிரிவைப் பராமரிப்பதோடு, 1975 - இந்திரா - சேக் அப்துல்லா ஒப்பந்தத்தையும் ஏற்கிறது.

பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். கும்பலே இப்படி இறங்கி வரும்படி நிர்பந்திக்கப்படும் அதேசமயம், தி.மு.க., அகாலிதளம் போன்ற மாநில சுயாட்சி சூரப்புலிகள், பிரிவினைவாத முத்திரை குத்தப்படும் என்று அஞ்சி, ஜூன் 26 காசுமீர் மாநில சுயாட்சித் தீர்மானத்தை எதிர்க்கின்றனர். பரூக்கின் மாநில சுயாட்சி தீர்மானத்தையே ஏற்காத இந்திய அரசு, ஹுரியத்தின் கோரிக்கையான காசுமீர் சுயநிர்ணய உரிமை, அதற்காக இந்தியா - பாகிஸ்தான் - காசுமீரிகள் ஆகிய முத்தரப்பு பேச்சு வார்த்தைக்கா இணங்கும்? அமெரிக்க உள்ளிட்ட சர்வதேச நிர்பந்தம் காரணமாக பேச்சுவார்த்தை நாடகமாடுகிறது. இதோடு காசுமீரில் தொடரும் அரசு பயங்கரவாத ஒடுக்குமுறை அப்பிரச்சினையை மேலும் முற்றச் செய்யுமே தவிர, இந்திய ஆட்சியாளர்கள் கனவு காண்பதைப் போல தீர்த்து வைக்காது.

படிப்பகம்

www.padippakam.com

# இந்தியாவின் நிலையும் விடுதலைப் புலிகள் - ஆதரவாளர்களின் தமிழினத் துரோகமும்

சோனியாகாந்தி,
ஜெயலலிதா,
கருப்பையா மூப்பனார்,
நல்லக்கண்ணு,
சங்கரய்யா -
இவர்கள் அனைவரும் மத்திய, மாநில அரசுகளை எதிர்க்கும் ஒரே அரசியல் கூட்டணியில் இணைந்திருக்கிறவர்கள்;

இவர்கள் எல்லாம் தமிழீழத்தையும் குறிப்பாக பிரபாகரனின் விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் கடுமையாக எதிர்ப்பதில் ஒன்றுபட்டிருக்கிறார்கள்.

"துக்ளக் சோ" ராமசாமி
"வாழப்பாடி" ராமமூர்த்தி,
"ஜனதா" சுப்பிரமணிய சுவாமி
இவர்கள் எல்லாம் மேற்படி அணியைச் சேர்ந்தவர்கள் அல்ல.

ஆனால் இவர்கள் கூட தமிழீழத்திற்கும், குறிப்பாக விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் கடுமையான எதிர்ப்பாளர்கள்.

அதேசமயம், இதுவரை சொல்லப்பட்ட அத்தனை பேரும் இந்திய மத்திய அரசின் இலங்கை - ஈழக் கொள்கை, நடவடிக்கைகளையும் விடுதலைப் புலிகள் பற்றிய அதன் அணுகுமுறையையும் சரியானவைதானென்று முற்றாக ஆதரிக்கின்றனர்.

ம.தி.மு.க.வின் நிறுவனர் வைக்கோ, பா.ம.க.வின் நிறுவனர் இராமதாசு, தமிழர் தேசியக் கட்சியின் நெடுமாறன் மானவர் நகலகம் முதலாளி "நந்தன் வழி" அருணாசலம். இன்னும் பிற புலி ஆதரவு உதிரிக் குழுக்கள். தமிழக ஆளும் தேசிய ஜனநாயகக் கூட்டணித் தலைவர் தி.மு.க.வின் ஆயுட்காலத் தலைவர் கருணாநிதி.

— இவர்கள் அனைவரும் கூட மத்தியில் ஆளும் வாஜ்பாயி தலைமையிலான அரசின் இலங்கை - ஈழக் கொள்கை நிலையை சரியானவைதானென்று ஆதரிக்கின்றார்கள்.

அதாவது,

தமிழீழ விடுதலைப் புலிகளின் தீவிர ஆதாரவாளர்களும் இலங்கை - ஈழப் பிரச்சினையில் மத்திய அரசின் நிலையை ஆதரித்து ஏற்கிறார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகளைக் கடுமையாக எதிர்ப்பவர்களும் இலங்கை - ஈழப் பிரச்சினையில் மத்திய அரசின் நிலையை ஆதரித்து ஏற்கிறார்கள்.

இது என்ன அதிசயம், இது எப்படி சாத்தியமானது என்று திகைத்து நிற்கிறார்கள், இல்லை குழம்பி நிற்கிறார்கள், தமிழர்கள்.

**ஈழம்: "தேசிய"ப் பொதுக் கருத்து**

வாஜ்பாயி தலைமையிலான அரசு ஏற்பட்டதில் இருந்து பாரதீய ஜனதா கட்சி திரும்பத் திரும்ப ஒன்றைக் கூறி வருகிறது. எந்தப் பிரச்சனையானாலும் தேசியப் பொதுக்கருதது ஏற்படவேண்டும் என்பதுதான் அது. கார்கில் உட்பட வேறெந்தப் பிரச்சினையிலும் அப்படி ஒரு பொதுக்கருத்தை ஏற்படுத்த முடியவில்லை; என்றாலும்,

இலங்கை - ஈழப் பிரச்சினையில் மட்டும் அப்படி ஏதும் பொதுக் கருத்தை ஏற்படுத்துவதில் வாஜ்பாயி தலைமையிலான மத்திய அரசு வெற்றி பெற்றுவிட்டதா? ஆம், அப்படித்தான் தோன்றுகிறது!

மே முதல் வாரத்தில் யாழ்குடா நாட்டில் சிக்கியுள்ள 40,000 சிங்கள இராணுவத்தின் மீதான பிடி இறுகியது. அது மீள முடியாத நெருக்கடியில் சிக்கிக் கொண்டதை சிங்களத் தரப்பு உணர்ந்தது. சிங்கள புத்தத் துறவிகளின் தலைவர் ஒருவர் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்துக்கு வந்தார். யாழ்குடாவுக்கு இராணுவத்தை அனுப்பி புலிகளை ஒடுக்குவதற்கு இந்திய அரசிடம் வேண்டுகோள் விடுத்தார். இதையே இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கேயும் கோரினார். அடுத்த ஓரிரு நாளில் இலங்கையின் வெளியுறவுத்துறை அமைச்சர் கதிர்காமர் இந்தியப் பிரதமர் வாஜ்பாயியைச் சந்தித்து, இராணுவ நெருக்கடியில் இருந்து மீளுவதற்கான உதவி கோரினார்.

அடுத்த நாளே, ஆளும் கூட்டணியில் உள்ள தமிழ்நாட்டுக் கட்சிகளை அழைத்துக் கருத்துக் கேட்டார், பிரதமர். கருணாநிதியையும் புதுதில்லிக்கு அழைத்து ஆலோசனை நடத்தினார். அப்புறம் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இடம் பெற்றுள்ள 22 கட்சிகளும் மத்திய அரசின் பிரதமர், உள்துறை, வெளியுறவுத்துறை, இராணுவ அமைச்சர்களும் கலந்து கொண்ட கூட்டத்தில் ஒருமனதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

"முன்பு இராணுவத்தை அனுப்பி அதனால் ஏற்பட்ட விளைவுகளை மனதில் கொண்டு இங்கிருந்து இராணுவத்தை அனுப்புவதில்லை. அதேசமயம், பாதிக்கப்படும் தமிழர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணவேண்டும். இலங்கையின் அரசியல் சட்டத்திற்குட்பட்டு, அந்த நாட்டை துண்டாடாமல், அந்த நாட்டின் இறையாண்மைக்குட்பட்டுத் தீர்வு காணவேண்டும்" என்று ஆளும் கூட்டணிக் கட்சிகள் முடிவு செய்தன. இதை தி.மு.க, ம.தி.மு.க, பா.ம.க ஆகிய கட்சிகள் ஒப்புக் கொண்டு விட்டன.

"இலங்கையில் இராணுவத் தலையீடு செய்யமாட்டோம்; அந்நாட்டு அரசு கோரினால் மனிதாபிமான உதவி செய்வோம்" என்று அதுவரை வாஜ்பாயியும் ஜஸ்வந்த்சிங்கும் கூறிவந்தனர். இப்படிச் சொல்வதையே ஏற்புடையதல்ல என்று கூறி வந்தனர் வைக்கோவும் இராமதாசும். ஆனால், கூட்டணித் தீர்மானத்துக்குப் பின்னர் அதற்கே தமது சொந்த வியாக்கியானம் கொடுத்தனர். கருணாநிதியோ "தேசிய நலன்களின் அவசியத்தை ஒட்டி மத்திய அரசு எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளலாம். அதன் கரங்களை நாங்கள் கட்டிப்போட மாட்டோம்" என்று தன்னிலை விளக்கமளித்தார்.

இவ்வாறு ஆளும் கூட்டணிக்குள் ஒரு ஒத்த பொதுக் கருத்தை உருவாக்கிய பிறகு அனைத்துக் கட்சிக் கூட்டத்தை பிரதமர் வாஜ்பாயி கூட்டினார். "முதலாவதாக, இராணுவத் தலையீடு கூடாது. இரண்டாவதாக, இலங்கையின் ஐக்கியம் - ஒருமைப்பாட்டைக் காப்பதில் வலிந்து நிற்க வேண்டும். மூன்றாவதாக, இலங்கையின் சிறுபான்மையினருக்கு குறிப்பாக, தமிழருக்கு முழுப் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும். நான்காவதாக, இலங்கையின் இப்போதைய நெருக்கடிக்கு அந்நாட்டு அரசியல் சட்டத்திற்குட்பட்டு அமைதித் தீர்வு கான வேண்டும்" என்று அனைத்துக் கட்சிகளும் ஒருமனதாகத் தீர்மானித்தன.

இலங்கையின் நிலைமைகளை இந்தியா உன்னிப்பாகக் கவனித்து வரவேண்டும்; பாகிஸ்தான், இஸ்ரேல், சீனா தலையீடு செய்வதற்கு இடந்தரக் கூடாது; அரசு மேற்கொள்ளும் முடிவுகளை எதிர்க்கட்சிகளுடன் கலந்தாலோசிக்க வேண்டும் என சில கட்சிகள் கோரின. அரசும் அதை ஏற்றது.


படிப்பகம்

www.padippakam.com

இந்தியா மேற்கொள்ளும் எந்த நடவடிக்கையையும் ஆதரிப்பதாக அமெரிக்கா வாக்களித்திருப்பதாக அரசு தெரிவித்தது. அனைத்துக் கட்சிக் கூட்டத்தின் இந்த முடிவை தி.மு.க, ம.தி.மு.க, பா.ம.க ஆகிய கட்சிகளும் ஏற்றுக் கொண்டன.

இந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கு முன்பாக தமிழ்நாட்டு எதிர்க்கட்சிகளைக் கலந்து ஆலோசிக்கத் தவறிவிட்டதாக மத்திய, மாநில அரசுகள் மீது ஜெயலலிதா, மூப்பனார், திண்டிவனம் ராமமூர்த்தி ஆகியோர் குறைபட்டுக் கொண்டனர். நல்லக்கண்ணு, சங்கரய்யா தலைமையிலான கட்சிகள் அதையும் குறையாகக் காணவில்லை. மற்றபடி இவர்கள் எல்லோருமே அனைத்துக் கட்சிக் கூட்ட முடிவை வரவேற்றனர்.

இப்படியாக, இலங்கை - ஈழப் பிரச்சினையில் ஒன்றுபட்ட தேசியப் பொதுக் கருத்தை அடைவதில் வாஜ்பாய் தலைமையிலான மத்திய அரசு சாதனை புரிந்தது.

எவ்வளவு பெரிய சாதனை தெரியுமா?

ஆடும், புலியும் ஒரே துறையில் நீர் குடிக்கும்படி செய்யும் சாதனை.

அதாவது தமிழீழ விடுதலைப் புலிகளின் பரம எதிரிகளும், அவர்களின் தீவிர ஆதரவாளர்களும் ஒத்த கருத்தை வந்தடைந்திருக்கிறார்கள். வேறு எந்தப் பிரச்சினையிலும் அல்ல. இலங்கை - ஈழப் பிரச்சினையில்; மத்திய அரசு எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்கிற முடிவில் -

எந்த அடிப்படையில்?

எந்தத் தரப்புக்கும் சாதக - பாதகம் இல்லாத நடுநிலையான, பொது நலன்களைக் கொண்டு ஒன்றுபட்ட கருத்துக்கு வந்தார்களா? இல்லை —

இரண்டு தரப்புமே தமது சொந்தக் கொள்கை, கோட்பாடுகளைக் கைவிட்டு வேறொன்றில் ஒற்றுமை கண்டு விட்டார்களா? இல்லை —

ஏதாவது ஒரு தரப்பு மட்டும் தனது சொந்தக் கொள்கை, கோட்பாடுகளைக் கைவிட்டு மற்றொன்றுடன் சமரசங்கண்டு விட்டார்களா? இல்லை -

புலிகளின் எதிர்ப்பாளர்கள், புலிகளின் ஆதரவாளர்கள் ஆகிய இரண்டு தரப்புமே மத்திய அரசு மேற்கொண்டுள்ள நிலையைத்தான் ஏற்று ஆதரிக்கிறார்களே தவிர, தங்களுடைய சொந்த நிலைப்பாட்டைக் கைவிடவும் இல்லை, தனது எதிர்த்தரப்பின் நிலையை ஏற்கவும் இல்லை.

**புலி எதிர்ப்பாளர்களின் நிலை**

"இலங்கையின் இறையாண்மை, ஒருமைப்பாட்டுக்குக் குந்தகம் ஏற்படாமல் இலங்கை பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணவேண்டும் என்ற மத்திய அரசின் நிலையை காங்கிரசுக் கட்சி ஆதரிக்கிறது" என்று அதன் மூத்த தலைவர் பிரணாப் முகர்ஜி அறிவித்துள்ளார். அரசின் முடிவுகளை எதிர்க்கட்சிகளோடு பகிர்ந்து கொள்ள வேண்டும்; அதேசமயம் ம.தி.மு.க, பா.ம.க மற்றும் தி.மு.க ஆகிய ஆளும் கூட்டணிக் கட்சிகள் அரசின் முடிவுக்கு மாறாகப் பேசுவதை பிரதமர் கட்டுப்படுத்த வேண்டும் என்றார். (தினமணி, ஜூன் 7)

இதே கருத்தோடு "இலங்கைப் பிரச்சினையில் மத்திய அரசு எடுத்துள்ள நிலை சரியானதே" என்று கூறி தனது ஆதரவை ஜெயலலிதா தெரிவித்துள்ளார். (தினமணி, ஜூன் 14) இதையடுத்து, "மத்திய அரசின் நிலை முற்றிலும் சரியானதே. இலங்கைக்கு 480 கோடி ரூபாய் கடனுதவி தருவதாக இந்திய அரசு அறிவித்துள்ளது சரியான தருணத்தில் எடுக்கப்பட்ட அவசியமான முடிவு" என்று மூப்பனார் வரவேற்றார். இதையே இரண்டு போலிக் கம்யூனிஸ்டு கட்சிகளும் வழிமொழிந்துள்ளன.



இந்திய விமானப் படை தளபதி இலங்கை போய் வந்தது, இலங்கைக்கு 480 கோடி ரூபாய் கடனுதவி யளிப்பது போன்ற ஈழப் போராட்டத்துக்கு எதிரான மைய அரசின் செயல்களுக்கு தமிழக மக்களிடம் நியாயம் கற்பிக்கும் கடமையை வை.கோ. ஏற்றுள்ளார்.

"இலங்கையின் இறையாண்மைக்குப் பங்கம் நேராமலும், தனித் தமிழீழம் பிரிவினை இன்றியும் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும். மத்திய அரசின் ஆட்சிப் பொறுப்புகளில் அங்கம் வகிக்கும் பா.ம.க, ம.தி.மு.க ஆகிய கட்சிகள் தில்லியிலிருக்கும்போது ஒன்றும் சென்னைக்கு வந்தால் வேறொன்றும் பேசுகின்றனர். அவை தமிழீழப் பிரச்சினையில் மத்திய அரசின் கொள்கையை ஏற்றுக் கொள்ள வேண்டும். இல்லையானால் அவை மத்திய அரசிலிருந்து வெளியேறி விட வேண்டும்" என்றார், வாழப்பாடி ராமமூர்த்தி. (தினமணி, ஜூன் 7)

"ஈழப் பிரச்சினைக்கு செக்-ஸ்லோவாகியா பாணியில் தீர்வு காணவேண்டும்" என்று கருணாநிதியும், "தனி ஈழம் ஒன்றுதான் தீர்வு" என்று இராமதாசு - வைகோவும் கூறி வருவதைத் தொடர்ந்து புலி எதிர்ப்பாளர்கள் அனைவரும் இவர்கள் மீது பாய்ந்தனர். பிரதமர் தலையிட்டு இவர்களைக் கட்டுப்படுத்த வேண்டும் அல்லது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது முதல் பா.ம.க., ம.தி.மு.க.வைத் தடைசெய்ய வேண்டும் என்பதுவரை கோரினர்.

**புலி ஆதரவாளர்களின் நிலை**

அப்படியானால் மத்திய அரசின் நிலையைப் புலி ஆதரவாளர்கள் எதிர்க்கிறார்களா? அதுதான் இல்லை. புலி ஆதரவாளர் இல்லையென்றாலும், கருணாநிதி தனி ஈழமே தீர்வு அல்லது செக்-ஸ்லோவாகியா பாணித் தீர்வு என்று பேசி வருகிறார். அதேசமயம் இவரோ, தனிஈழமே தீர்வு என முழங்கும் வைகோ, இராமதாசோ மத்திய அரசின் நிலையை மறுத்தோ, எதிர்த்தோ ஏதாவது பேசுகின்றனரா? அதில் தமக்கு உடன்பாடு இல்லை என்றாவது சொல்லுகின்றனரா?

பாதுகாப்பு குறித்த மத்திய அமைச்சரவைக் குழுக் கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்ட முரசொலி மாறன், "நாங்கள் (தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு) இணைந்துதான் இலங்கை தொடர்பான கொள்கையை உருவாக்கினோம். அரசில் ஓர் அங்கம் என்ற வகையில் மத்திய அரசின் நிலையை தி.மு.க முழுமையாக ஏற்கிறது. இலங்கை வலுவானதாக இருக்க வேண்டும் என்றே விரும்புகிறோம். அண்டை நாட்டில் ரத்தம் சிந்தப்படுவதை விரும்பவில்லை. இலங்கை இனப் பிரச்சினைக்கு அந்நாட்டு மக்கள் அமைதியான தீர்வு காணவேண்டும் என்பதே நமது விருப்பம்." (தினமணி, ஜூன் 9)

ம.தி.மு.க.வின் தலைவர் வைகோவும், பா.ம.க தலைவர் இராமதாசும் தங்கள் கருத்தை ஏற்கும்படி மத்திய அரசை நிர்பந்திக்கவோ, திணிக்கவோ மாட்டோம் என்று உறுதி கூறி இருக்கின்றனர். (தினமணி, 3,17,20 ஜூன் 2000). "இன்று இலங்கைப் பிரச்சினையில் தலையிட மாட்டோம் என்று அமெரிக்கா சொல்கிறது என்றால் அது வாஜ்பாயி அரசின் ராஜ தந்திரத்துக்குக் கிடைத்த வெற்றி" என்று வைகோ பாராட்டியுள்ளார்.

அது மட்டுமல்ல; இந்திய விமானப் படை தளபதி இலங்கை போய் வந்தது, இலங்கைக்கு மனிதாபிமான உதவி செய்வோம் என்று இந்திய அரசு சொன்னது, இலங்கைக்கு 480 கோடி ரூபாய் கடனுதவியளிப்பது போன்ற மத்திய அரசு செயல்களுக்கு தமிழ் மக்களிடம் நியாயம் கற்பிக்கும் கடமையையும் வைகோ ஏற்றுள்ளார். தவிரவும், தனது புலி ஆதரவு


படிப்பகம்

www.padippakam.com

பேச்சுக்கள் மீது வரும் விமர்சனங்களுக்கு எல்லாம் மத்திய மந்திரிகளைச் சந்தித்து தன்னிலை விளக்கமும் அளித்து வருகிறார்.

''தி.மு.க, பா.ம.க, ம.தி.மு.க ஆகிய மூன்று பேருமே ஒரே கருத்தில் அதாவது 'தனி ஈழம்தான் தீர்வு' என்பதில் தெளிவாக இருக்கிறோம்'' என்று சொல்லும் இராமதாசு ''இலங்கை அரசியல் சட்டத்துக்குட்பட்டு, அந்த நாட்டின் இறையாண்மைக்குட்பட்டு, அந்த நாட்டைத் துண்டாடாமல் தீர்வு காண வேண்டும் என்றும் முடிவெடுக்கப்பட்டது. அந்த முடிவுக்கு பா.ம.க, ம.தி.மு.க, தி.மு.க உள்ளிட்ட கட்சிகள், கட்டுப்படுகிறோம் என்று சொல்லிவிட்டோம். இப்போது அதைப்பற்றிப் பிரச்சினையில்லை'' என்று சாதிக்கிறார். இப்போது அதைப்பற்றிப் பிரச்சினையில்லை என்றால் வேறு எதைப் பற்றித்தான் பிரச்சினை?

''இன்றைய நிலையில் 'தமிழ் ஈழம்தான் தீர்வு' என்று நாங்கள் சொல்லாமல் இருக்க முடியாது. ஏனென்றால், எங்கள் கட்சியின் கொள்கை அது. கட்சியின் முக்கியக் கொள்கையை, முக்கிய அடையாளத்தை விட்டுவிட்டு நாங்கள் கட்சியை நடத்த முடியாது.

''அதேநேரத்தில் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் 22 கட்சிகள் இருக்கும்போது, 'இலங்கை விசயத்தில் நீங்கள் எடுக்கிற முடிவை ஆதரிக்க மாட்டோம்; பெரும் பான்மை முடிவுக்குக் கட்டுப்பட மாட்டோம்' என்று சொல்ல முடியாது. நம்முடைய தேசிய நலன் கருதி இம்மாதிரி ஒரு முடிவெடுக்கிறோம்'' என்கிறார் இராமதாசு.

"தி.மு.க, ம.தி.மு.க, பா.ம.க ஆகிய மூவரையும் 'தனி ஈழத்தை ஒப்புக் கொள்' என்று நிர்பந்தத்தைக் கொடுத்து, அதனால் ஒரு நெருக்கடியை உருவாக்கி, மத்தியில் இருக்கிற ஆட்சி கலையவேண்டும் என்று காங்கிரசும், த.மா.கா.வும் நினைக்கிறார்கள். இந்திய அரசும், பிரதமரும் இலங்கை பிரச்சினையில் எடுத்து வைக்கிற அடி, நாங்கள் திருப்திப்படுமளவிற்கு இருக்கிறது. அதனால் இந்த அரசாங்கத்தை நாங்கள் கவிழ்க்க வேண்டிய அவசியம் கிடையாது. 'தமிழீழத்திற்கு ஆதரவு கொடுங்கள்; இல்லையென்றால் விலகி விடுவோம்' என்கிற நிர்பந்தத்தை நாங்கள் ஏற்படுத்த மாட்டோம்; காங்கிரசுக்காரர்கள் ஏற்படுத்த வேண்டும் என்று நினைக்கிறார்கள்; ஆனால் நாங்கள் விரும்பவில்லை'' என்று தெளிவு படுத்துகிறார் இராமதாசு.

''இப்போது மத்திய அரசின் நிலை சரியாக இருக்கிறபோது இதற்கு மேல் என்ன எதிர்பார்க்க முடியும்?'' என்றும் கேட்கிறார், இராமதாசு (குமுதம், 22 — ஜூன், 2000)

**ஏன் இந்த தடுமாற்றம்?**
**எதற்கு இந்த தன்னிலை விளக்கம்?**

தி.மு.க தான் கருணாநிதி; கருணாநிதி தான் தி.மு.க. அவரன்றி, அவரை மீறி அங்கே ஓர் அணுவும் அசையாது என்பது எல்லோருக்கும் தெரியும். அவருக்கு ஒரு கருத்து, தி.மு.க.வுக்கு வேறொரு கருத்து என்று நெடுங்காலமாகக் கிடையாது. என்றாலும் ஈழப் பிரச்சினைக்கு செக்-ஸ்லோவாக்கியா பாணித் தீர்வுதான் சரியென்று தனது பிறந்தநாளன்று கருணாநிதி கூறியது அவரது சொந்தக் கருத்துத்தான்; அது தி.மு.க.வின் நிலையல்ல என்று முரசொலிமாறன் விளக்கம் சொல்லுகிறார். நம்ப முடிகிறதா?

அதேபோன்றுதான் வைக்கோவும் ம.தி.மு.க.வும். ஆனால் அவர் சொல்கிறார், ''அன்றிலிருந்து இன்று வரையில் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் நான் அதிக ஆர்வத்தோடும் தீவிரத்தோடும் செயல்பட்டு வருவது, தமிழன் என்ற உணர்வில்தான். நான் ஜெனீவா சென்று ஐ.நா.வின் மனித உரிமைக் கமிசனில் முறையிட்டது இலங்கைத் தமிழர்களுக்குச் செய்யும் உதவிதான். மற்றபடி எனது இந்தப் பயணம் ம.தி.மு.க.வுக்கோ, எங்கள் கட்சியும் இடம் பெற்றுள்ள மத்திய அரசுக்கோ எந்தவித தொடர்பும் கிடையாது'' என்று சாதிக்கிறார் வைகோ. (நந்தன் வழி, 1-15 மே, 2000)



''இலங்கை அரசின் சட்டத்துக்குட்பட்டு, அந்த நாட்டின் இறையாண்மைக்குட்பட்டு, அந்த நாட்டைத் துண்டாடாமல் தீர்வு காண வேண்டும் என்றும் முடிவெடுக்கப் பட்டது. அந்த முடிவுக்கு பா.ம.க., ம.தி.மு.க., தி.மு.க., உள்ளிட்ட கட்சிகள் கட்டுப்படுகிறோம் என்று சொல்லி விட்டோம். இப்போது அதைப் பற்றிப் பிரச்சினை யில்லை'' என்று சாதிக்கிறார் தனி ஈழ ஆதரவாளர் இராமதாசு.

ஏன் இத்தனை தடுமாற்றம்? எதற்கு இவ்வளவு தன்னிலை விளக்கம்?

விடுதலைப் புலிகளுக்கு எதிரான இந்திய அரசியல் கட்சிகளைப் பொறுத்தவரை, அவை மத்திய அரசின் இலங்கை - ஈழக் கொள்கையும் அணுகுமுறையும் தமக்கு முற்றிலும் உடன்பாடானது என்பதால் ஏற்று ஆதரிக்கின்றன.

ஆனால், தி.மு.க, ம.தி.மு.க, பா.ம.க.வைப் பொறுத்தவரை அப்படி இல்லை. ஒருபுறம் ஈழத்தமிழர் நலனில் அக்கறை இருப்பதாக இங்கே சவடால் அடிக்கின்றன. மறுபுறம் மத்திய அரசின் நிலைப்பாட்டையும் அணுகுமுறையையும் ஆதரிக்கின்றன. அதனாலேயே இவ்வளவு தடுமாற்றம் - தன்னிலை விளக்கம் தேவைப்படுகின்றன.

தாம் நீண்டகாலமாகப் பின்பற்றி வரும் கொள்கையையும் விடமுடியாது; அதேசமயம் தேசிய நலன் கருதி மத்திய அரசின் முடிவையும் ஏற்கிறோம், என்கிறார்கள். உண்மை நிலை என்ன?

பார்ப்பனிய - பனியா எதிர்ப்பு, இந்துமதவெறி எதிர்ப்பு, இந்தி ஆதிக்க எதிர்ப்பு, மதச்சார்பின்மை - பகுத்தறிவு ஆகிய இவர்களின் முக்கியமான கொள்கைகளைக் கைவிடவில்லை; ஆனால் ''நிலையான ஆட்சி என்கிற தேசிய நலன் கருதி பாரதீய ஜனதாவுடன் கூட்டு வைத்துக் கொண்டிருக்கிறோம்'' என்று கூறிக் கொண்டே, பா.ஜ.க - ஆர்.எஸ்.எஸ் கும்பலின் அரசின் எல்லா நடவடிக்கைகளையும் எப்படி நியாயப்படுத்துகிறார்களோ அதுபோலத்தான் இதுவும்.

''செக்-ஸ்லோவாகிய பாணித் தீர்வு'', "தனி ஈழம் தான் தீர்வு'' என்கிற சவடால்களெல்லாம் மத்திய அரசில் தமக்குள்ள பதவி - அதிகாரத்துக்கு ஆபத்து உருவாகாத வகையில், மிகவும் கவனமாக வீசப்படுகின்றன. இந்த அடிப்படையில்தான் இலங்கைப் பிரச்சினையில் இந்திய அரசு மேற்கொள்ளும் ஒவ்வொரு நடவடிக்கையையும் மூடிமறைத்து, நியாயம் கற்பிக்கின்றனர்.

**ஈழம்: இந்திய அரசு**
**இன்னும் தலையிடவில்லையா?**

இவர்களும் இந்திய அரசும் செய்தி ஊடகங்களும் பம்மாத்து செய்வது போல இலங்கை - ஈழப் பிரச்சினையில் இந்தியா இன்னமும் தலையிடவில்லை என்று கருத முடியுமா?

✸ கடந்த மே முதல் வாரம் இலங்கை அரசிடமிருந்து உதவி கேட்டுத் தூது வந்ததுமே, விண்கோள்கள் மூலமாக உளவு பார்த்து புலிகளின் படை நடமாட்டத் தகவல்கள் தரப்படும் என்று இந்திய அரசு உறுதி கூறியது.

✸ முப்படைத் தளபதிகளும், இந்திய அமைச்சரவைப் பாதுகாப்புக் குழுவும் கூடிப் பேசி, இந்திய விமானப்படைத் தளபதி டிப்னிஸ் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். புலிகளின் நிலைகள் மீது விமானத் தாக்குதல்கள் நடத்துவதற்கும், புலிகளின் முன்னேற்றத்தைத் தடுப்பதற்கும் அவரது ஆலோசனைகள் பெறப்பட்டன. அதன் பின்னரே இலங்கை விமானப் படைத் தாக்குதல்களும் தொடங்கின.

✸ அமெரிக்கா, இந்தியா, நார்வே, இலங்கை



படிப்பகம்

www.padippakam.com

அரசுகளின் பிரதிநிதிகள் தனித்தனியே கூடிப்பேசி இலங்கையின் இறையாண்மை ஒருமைப்பாடு - ஐக்கியத்தைக் காப்பது, அதற்கு உதவுவது என்று ஒருமனதாக முடிவுக்கு வந்தனர். தமிழீழம் உருவாவதை, இலங்கை பிளவுபடுவதைக் கடுமையாக எதிர்ப்பது என்றும் அப்போது முடிவானது.

✱ இலங்கை இராணுவத் துணைமந்திரியும், இராணுவத் தளபதியும் அவசரமாக இந்தியாவுக்கு வந்து உதவி கோரிய பின்னரே இந்தியக் கப்பற்படையும் விமானப்படையும் தயார் நிலையில் இருப்பதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

✱ மீண்டும் முப்படைத் தளபதிகளும், இந்திய அமைச்சரவைப் பாதுகாப்புக் குழுவும் கூடிப் பேசினர். மனிதாபிமான அடிப்படையில் இலங்கைக்கு உதவப் போவதாக இந்திய அரசு அறிவித்தது. யாழ்குடா நாட்டில் புலிகளின் முற்றுகையில் சிக்கிக் கொண்டுள்ள 40,000 சிங்கள இராணுவத்தினரை மீட்பதுதான் இந்த மனிதாபிமான உதவி என்பதை அனைவரும் புரிந்து கொண்டனர்.

✱ பஞ்சாபைச் சேர்ந்த அரசு பயங்கரவாதக் கொலைவெறியன் கே.பி.எஸ். கில் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். போலீசு மற்றும் கிரிமினல்களைக் கொண்ட இரகசியக் கொலைக் குழுக்களை உருவாக்கி போராளிகளை அழித்தொழிப்பதில் திறமைமிக்கவர் இந்த கில். இதே முறையில் இலங்கை அரசுக்கு உதவுவதற்கே அவர் அனுப்பப்பட்டார்.

✱ செக்-ஸ்லோவாகியா பாணி உட்பட ஏதாவது ஒரு வகையில் ஈழப் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்று கருணாநிதி வலியுறுத்தினார். உடனடியாக முரசொலிமாறனை அழைத்து மிரட்டும் பாணியில் விளக்கம் கேட்ட வாஜ்பாயி தனி ஈழம் தீர்வு அல்ல; புலிகள் தனி ஈழம் பிரகடனம் செய்தால் அதை இந்தியா ஒருபோதும் அங்கீகரிக்காது என்று உறுதிபட அறிவித்தார்.

✱ இலங்கைக்குப் பறந்துபோன இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்த்சிங், சிங்கள - பௌத்த பேரின பாசிசத் தலைவர்களுடனும் தமிழின துரோகிகளுடனும் இரகசிய பேச்சு வார்த்தை நடத்தினார். 1987-இல் ராஜீவும் - ஜெயவர்த்தனேயும் கைசாத்திட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை உயிர்ப்பிப்பதற்கான வேலைகளைத் துவக்கும்படி செய்து விட்டார்.

✱ 1987 ஒப்பந்தத்தை ஏற்பதற்கு புலிகளுக்கு 400 கோடி ரூபாய் தருவதாகக் கூறி 100 கோடி ரூபாய் கொடுத்தார், ராஜீவ் காந்தி. இப்போது அதே ஒப்பந்தத்தை உயிர்ப்பிப்பதற்கு இலங்கை அரசுக்கு 480 கோடி ரூபாய் கொடுப்பதற்கு வாஜ்பாய் அரசு முன் வந்துள்ளது.

✱ "1987-இல் ஏற்பட்ட இந்திய - இலங்கை உடன்பாட்டில் குறிப்பிட்டுள்ள விசயங்களுக்கும் மேலாக, மேலும் சிலவற்றை உடன்பாட்டில் சேர்த்து புதிய திட்டத்தை இலங்கை அரசு அறிவித்தால், பேச்சு வார்த்தையில் பங்கேற்கத் தயார் என்று இந்திய அரசு தெரிவித்திருக்கிறது" என்று இலங்கை வெளியுறவு அமைச்சர் லட்சுமன் கதிர்காமர் அறிவித்தார். (தினமணி, 2 ஜூன் 2000).

✱ "இனி ஒரு உடன்பாடு ஏற்பட்டால், எந்தத் தரப்பு அதை மீறினாலும் யார், என்ன நடவடிக்கை என்ற ஷரத்தையும் சேர்க்க வேண்டும். அதுதான் உடன்பாட்டின் முக்கிய அம்சமாக இருக்கும்" என்று கதிர்காமர் வலியுறுத்தினார். 1987-இல் நடந்ததைப் போன்று இந்திய அமைதிப்படை என்ற வடிவில் இல்லாவிட்டாலும், பன்னாட்டுப் படைகள் என்ற போர்வையில் இந்திய இராணுவம் ஈழத்துக்குச் செல்வதற்கு இந்த ஏற்பாடு வழிவகுக்கும் என்பதில் சந்தேகமில்லை.

✱ கதிர்காமரின் இந்த அறிவிப்பு வந்த பத்து நாட்களுக்குள்ளாகவே ஜஸ்வந்த்சிங் கொழும்பு போனார். அவர் திரும்பிய ஓரிரு நாட்களிலேயே 1987 உடன்படிக்கை பாணியில் ஈழத்தில் ஒரு வடகிழக்கு பிராந்திய இடைக்கால ஆட்சியை அமைப்பதற்கான ஏற்பாடுகளில் இலங்கை அரசு இறங்கியது.

✱ 1987-89 இல் செயல்படுத்தியதைப் போல ஒரு போலியான தேர்தல் நடத்தி ஈழத்துக்கென்று திருகோணமலையில் எஞ்சியுள்ள தமிழின துரோகிகளை முன்னிறுத்தி ஒரு பொம்மை அரசை நிறுவுவதற்கான முயற்சியில் இலங்கை - இந்திய அரசுகள் முனைந்துள்ளன. இது மீண்டும் ஒரு கேலிக்கூத்தாகவே முடியும். இத்தகையதொரு ஏற்பாட்டிற்கு விடுதலைப் புலிகள் நிச்சயம் உடன்படமாட்டார்கள். அதையே காரணமாக வைத்து அவர்களை ஒடுக்குவதற்கு பன்னாட்டுப் படைகள் உட்பட பன்னாட்டு உதவியைப் பெறுவது என்கிற நோக்கில் இலங்கை அரசு முயலுகிறது. இந்திய அரசு அதற்குத் துணை நிற்கிறது.

இவையெல்லாம் உணர்ந்தும், இவற்றில் அப்பட்டமாக தெரிந்தவை கூட ஈழத் தமிழர்களுக்கு எதிரானவை அல்ல; இலங்கை அரசுக்கு ஆதரவானவையும் அல்ல என்று விளக்கமளிக்கிறார் வைக்கோ.

இவ்வளவுக்கும் பிறகுகூட, "இப்போது மத்திய அரசின் நிலை சரியாக இருக்கிறபோது, இதற்கு மேல் என்ன எதிர்பார்க்க முடியும்?" என்று கேட்கிறார் இராமதாசு.



**ஈரோட்டில் நடந்த ம.தி.மு.க. மாநாட்டில் அத்வானியோடு வை.கோ., மற்றும் இராமதாசு: பதவிக்கு முன் கொள்கையாவது, வெங்காயமாவது!**

கருணாநிதியோ, முரசொலி மாறன் மூலமாக மேற்கண்ட இலங்கை அரசு ஆதரவு நடவடிக்கைகளுக்கு ஒப்புதல் வழங்குகிறார். அதைவிட முக்கியமாக, ஈழத் தமிழர்களுக்கு ஆதரவான சிறு முயற்சிகள் எதுவானாலும் போலீசை ஏவி ஒடுக்குகிறார். அச்சகங்கள் மிரட்டப்படுகின்றன. கூட்டங்கள் - ஊர்வலங்களுக்குத் தடை விதிக்கப்படுகின்றன. சுவரொட்டிகள் கிழிக்கப்படுகின்றன, ஒட்டியவர்கள் கைது செய்யப்படுகின்றனர்.

கருணாநிதியோ, வைக்கோவோ, இராமதாசோ இப்படி நடந்து கொள்வது வியப்புக்குரியதில்லை. ஓட்டுக்கட்சி அரசியல் வாதிகளுக்குள்ள இயல்புதான் இது.

### இந்திய நிலை: புலிகளின் ஆதரவாளர் பித்தலாட்டம்

புலிகளின் தீவிர பிரச்சாரகர்களும் ஆதரவாளர்களுமான நெடுமாறன், நந்தன் வழி அருணாசலம் போன்றவர்கள் கூட இந்திய அரசின் ஈழத் தமிழர் விரோத - இலங்கை சிங்கள பேரினவாத ஆதரவு நடவடிக்கைகளை மூடிமறைத்து ஆதரிப்பது ஏன்?

ஈழத்தமிழர்களுக்கு விரோதமாகவும், இலங்கை சிங்கள அரசுக்கு ஆதரவாகவும்தான் வாஜ்பாயி அரசு செயல்பட்டு வருகிறதென்பது அப்பட்டமான உண்மை. ஆனால் நெடுமாறன் சொல்கிறார்,


படிப்பகம்

www.padippakam.com

"வாஜ்பாயின் சமீபத்திய அறிவிப்பு இரண்டு உண்மைகளை வெளிப்படுத்துகிறது. அவை. 1. இலங்கையில் தமிழர்களை பிழையான போக்கில் இலங்கை அரசு நடத்துகிறது என்ற குற்றச்சாட்டு, 2. இந்தப் போக்கை இலங்கை அரசு மாற்றிக் கொள்ள வேண்டும். இல்லையானால் அதன் விளைவுகளை சந்திக்கத்தான் வேண்டும். இதுதான் வாஜ்பாயியின் ஒருவரி எச்சரிக்கைக்கு அர்த்தமாகும்." (வின் நாயகன், 16-30 ஜூன் 2000) பா.ஜ.க.வின் அதிகாரபூர்வ கோயபல்சுப் புளுகர் வெங்கையா நாயுடு கூட நெடுமாறனைப் போல பொழிப்புரை கூற முடியாது.

இன்னும் சொல்கிறார் நெடுமாறன்: "ராஜீவ் காந்தி காலம் முதல் ஐ.கே. குஜ்ரால் காலம் வரை விடுதலைப் புலிகளுக்கு எதிரான நிலை எடுத்து வந்த இந்திய அரசு, முதல் முறையாக ஈழத்தமிழர் பிரச்சினையில் கவனம் செலுத்தத் தொடங்கி விட்டது. விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தாமல் இந்தப் பிரச்சினை தீராது என்பதைப் பகிரங்கமாக அறிவிக்கிறது.

"இலங்கை அரசு விடுதலைப் புலிகளிடம் வேண்டிக் கொண்டால் ஒழிய, தாங்கள் இந்தப் பிரச்சினையில் மனிதாபிமான உதவிகூட செய்ய முடியாது என்பதை திரும்பத் திரும்ப இந்திய அரசு வலியுறுத்தி வருகிறது" என்கிறார்.

நெடுமாறனின் இந்த கூற்று எவ்வளவு அப்பட்டமான பொய் என்பதை விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களான சுப.வீரபாண்டியனிடமும், சின்னக் குத்தூசியிடமும் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். இலங்கை அரசு கேளாமலேயே இந்திய அரசு தானே வலியப் போய் அதற்கு உதவிகள் செய்வதாக அவ்விருவரும் நக்கீரன் ஏட்டில் தொடர்ந்து எழுதி வருவது நெடுமாறனுக்கும் தெரியும்தானே!

இப்படிப் புளுகுவதில் நெடுமாறனோடு போட்டி போடுகிறது, மாணவர் நகலக முதலாளி அருணாச்சலத்தின் "நந்தன் வழி".

"'சிறீலங்கா அரசு தனது தமிழர் எதிர்ப்புக் கொள்கையைக் கைவிட வேண்டும்' என்று சினம் கொண்டு பேசியிருக்கிறார் இந்தியத் தலைவர் வாஜ்பாய்.

"'பாரத அரசு சிறீலங்காவுக்கு ஆதரவாகப் போரில் தன் படைகளை இறக்காது' என்று பாதுகாப்பு அமைச்சர் ஜார்ஜ் பெர்னாண்டஸ் உறுதி கூறியிருக்கிறார்.

"நேற்றைய 'ராஜீவ் பாதை'யில் செல்லாத வாஜ்பாய் அரசின் நேரிய பயணம் நெஞ்சுக்கு ஆறுதல் தருகிறது. ஆனால் -

"இதே வாஜ்பாய் அரசின் நிலைப்பாடு இனியும் தொடர வேண்டும்" (நந்தன் வழி, 16-30 ஜூன் 2000)

ஈழத்தமிழர் மீது வாஜ்பாயிக்கும் ஜார்ஜ் பெர்னாண்டசுக்கும் கருணை பொங்குவதாக புலிகளின் தீவிர ஆதரவாளர்கள் சாதிக்கின்றனர். ஆனால் நடப்பது என்ன?

ஜூன் 1 ஆம் தேதி. ஈழத்திலிருந்து கட்டுச் சோற்றுடன் கிளம்பிய 15 அகதிகள் நெடுந்தீவில் 6 நாட்கள் படகுக்காக காத்திருந்துவிட்டு, இராமேசுவரம் வந்திறங்கி, போலீசு நிலையத்தில் தஞ்சமடைந்தனர். அவர்களிடம் தகுந்த கடவுச் சீட்டு இல்லை என்று கூறி பாஸ்போர்ட் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டனர். இதற்குச் சில நாட்கள் முன்புதான் "திருட்டுத்தனமாக வரும் அகதிகள் பாஸ்போர்ட் சட்டத்தில் கைது செய்யப்படுவார்கள். அவர்களை ஏற்றிவரும் மீனவர்களின் படகுகள் பறிமுதல் செய்யப்படும்" என்று இராமநாதபுரம் ஆட்சியர் மணிபாரதி அறிவித்திருந்தார். யாழ்ப்பாணத்தில் நடக்கும் உக்கிரமான போர், குண்டு வீச்சுக்குத் தப்பி வருபவர்களிடம் கடவுச் சீட்டு இருக்குமா? கொழும்பு போய் பாஸ்போர்ட் - விசா வாங்கிவர முடியுமென்றால் அவர்கள் இங்கே ஏன் வருகிறார்கள்?

ஆனால், தப்பி ஓடிவரும் அகதிகள்மீது பாஸ்போர்ட், விசா இல்லை என்று வழக்குப் பதிவு செய்ததோடு, ஐ.பி.., எம்.ஐ.பி., சுங்கத் துறை, மாவட்ட ஆட்சியர் என பல உளவு - அரசுத் துறை அதிகாரிகள் விசாரணை நடத்தினர். எதற்கு? "அழைத்து வந்த மீனவர்கள் யார் என்றும் படகு நம்பர் பற்றியும் விசாரித்துக் கொண்டிருக்கிறோம். உண்மை தெரிந்தவுடன் முகாமுக்கு அனுப்பி விடுவோம்" என்கிறார் போலீசு அதிகாரி ரவீந்திரன்.

கடற்படை துணை ஆணையாளர் சதீஷ் குமார் சொல்கிறார், "1990-லிருந்து நம் கடற்படை இங்கே ரோந்து வருகிறது. இலங்கை பிரச்சினைக்காக போர்க் கப்பல்கள் அதிகம் வந்திருப்பதாக கூறுவது கற்பனை. எங்கள் ரோந்தின் முக்கிய நோக்கம் அதிகள் வருகையை தடுப்பது. ஒவ்வொரு மாவட்ட கலெக்டரும் தங்கள் மாவட்டத்திற்குட்பட்ட கடல் எல்லையில் அகதிகள் வருவதைத் தடுக்க வேண்டும் என்று முதல்வர் உத்திரவிட்டிருக்கிறார். அகதி என்ற போர்வையில் வருபவர்கள் டீசல் கடத்தல், மற்ற விஷயங்களை செய்கிறார்கள் என்பதால்தான்!

"கடந்த வருடம் மே மாதத்தில் 762 அகதிகள் வந்தனர். இந்த ஆண்டு அதை 287 ஆகக் குறைத்திருக்கிறோம். எங்களுடைய கண்காணிப்பு கடுமையாக இருப்பதால்தான் அகதிகள் ஐந்தாம் திட்டைத் தவிர்த்து மற்ற இடங்களில் வந்திறங்குகின்றனர். இதைத் தடுப்பதற்காக மீன்பிடி விசைப் படகுகளை வாடகைக்கு எடுத்து ஆழம் குறைவான பகுதிகளிலும் கண்காணிக்கிறோம். ஒவ்வொரு மீனவரின் டோக்கனையும் பரிசோதித்து கையெழுத்திட்ட பின்பே கடலுக்குள் அனுமதிக்கிறோம்" என்கிறார் கடற்படை அதிகாரி.

இதுதான் ஈழத் தமிழர்கள் மீது மத்திய, மாநில அரசுகள் காட்டும் கரிசனம். ஏதோ காஷ்மீர் எல்லைக்குள் ஊடுருவ முயலும் பாகிஸ்தான் "கூலிப்படை"யினரை வேட்டையாடுவதைப் போல, ஈழ அகதிகள் வேட்டையாடப்படுகின்றனர். இருந்தாலும் புலிகளின் தீவிர ஆதரவாளர்களான நெடுமாறனும், நந்தன் வழி அருணாச்சலமும் மத்திய, மாநில அரசுகள் ஈழத்தமிழருக்காக அக்கறைப்படுவதாகப் புளுகுகின்றனர்.




**நாடாளுமன்றத்தின் முன் பிரபாகரன் உருவப் படத்தை எரிக்கும் காங்கிரசு கட்சியினர்: வளர்த்த கடா மார்பில் பாய்ந்த கதை.**


படிப்பகம்

www.padippakam.com

இதற்கு என்ன காரணம்?

**இந்தியத் தயவை வேண்டுவது சரியா? ஏன்?**

ஒன்று, தன் தோலைப் பாதுகாத்துக் கொள்வதாக இருக்க வேண்டும்; அதாவது புலிகளை ஆதரித்து இங்கே பிரச்சாரம் செய்யும் பொழுது, தம்மையும் தாம் சார்ந்த அமைப்பையும் காத்து கொள்வதற்காக மத்திய அல்லது மாநில அல்லது இரண்டினதும் புகழ்பாடி, சமரசம் செய்து கொண்டு சந்தர்ப்பவாத அரசியல் நடத்த வேண்டும் என்று எண்ணுகிறார்களா?

இரண்டு, எட்டி உதைக்கும் கால்களையும் நக்கி எஜமான விசுவாசம் காட்டும் சில பிறவிகளைப் போல நடந்து கொண்டால், இந்திய அரசின் நம்பிக்கையையும் ஆதரவையும் பெற முடியும் என்று நம்புகிறார்களா?

மூன்று, இந்திய ஆளும் கூட்டணிக்குத் தலைமை வகிக்கும் பாரதீய ஜனதா - ஆர்.எஸ்.எஸ். இயக்கத்துக்கு என்று இலங்கை - ஈழப் பிரச்சினையில் ஒரு நிலைப்பாடும் கிடையாது; ராஜீவ் காந்தியைப் பற்றி இன்னமும் புலி ஆதரவாளர்கள் கூறி வருவதைப் போல, இந்திய அதிகாரவர்க்கமும், துக்ளக் "சோ", "இந்து" ராம் போன்ற புலி எதிர்ப்பாளர்களும் தரும் தவறான ஆலோசனைகளைக் கேட்டும், இலங்கை அரசின் சூழ்ச்சிகளுக்குப் பலியாகியும் இந்திய அரசு செயல்படுகிறது; உண்மை நிலைமையை எடுத்துச் சொன்னால் இந்திய அரசைச் சரியான - ஈழ ஆதரவு நிலைக்குக் கொண்டு வந்து விட முடியும்; அதற்காகத்தான் இந்திய அரசைப் பகைத்துக் கொள்ளாத வகையில் பேசவும் எழுதவும் வேண்டும் என்று நினைக்கிறார்களா?

நான்கு, தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் அணுகுமுறைக் கொள்கையே இது தானோ? அதாவது இந்திய அரசின் ஆதரவு அல்லது ஒப்புதல் இல்லாமல் தனி ஈழத்துக்கானபோரில் வெற்றி பெற முடியாது; அதற்காக என்ன விலை கொடுத்தாவது இந்தியாவின் ஆதரவு அல்லது ஒப்புதலைப் பெறுவது; அதுவும் முடியாவிட்டால் இந்திய அரசை நடுநிலைப்படுத்துவதற்காக அதன் பிராந்திய மேலாதிக்கத்தை ஏற்பது; தேவையானால் இந்திய அரசின் ஏவலாளாகக்கூட செயல்படுவது என்கிற ரீதியில் ஈழ விடுதலைப் புலிகளின் அரசியல் மூல உத்தி அமைந்திருக்கிறதா?

ஆம்; எல்லாமும்தான்! மேற்கண்ட எல்லாக் காரணங்களுக்காகவும் விடுதலை புலிகளின் இந்திய ஆதரவாளர்கள் மட்டுமல்ல, ஈழ விடுதலைப் புலிகளும் கூட இந்திய அரசைத் "தாஜா" செய்யும் வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

இன்று நேற்றல்ல; 1983 ஜூலை இனப் படுகொலையைத் தொடர்ந்து புலி பிரபாகரன் இந்தியாவில் தஞ்சம் புகுந்ததில் இருந்தே இந்தியாவின் ஆளுவோர் எவராயினும், அவர்கள் இந்திய, ஈழ மக்களின் கொடிய எதிரிகளாக இருந்தாலும் - "தாஜா" செய்யும் வேலையில்தான் ஈழ விடுதலைப் புலிகள் ஈடுபட்டிருந்தனர்.

பாசிச எம்.ஜி.ஆர். மற்றும் பாசிச இந்திரா - ராஜீவ் பரம்பரையை ஈழ விடுதலைப் புலிகள் வானளாவத் துதிபாடியதற்கு ஏராளமான ஆதாரங்களை அவர்களின் நூல்கள் - பத்திரிகைகளிலேயே காண முடியும். 1987-இல் ஈழத்தை ஆக்கிரமித்த இந்திய இராணுவம் புலிகள் மீது போர் துவங்குவது வரை, புலிகளிடமிருந்து ஆயுதப் பறிமுதல், ஆயுத சரணடைவு, டில்லி நட்சத்திர விடுதியில் வைத்து உருட்டி



"இந்தியாவுக்கு நாங்கள் எந்தவொரு பிரச்சினையையும் ஏற்படுத்த மாட்டோம்; இந்தியாவின் நெருக்கமான, உறுதியான பிராந்தியக் கூட்டாளியாக இருப்போம் என்பதைப் பிரகடனப்படுத்தும்படி எங்கள் தலைவரே எனக்கு அதிகாரமளித்திருக்கிறார்" என்று சென்ற ஆண்டு இலண்டனில் நடந்த மாவீரர் நாளில் ஆண்டன் பாலசிங்கம் அறிவித்தார்.

மிரட்டுவது என பலமுறை புலிகளின் கையை முறுக்கி காரியத்தைச் சாதிக்க ராஜீவ் முயன்ற போதும் இந்த "தாஜா" அரசியலிலேயே புலிகள் உறுதியாக நின்றனர். "இந்திய அமைதிப்படை" ஈழத்தில் அட்டூழியங்கள் பல புரிந்து, விரட்டியடிக்கப்பட்ட பின்னும் ராஜீவிடம் சமரசம் காணத் தூது அனுப்பினர்.

அமிர்தசரசு சீக்கியர் பொற்கோவிலைத் தாக்கி ஆயிரக் கணக்கானோரைக் கொன்றதன் விளைவாக இந்திரா கொல்லப்பட்டபோது, ஈழ விடுதலைப் புலிகள் உருகிப் போனார்கள். இந்திரா கொலையை ஒட்டி ஆயிரக்கணக்கான சீக்கியர்களை நாடு முழுவதும் படுகொலை செய்து பாசிச வெறிக் கூத்தாடிய இந்திராவின் வாரிசு ராஜீவுடன் விசுவாசமாக நடந்து கொண்டனர்.

பல பத்தாயிரம் ஜே.வி.பி. இயக்க இளைஞர்களையும், ஈழ மக்களையும் படுகொலை செய்த பிரேமதாசாவும், பிற பாசிச ஆட்சியாளர்களும் கொல்லப்பட்டனர். அதற்காக, இந்த சிங்கள வெறி ஆட்சியாளர்களுக்கு அனுதாபம் தெரிவிப்பது எப்படித் தவறாகுமோ அது போலத்தானே இந்திரா கொலையும். மக்கள் எதிரிகளை பிற இயக்கத்தினர் கொன்றால் அது கண்டனத்துக்குரியது, கண்ணீர் வடிக்க வேண்டும்; ஆனால் மக்கள், எதிரிகள் எனத்தான் கருதுபவர்களைப் புலிகள் கொல்லுவது இவர்களின் உரிமையாகும். அதேபோல தனக்கு எதிராக சிங்கள பாசிச பேரினவாதிகள் கட்டவிழ்த்து விடும் அரசு பயங்கரவாதம் மட்டுமே கொடியது; இந்திரா - ராஜீவ் - எம்.ஜி.ஆர். என தான் உறவு கொள்ள விழையும் பாசிஸ்டுகள் கட்டவிழ்த்துவிடும் அரசு பயங்கரவாதத்தைக் கண்டு கொள்ளக் கூடாது - இதுதான் ஈழவிடுதலை புலிகளின் நீதி - தர்மம்.

தற்போதைய இந்திய ஆட்சியாளர்களிடமும் இதே அணுகுமுறையைத்தான் ஈழ விடுதலைப் புலிகள் கடைப்பிடிக்கின்றனர். அதுவும், வைக்கோ, இராமதாசு போன்ற தமது தீவிர ஆதரவாளர்கள் இந்த ஆட்சியில் பங்கேற்பதால் நிச்சயம் ஈழத்தமிழர் ஆதரவு மற்றும் இலங்கை அரசு எதிர்ப்பு நிலையை வாஜ்பாய் அரசு மேற்கொள்ளும் என்று நம்பச் செய்கின்றனர்.

"முன்புகூட இந்தியாவுடன் மோதும் நோக்கம் விடுதலைப் புலிகளுக்கு உண்மையில் கிடையாது. இந்தியாவுடன் மோதுவதற்கு நாங்கள் என்ன பைத்தியமா? ராஜீவ் காந்திக்கு தவறான ஆலோசனை கொடுக்கப்பட்டதால் போர் அவசியமாகிவிட்டது. இந்தியாவைக் 'கடவுளாக' எண்ணிவந்த இலங்கைத் தமிழர்கள் அப்போரினால் பெரிதும் பாதிக்கப்பட்டனர். இப்போது இந்தியா தனது குறைபாடுகளையும் தவறுகளையும் உணர்ந்துவிட்டது.

"இப்போது புதிய ஆட்சியாளர்கள் வந்துவிட்டார்கள். இலங்கைத் தமிழர்களின் நலனில் அக்கறையுள்ளவர்கள் பா.ஜ.க. அரசின் அங்கமாக உள்ளனர். கொழும்பிலுள்ள சிங்கள அரசுக்கு ஆதரவாக இந்தியா இராணுவத் தலையீடு செய்யாது. இந்தியா ஒரு நட்பு சக்தி. தமிழீழம் அமைந்தால் அங்கு உதயமாகும் அரசு இந்தப் பிராந்தியத்தில் இந்தியாவின் மிகமிக நெருக்கமான கூட்டாளியாக இருக்கும். இந்தியாவின் வளையத்திலேயே அது சுழலும். இந்தியாவுக்கு நாங்கள் எந்தவொரு பிரச்சினையையும் ஏற்படுத்தமாட்டோம்; இந்தியாவின் நெருக்கமான, உறுதியான பிராந்திய கூட்டாளியாக இருப்போம் என்பதை வெளிப்படையாக உறுதி கூறுகி


படிப்பகம்

றேன். இதைப் பிரகடனப்படுத்தும்படி எங்கள் தலைவரே எனக்கு அதிகாரமளித்திருக்கிறார்'' என்கிறார் புலிகளின் ஆலோசகர் ஆண்டன் பாலசிங்கம்.

**இந்திய ஆட்சியாளர்கள்: புலிகளின் மதிப்பீடு என்ன? அணுகுமுறை என்ன?**

விடுதலைப் புலித்தளபதி பிரபாகரனை விடுங்கள்! அறிவுலக மேதை ஆண்டன் பாலசிங்கம் முதல் மணியரசன், தியாகு, சுபவீ, இன்னபிற அறிஞர்கள் வரை இந்திய அரசின் நலன்கள், அண்டை நாடுகளுடன் அதன் உறவு, உலகமயமாக்கலின் கீழ் இந்திய அரசின் சர்வதேசக் கொள்கை பற்றி என்னதான் ஆய்வு - மதிப்பீடு வைத்திருக்கிறார்கள்?

இங்கே மிக முக்கியமான கேள்வி என்னவென்றால் ஈழ விடுதலைப் புலிகளும் அவர்களுடைய ஆதரவாளர்களும் தயவு வேண்டி நிற்கும் இந்தியாவின் ஆளும் வர்க்கங்கள் அல்லது ஆளும் சாதிகள்/ இனங்கள் பற்றிய உண்மையான மதிப்பீடுதான் என்ன? குறிப்பாக முன்பிருந்த இந்திரா - ராஜீவ் கும்பலாக இருந்தாலும் சரி, இப்போதுள்ள பா.ஜ.க.-வின் வாஜ்பாயி - அத்வானி கும்பலாக இருந்தாலும் சரி - இவர்களுக்கென்று இலங்கை - ஈழப் பிரச்சினையின் மீது எந்தவித சுயநல நோக்கமும் கிடையாதா? அப்படி எதுவும் கிடையாது; இலங்கை சிங்கள பேரினவாத பாசிச ஆட்சியாளர்களின் சூழ்ச்சிக்கும் பார்ப்பன அதிகார வர்க்கம் மற்றும் அறிவு ஜீவுகளின் தவறான ஆலோசனைக்கும் பலியாகிறார்கள் என்பதை நம்ப முடியுமா?

இந்தியா போன்றதொரு ஜனநாயக நாடு, இன்னொரு ஜனநாயக, நட்பு நாட்டின் ஒற்றுமை - ஐக்கியம், இறையாண்மையை மதிக்கவும், காக்க உதவவும் வேண்டும் என்பதால்தான் இந்திய ஆளுவோர் இலங்கை அரசை ஆதரித்து, ஈழ விடுதலையை எதிர்க்கின்றனர் என்பது வெறும் பத்தாம் பசலித்தனமானதென்று புரியவில்லையா? இந்த தெற்கு ஆசிய பிராந்திய மேலாதிக்கமும், விரிவாக்கமும், துணை வல்லரசுப் பேராசையும், அகண்ட பாரதக் கனவும் இந்தியாவின் ஆளுவோருக்கு இல்லையா? இதற்கு இசைவாகவே இலங்கை - ஈழக் கொள்கையை இவர்கள் வகுத்துக் கொள்கிறார்கள் என்பது தெரியவில்லையா?

அப்படி இருக்கும்போது, இலங்கை அரசின் சிங்கள பேரினவாத, பாசிச அடக்குமுறைகளையும், ஈழத்தமிழர்களின் அவலங்களையும், ஈழ விடுதலைப் போரின் நியாயத்தையும், இவற்றோடு தனி ஈழம் அமைந்தால் இந்திய நலன்களுக்குத் துணையாகவே அது அமையும், இந்தியத் தமிழ்நாட்டுப் பிரிவினையைத் தூண்டாது என்று விளக்கினால், உறுதியளித்தால் இந்திய ஆட்சியாளர்களின் மனம் மாறி ஈழத்தமிழர் போராட்டத்தை ஆதரித்து விடுவார்களா?

(தொடரும்)

# வேலை வாய்ப்பு கானல் நீரானது

“என்ன மாதிரி ஆகாம, நல்லா படிச்சு முடிச்சு, வேலையைத் தேடிக்கிட்டு வாழ்க்கையில உருப்படுற வழியைப் பாரு...'' இப்படியொரு அறிவுரையை பெரும்பாலான இந்திய இளைஞர்கள் தங்களின் பெற்றோரிடமிருந்து கேட்டிருக்க/கேட்கவாய்ப்புண்டு.

குதிரைக் கொம்பைக் கூடத் தேடிக் கண்டுபிடித்து விடலாம். ஆனால், படித்த படிப்புக்கு ஏத்த நல்ல வேலையைத் தேடிக் கண்டுபிடிப்பது அத்துணை இலேசுபட்டதல்ல. அப்படிப்பட்ட வேலையும் படித்து முடித்த எல்லா இளைஞர்களுக்கும் நிச்சயம் கிடைத்து விடப் போவதுமில்லை.

பத்தாம் வகுப்பிற்கும், +2 கல்வித் தகுதிக்கும் இன்றைக்கு வேலைச் சந்தையில் பெரிய மதிப்பு எதுவும் கிடையாது. பி.எஸ்சி., பி.காம்., என்ன, பொறியியல் பட்டப்படிப்பு முடித்த இளைஞர்களுக்குக் கூட இன்றைக்கு படித்த படிப்புக்கு ஏற்ற, நல்ல, நிரந்தரமான வேலை கிடைத்துவிடுவதில்லை. நிச்சயமற்ற எதிர்காலம்தான் நமக்குக் காத்திருக்கிறது என்பது படிக்கும் இளைஞர்களுக்குத் தெரியாததல்ல. அதே சமயம், “மேல்படிப்பு படித்தால் கூட, வேலை கிடைப்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லையே'' என்பதனால் யாரும் படிப்பதை நிறுத்தி விடுவதில்லை. இந்தக் கசப்பான உண்மையைத் தெரிந்து கொண்டுதான் இந்திய இளைஞர்கள் முடிந்தவரை தங்களின் கல்வித் தகுதியை உயர்த்திக் கொள்கின்றனர்; வேலை தேடும் போட்டியிலும் குதிக்கின்றனர்.

“படித்த படிப்புக்கு ஏற்ற வேலையைத்தான் செய்வேன்” என்று வீம்பாக உட்கார்ந்து கொண்டு, உதவாக்கரை, தண்டச்சோறு என்று இன்னொரு பட்டம் வாங்கிக் கொள்வதைவிட, கிடைக்கும் ஏதாவது ஒரு வேலையைப் பிடித்துக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தையும், தேவையையும் வேலையில்லாத் திண்டாட்டம் படித்த இளைஞர்கள் மத்தியில் உருவாக்கிவிட்டது.

“இந்த வேலையெல்லாம் எழுதப் படிக்கத் தெரியாத கைநாட்டுதான் செய்வான்'' என்று ஒதுக்கப்பட்டிருந்த, சமூகரீதியில் தாழ்வாகக் கருதப்பட்ட வேலைகளில் கூட, இப்பொழுது படித்த இளைஞர்களைப் பார்க்க முடிகிறது. உதாரணத்திற்கு நமக்குப் பரிச்சயமான ஒன்றைச் சொன்னால், இப்பொழுது கௌரவமாக “செக்யூரிட்டி” என்று அழைக்கப்படும் “வாட்ச்மேன்” வேலை.


தெலுங்கு மொழி பேசும் “மாலா” சாதியைச் சேர்ந்த அரைகுறையாகப் படித்த தாழ்த்தப்பட்டவர்கள்தான் சென்னையில் நகரசுத்தித் தொழிலாளர்களாகப் பணியாற்றி வருகிறார்கள். பிற தாழ்த்தப்பட்ட சாதிகளைச் சேர்ந்தவர்கள்கூட இந்த வேலைக்கு வர விரும்பமாட்டார்கள் எனும்பொழுது, பிற மேல்சாதியினரைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது என்ற கதைதான். நிலைமை இப்படியிருக்க, சென்னையில் குப்பை அள்ளுவதை “காண்டிராக்டு” எடுத்திருக்கும் அந்நிய நாட்டு நிறுவனம், சமீபத்தில் குப்பை அள்ளுவதற்குப் பணியாளர்களை நியமிக்க நடத்திய நேர்முகத் தேர்வுக்கு, பல சாதிகளைச் சேர்ந்த படித்த இளைஞர்கள் முண்டியடித்துக் கொண்டு நின்றனர். என்னதான் அந்

**சமூக ரீதியில் தாழ்வாகக் கருதப்படும் குப்பை அள்ளும் வேலைக்கும் இன்றைக்கு போட்டா போட்டி: சென்னையில் குப்பை அள்ளும் தனியார் நிறுவனத்தில் சேரக் காத்திருக்கும் படித்த இளைஞர்கள்.**



www.padippakam.com

நிய நிறுவனம் நவீன முறையில் குப்பை அள்ளினாலும், அந்தத் தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு நமது சாதி சமூக அமைப்பு பெரிய அந்தஸ்த்தைக் கொடுத்து விடப் போவதில்லை. ஆனாலும், "புலிகளைக் கூடப் புல்லைத் தின்ன வைத்த'' வேலையில்லாத் திண்டாட்டத்தின் மகிமையை என்ன வென்பது?



**மணிப்பூர் தலைநகர் இம்பாலில் ரிக்ஷா ஓட்டிப் பிழைக்கும் பட்டதாரி இளைஞர்கள்: வேலையில்லாத் திண்டாட்டம் உருவாக்கியிருக்கும் அவலம்.**

மணிப்பூர் தலைநகர் இம்பாலில் ரிக்ஷா ஓட்டிப் பிழைக்கும் 6,000 ரிக்ஷா தொழிலாளர்களுள், பாதிப்பேர் படித்த இளைஞர்கள், "பட்டப் படிப்பு முடித்த பிறகு ஏகப்பட்ட நேர்முகத் தேர்வுகளுக்குப் போய் ஏமாந்து திரும்பியதுதான் மிச்சம்; இப்பொழுது என் வாழ்க்கையை ரிக்ஷா மிதித்துதான் ஓட்ட வேண்டியிருக்கிறது'' என்கிறார் திபக்ஜா சிங் என்ற பட்டதாரி ரிக்ஷா தொழிலாளி. 'தொழில் அதிபர்' என்ற போர்வையில் சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுவது, ''பி.ஆர்.ஓ'' என்று சொல்லிக் கொண்டு மாமா வேலை பார்ப்பதை விட, ரிக்ஷா ஓட்டிப் பிழைப்பது நாணயமானது, நேர்மையானது என்றாலும் கூட, இச்சமூக அமைப்பு அந்தத் தொழிலை, ரிக்ஷா தொழிலாளர்களைத் தாழ்வாகவே, சந்தேகக் கண்ணோடுதான் பார்க்கிறது. இதனால் இம்பாலில் ரிக்ஷா ஓட்டிப் பிழைக்கும் இந்த வேலையில்லாப் பட்டதாரிகள், சமூகத்தில் தங்களின் கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டிய நிர்பந்தம் காரணமாக, தங்களின் முகத்தைத் துணியால் மூடி மறைத்துக் கொள்கின்றனர்.

''உழைத்து வாழ வேண்டும்'' எனும் நோக்கில் படித்த இளைஞர்கள் தங்களின் வாழ்க்கைக்காகவும், குடும்பத்திற்காகவும் பல வகையான உதிரித் தொழில்களில் ஈடுபடுவது வரவேற்கக் கூடியதுதான் எனினும், இந்த நிரந்தரமற்ற, உத்திரவாதமற்ற, கைக்கும் வாய்க்கும் பத்தாத வருமானம் வரக்கூடிய இந்த வேலையைக் கொண்டு அவன் தனது எதிர்காலத்தை ஓட்டிவிட முடியுமா? படித்த படிப்புக்கு ஏற்ற, நிரந்தரமான வேலை கிடைக்காத இளைஞர்கள், தங்களது சொந்த முயற்சியால் தேடிக் கொள்ளும் இந்த உதிரித் தொழில்கள்தான் வேலையில்லாத் திண்டாட்டத்துக்குத் தீர்வா? மாணவர் அணி, இளைஞர் அணி என்று வைத்திருக்கும் ஓட்டுக் கட்சிகளிடத்தில், ''இளைஞர்கள் தான் வருங்காலத் தூண்கள்'' என்று குளிப்பாட்டும் ஆட்சியாளர்கள், அதிகாரிகளிடத்தில், இந்தப் பிரச்சினையைத் தீர்க்க ஏதாவது உருப்படியான யோசனை இருக்கிறதா? வேலையில்லாத இளைஞர்கள் மீது குறைந்தபட்ச அனுதாபமாவது காட்டுகிறார்களா?

தமிழகத்தைச் சேர்ந்த வேலையற்ற பட்டதாரி ஆசிரியர்கள், தங்களுக்கு நிரந்தர வேலை கோரி சென்னை அண்ணாசாலையில் ஊர்வலம் நடத்த முயன்ற பொழுது, தமிழக போலீசார் அவர்கலை அண்ணாசாலையில் ஊர்வலம் நடத்த அனுமதி மறுத்ததோடு, ஊர்வலத்தில் கலந்து கொள்ள வந்தவர்களை ஓடஓடத் துரத்தியடித்தனர். சினிமாக்காரன் பிரச்சினை என்றால் அதைத் தீர்க்க அரசு நிர்வாகத்தையே முடுக்கிவிடும் கருணாநிதிக்கு, பட்டதாரி ஆசிரியர்களின் கோரிக்கை மனுவை வாங்கிக் கொள்ளக்கூட நேரம் கிடைக்கவில்லை.

சென்ற ஆண்டு பீகாரிலுள்ள தார்பங்கா மாவட்டத்தில் இராணுவத்துக்கு ஆளெடுக்கிறார்கள் எனக்கேள்விப்பட்டு, ஆயிரக்கணக்கான இளைஞர்கள் தார்பங்கா நகரில் வந்து குவிந்தனர். இக்கூட்டத்தைக் கட்டுப்படுத்துகிறோம் என்ற பெயரில் போலீசு நடத்திய துப்பாக்கிச் சூட்டில், வேலை தேடி வந்த 23 இளைஞர்கள் குண்டடிபட்டு இறந்து போயினர்.

அலட்சியப்படுத்துவதும், அடித்து அவமானப்படுத்துவதும், வாய்ப்புக் கிடைத்தால் உயிரையும் பறிப்பதும்தான் வேலை தேடி அலையும் இளைஞர்களுக்கு அரசாங்கத்தின் பதிலா?

சமீபத்தில், மும்பய் நகரில் தனது வேலையற்ற மகனைக் கொலை செய்ய முயன்றதற்காக, வயது முதிர்ந்த தந்தையொருவர் கைது செய்யப்பட்டார். பீகாரில் வேலையற்ற இளைஞர்களைக் கொன்ற அரசு ''சட்டம் - ஒழுங்கை'' காரணமாகக் காட்டினால், இம்முதியவர்கூட தனது மகன் உதவாக்கரை என்று காரணம் கூறலாம். தண்டச் சோறு தின்கிறான் என்பதற்காக தனது மகனை அந்த முதியவர் கொல்ல முயன்றது சட்டப்படிக் குற்றம் எனும் பொழுது, அவரைக் கொலைகாரனாக மாற்றிய இந்தப் பிரச்சினையை - வேலையில்லா திண்டாட்டத்தைத் தீர்க்காமல் வளர்த்துவரும் ஆட்சியாளர்களுக்கு என்ன தண்டனை கொடுப்பது?

**வேலையில்லாமல் சுற்றிக் கொண்டிருந்த மகனைக் கொலை செய்ய முயன்றதற்காகக் கைது செய்யப்பட்ட முதியவர் (இடது ஓரம்).**



வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு அரசின் தொழில், பொருளாதாரக் கொள்கைகளும், முதலாளிகளின் இலாப வேட்டையும் தான் காரணம். தாராளமயமாக்கலின் பின் ஏற்கனவே வேலை பார்த்துவரும் தொழிலாளர்களும் வேலையில் இருந்து துரத்தியடிக்கப் படுவதால், இன்று வேலையில்லாத் திண்டாட்டம் பூதா


படிப்பகம்

www.padippakam.com

கரமாக வளர்ந்து நிற்கிறது.

உண்மை இப்படியிருக்க, தாராளமயம் இந்தியர்களின் முன்னேற்றத்திற்கு ஏராளமான வாய்ப்புகளையும், வசதிகளையும் ஏற்படுத்தித் தந்திருப்பதாகவும், அதைப் பயன்படுத்திக் கொண்டு, ஒவ்வொரு நாளும் புதிய புதிய இந்திய இலட்சாதிபதிகள் உருவாகிக் கொண்டே இருப்பதாகவும் பத்திரிகைகள் ஊதி விடுகின்றன. தாராளமயத்தால் திடீர்ப் பணக்காரர்களாகிவிட்ட ஒரு சிறு கூட்டத்தின் படத்தைப் போட்டு, திறமை இருந்தால், நீங்களும் இவர்களைப் போல முன்னேறி விடலாம் என்ற போலித்தனமான, மோசடித்தனமான நம்பிக்கையை மக்கள் மத்தியில் ஊன்றிவிடத் தொடர்ச்சியாக முயன்று வருகின்றன.

தாராளமயம் திறமைசாலிகளைப் பணக்காரர்களாக்கி விடுகிறதென்றால், தாராளமயத்தால் வேலையிழந்து / வேலை கிடைக்காமல் தங்கள் வாழ்க்கையை ஓட்டுவதற்காக "வாட்ச்மேனாக", ரிக்ஷா தொழிலாளியாக, அத்தக் கூலியாக இராப்பகல் பாராமல் உழைக்கும் கோடிக்கணக்கான இந்தியர்கள் திறமைகளற்ற ஆட்டு மந்தைகளா? அர்சத் மேத்தா போல "திறமை" இருந்தால், எல்லா இந்தியர்களுமே ஒரே நாளில் குபேரனாகி விடலாம். அப்படிபட்ட திறமைசாலிகளாகவா இந்திய இளைஞர்கள் வர வேண்டும்?

"அரசாங்கம் எல்லோருக்கும் வேலை போட்டுத் தர முடியுமா?" என்று மடக்குகிறார்கள் தாராளமயமாக்கலின் ஆதரவாளர்கள். மேலும், "அரசாங்க வேலைக்காகக் காத்திருப்பதே சோம்பேறித்தனம்" என்ற கருத்தைப் பரப்பி, குடிமகனுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தரும் கடமையை, அரசு கை கழுவி விடுவதில் வெற்றியும் பெற்று விட்டார்கள்.

அரசு, தனது எல்லாக் குடிமகன்களையும் அரசு ஊழியராக்க வேண்டிய தேவையில்லை; அது சாத்தியமும் இல்லை. ஆனால், வயதுக்கு வந்த ஒவ்வொரு குடிமகனுக்கும், அவரது கல்வித் தகுதி / தொழில் திறமைக்கு ஏற்ற நிரந்தரமான, உழைப்புக்கு ஏற்ற ஊதியத்தைத் தரக் கூடிய வேலை வாய்ப்பை உருவாக்கித் தரும் தொழில் - பொருளாதாரக் கொள்கைகளை வகுத்துச் செயல்படுத்துவது, அதனின் கடமையாகாதா? சமூகத்தின் பெயரால் குடிமகனிடமிருந்து வரி - வசூல் செய்யும் உரிமையை வைத்துக் கொண்டிருக்கும் அரசு, இந்தக் கடமையைக் கை கழுவி விடுவது மோசடித்தனமாகாதா?

படித்த, வேலையற்ற இந்திய இளைஞர்கள், "உழைக்கத் தயாராக இருக்கிறோம்; வேலை கொடு" என்று கோரிதான் போராடுகிறார்களேயொழிய, "சும்மாவே இருப்போம்; சோறு போடு" என்று கோரிப் போராடவில்லை. அரசிடம் வேலை கோரிப் போராடுவது சோம்பேறித்தனத்தின் வெளிப்பாடு அல்ல; நமது உரிமையின் வெளிப்பாடு!

● முத்து

## அடியாள் படைக்கு ஆளெடுப்பு மற்றதுக்கெல்லாம் கைவிரிப்பு

அரசின் செலவுகளைக் கட்டுப்படுத்துவது என்ற பெயரில் பொதுத்துறைகளுக்கும், அரசுத் துறைகளுக்கும் ஆளெடுப்பதைச் சுருக்கிக் கொண்டும், தடை செய்தும், ஆட்குறைப்பும் செய்து வரும் ஆட்சியாளர்கள், வருடந் தவறாமல் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., அதிகாரிகளைத் தேர்வு செய்யவும், ஆயிரக்கணக்கில் போலீசுக்கும், இராணுவத்திற்கும் ஆளெடுக்கவும் தவறுவதில்லை.

பொதுத்துறை நிறுவனங்களும், பெரும்பாலான அரசுத் துறைகளும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ நாட்டின் உற்பத்தியோடு தொடர்புடையவை. எனவே, இவ்விடங்களில் நியமிக்கப்படும் தொழிலாளர்களும் ஊழியர்களும் நாட்டின் செல்வத்தை உருவாக்க உழைப்பதால், அவர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளத்தையும், பிற சலுகைகளையும் வீண் செலவு என்றோ, அரசிற்கு நட்டம் ஏற்படுத்துவதாகவோ கூற முடியாது.

ஆனால், ஐ.ஏ.எஸ். அதிகாரிகளையும், போலீசையும், இராணுவத்தையும் உழைக்கும் தொழிலாளிகளாகக் கருத முடியுமா? அவர்கள் உழைத்து உருவாக்கிய ஒன்றையாவது இந்த நாட்டில் காட்ட முடியுமா? அதிகார மமதையோடு மக்களின் வரிப் பணத்தைத் தின்று கொழுப்பதுதான் அவர்களின் ஒரே வேலை.

போலீசுக்கும், இராணுவத்துக்கும் ஆளெடுப்பதை நிறுத்தி விட்டால், குற்றங்களை யார் தடுப்பது? சட்டம் - ஒழுங்கை யார் கட்டிக் காப்பது? நாட்டை எதிரிகளிடமிருந்து யார் பாதுகாப்பது? என்று அப்பாவி பொது மக்கள் கூட கேள்விகளைத் தொடுக்கலாம்.

ரௌடிக்கும், கள்ளச் சாராயம் காய்ச்சுபவனுக்கும், பிற சமூக விரோதிகளுக்கும் போலீசுக்கும் இடையே இருக்கும் உறவு நாம் அறியாததல்ல. இன்னும் சொல்லப் போனால் கிரிமினல் உலகின் பிரம்மாவே போலீசுதான். கொட்டடிக் கொலை, (பாலியல் வன்முறையில்) தேர்ந்த சட்டபூர்வ கிரிமினல் கும்பலாக போலீசே இருப்பதால், சட்டம் - ஒழுங்கை போலீசிடமிருந்து பாதுகாப்பது எப்படி என்பது தான் சிவில் சமூகத்தின் பிரச்சினை!

ஏகாதிபத்தியங்கள், உள்நாட்டுத் தரகு முதலாளிகள், நிலப்பிரபுக்கள், மேல்சாதி வெறியர்கள், இந்து மதவெறியர்கள் - இவர்கள்தான் இந்த நாட்டின், மக்களின் உண்மையான எதிரிகள். எந்தவொரு இராணுவ வீரனின் துப்பாக்கியும் இந்த எதிரிகளைக் குறி பார்த்துச் சுட்டதில்லை. ஆனால், மக்களின் உரிமைகளுக்காகவும், நல்வாழ்வுக்காகவும் போராடும் நக்சல்பாரி புரட்சியாளர்கள், தேசிய இனப் போராளிகளைத் தான் நர வேட்டையாடுகின்றனர்.

வறுமை, வேலையின்மை, வர்க்க - இன - மேல்சாதி ஒடுக்குமுறைகளை எதிர்த்துக் குமுறிக் கொண்டிருக்கும் இந்திய மக்களை அடக்கி ஒடுக்கி, தங்களின் அதிகாரத்தையும், சுரண்டலையும் பாதுகாத்துக் கொள்ள இந்திய ஆளும் வர்க்கத்திற்கு ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகளும், போலீசும், இராணுவமும் தேவை. அதனால்தான் பற்றாக்குறையைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல், போலீசுக்கும் இராணுவத்துக்கும் ஆயிரக்கணக்கில் ஆளெடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

போலீசும், இராணுவமும் ஊதிப் பெருகுவது, இந்திய மக்களை முழுமையான பாசிச ஆட்சியின் கீழ் அடக்கி ஒடுக்குவதற்கான முன் தயாரிப்பு; முன்னேற்பாடு. எனவேதான், போலீசுக்கும், இராணுவத்துக்கும் ஆளெடுப்பதை, ஏதோ ஒரு அரசாங்க வேலை என்ற வகையில் கருதி, ஆதரிக்க முடியாது; கூடாது என்கிறோம்.

**வேலையற்ற பட்டதாரி இளைஞர்கள் கேட்டதோ நிரந்தரமான வேலை. தமிழகப் போலீசு கொடுத்ததோ தடியடி!**





படிப்பகம்

www.padippakam.com

# தமிழ்நாடு சிமெண்ட்ஸ் மூடுவிழாவுக்கான தயாரிப்புகள்

தமிழ்நாடு சிமெண்ட்ஸ் (டான்செம்) என்ற அரசு நிறுவனம் தி.மு.க. ஆட்சியாளர்களின் தனியார்மய சதிகார நடவடிக்கைகளால் முடமாக்கப்பட்டு நிற்கிறது. தொழிலாளர்களின் எதிர்கால வாழ்வோ கேள்விக்குறியாகி விட்டது.

அரியலூரிலுள்ள அரசு சிமெண்ட் ஆலை, ஆலங்குளம் சிமெண்ட் மற்றும் ஆஸ்பெஸ்டாஸ் ஓடுகள் தயாரிக்கும் ஆலை, மாயனூர் சிமெண்ட் குழாய் தயாரிப்பு ஆலை, விருத்தாசலம் பீங்கான் தொழிற்சாலை என ஐந்து பிரிவுகள் அனைத்தும் தமிழ்நாடு சிமெண்ட்ஸ் (டான்செம்) என்ற ஒரே நிறுவனத்தின் கீழ் இயங்கி வருகின்றன.

எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில், அரசு சம்பந்தப்பட்ட பணிகளுக்கு தமிழக அரசு நிறுவனத்தின் ''அரசு சிமெண்ட்'' மற்றும் ''டான்செம்'' குழாய்களையே பயன்படுத்த வேண்டும் என்று 1985-இல் ஆணை பிறப்பிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் (TWAD) தமிழக அரசின் டான்செம் சிமெண்ட் குழாய்களையே பயன்படுத்த வேண்டும் என்று மற்றொரு ஆணையும் பிறப்பிக்கப்பட்டது.

ஜெயா ஆட்சிக் காலத்தில் இந்த ஆணையை நீக்காத போதிலும், நலிவடைந்த 65 அரசு நிறுவனங்களை தனியாருக்கு விற்க பரிந்துரைத்து அறிக்கை வெளியிடப்பட்டது. அதில்,டான்செம் நிறுவனமும் ஒன்றாகும். இதை எதிர்த்து, அன்று எதிர்க்கட்சியாக இருந்த தி.மு.க., டான்செம் நிறுவனத்தை தனியாருக்கு விற்கக் கூடாது என்று உயர் நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்து இடைக்கால தடை உத்தரவும் பெற்றது. தேர்தலுக்கு முன் திருச்சியில் நடந்த தி.மு.க. மாநாட்டில் ''காட் ஒப்பந்தத்தையும் புதிய பொருளாதாரக் கொள்கையையும் எதிர்ப்போம்! தனியார் மயமாக்கலை முறியடிப்போம்!'' என்று வீர தீர சவடால்களுடன் தீர்மானமும் நிறைவேற்றியது.

ஆனால், பதவியைப் பிடித்ததும் பிழைப்புவாத தி.மு.க. ஆட்சியாளர்கள் அரசு ஆணை எண். 75 (19.2.97) மற்றும் அரசு ஆணை எண்: 216 (18.8.97) ஆகிய இரு உத்தரவுகள் மூலம் அரசுத் துறைகள் தங்களுக்குத் தேவைப்படும் சிமெண்ட் மற்றும் குழாய்களை வெளிச் சந்தையில் வாங்கிக் கொள்ளலாம் என்று அறிவித்தனர். இதில் தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் (டான்செம்) குறைந்த விலைக்கு கொடுக்க இணங்கினால், 50% தேவையை ''டான்செம்''மிடம் பெற்றுக் கொள்ளலாம் என்றும் இதற்கு முன்பணம் செலுத்தாமல் கடனாகப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் அறிவித்தனர். டான்செம் நிறுவனத்தை திவாலாக்கி முடமாக்கி மேலும் நலிவடையச் செய்யும் கடைந்தெடுத்த அயோக்கியத்தனமான நடவடிக்கைதான் இது!

இதன் விளைவாக, இதர அரசுத் துறைகள் டான்செம்மிடம் சிமெண்ட் மற்றும் குழாய்களை மலிவு விலையில் கடனாகப் பெற்று ரூ. 27 கோடிக்கும் மேல் பாக்கி வைத்துள்ளன. பாக்கியை செலுத்தி டான்செம் நலிவடையாமல் காப்பாற்ற தி:மு.க. அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதனால் டான்செம் நிறுவனம் தொடர்ந்து நட்டப்பட்டதோடு, ஆலைக்குத் தேவையான நிலக்கரியை வாங்கக் கூட முடியாமல் ஒவ்வொரு பிரிவாக மூடப்பட்டு வருகிறது. அரியலூர் சிமெண்ட் ஆலையின் முதலாவது உலைப் பிரிவு ஜனவரியிலும், இரண்டாவது உலைப் பிரிவு பிப்ரவரியிலும் இவ்வாறு செயல்படாமல் முடங்கிவிட்டது.

அரியலூர் சிமெண்ட் ஆலையை முடமாக்கியது போதாதென்று, மாயனூர் குழாய் நிறுவனத்தில் இயங்கி வந்த 415 கிலோவாட் திறனுள்ள மின் உற்பத்திச் சாதனத்தை ஆலங்குளத்துக்கு எடுத்துச் செல்ல அரசு முயற்சிக்கிறது. இந்த மின் உற்பத்திச் சாதனம் (ஜெனரேட்டர்) இல்லாமல் ஆலையை இயக்க முடியாது என்று தலைமைக்கு தெரிவித்த மாயனூர் நிர்வாகப் பொது மேலாளரையும் இடமாற்றம் செய்துவிட்டனர். மின் உற்பத்திச் சாதனம் இல்லாமல் ஆலையின் உற்பத்தியை முடமாக்கி, மாயனூர் நிறுவனத்தையும் நட்டத்தில் தள்ளி மூடுவிழா நடத்த தி.மு.க. அரசு முயற்சித்து வருவதற்கான ஏற்பாடே இது.

அரியலூர் சிமெண்ட் ஆலைத் தொழிலாளர்கள் அ.தி.மு.க. சங்கத்தின் மூலம் போரடியதும், அரசியல் ஆதாயத்துக்காக தி.மு.க. அரசைச் சாடி ஜெயலலிதா பத்திரிகைகளில் அறிக்கை வெளியிடுவதும், ஜெயலலிதாவின் வாதங்களை மறுத்து அமைச்சர் ஆற்காடு வீராசாமி போட்டி அறிக்கை விடுவதுமாக இரு தரப்பும் லாவணி நடத்திக் கொண்டிருக்கின்றனர். ''டான்செம் ஆலகளை மூடமாட்டார்கள்; நட்டமாகி நலிவடைந்த ஆலையிலிருந்து வேறு ஆலைக்கு தொழிலாளர்களை மாற்றி விடுவார்கள். இதனால் தொழிலாளர்களின் வேலை பறிக்கப்படாது; அப்படியே டான்செம் நிறுவனத்தின் அனைத்து ஆலைகளையும் மூடிவிட்டால் விருப்ப ஓய்வுத் திட்டத்தின் மூலம் (VRS) நமக்கு ரூ. 5 லட்சம் வரை கிடைக்கும். எனவே கவலைப்பட வேண்டியதில்லை'' என்று ஓட்டுக் கட்சி - தொழிற்சங்க பிழைப்பு வாதிகள் எவ்வித போராட்டமுமின்றி முடங்கிக் கிடக்கின்றனர்.

இத்துரோகத்தனத்தை அம்பலப்படுத்தியும், மாயனூர் நிறுவனத்தை முடமாக்கி அரசு மேற்கொண்டுள்ள சதிச் செயல்களை எதிர்த்தும், தனியார்மயம் - தாராளமயம் என்ற பெயரில் நாடு மீண்டும் காலனியாக்கப்படுவதை விளக்கியும், மாயனூர் நிறுவனத்தின் முன்பாக இப்பகுதியில் இயங்கி வரும் புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணியின் சார்பாக, கடந்த ஜூன் 13-ந் தேதியன்று எழுச்சிமிகு வாயிற் கூட்டம் நடத்தப்பட்டது.

தனியார்மயக் கொள்கையின் மூலம் தொழிலாளர்களின் தலைக்கு கொள்ளி வைக்கப்பட்டுள்ள நிலையில், கருங்காலிகளான தி.மு.க. தொழிற்சங்க நிர்வாகிகள் பு.மா.இ.மு.வின் வாயிற் கூட்டத்தைத் தடுக்க பல வழிகளிலும் கேடாக முயற்சித்தனர். போலீசாரிடம் இக்கூட்டத்திற்கு அனுமதி தரக்கூடாது என்று மிரட்டியும் கெஞ்சியும் பார்த்தனர். அது சாத்தியமின்றிப் போகவே, தொழிலாளர்களிடம் ''இவர்கள் தீவிரவாதிகள், பயங்கரவாதிகள், சதிகாரர்கள்'' பீதியூட்டிப் பார்த்தனர். ஆனால் இந்த சலசலப்புகளை எல்லாம் தவிடு பொடியாக்கிவிட்டு, திட்டமிட்டபடி வாயிற்கூட்டம் சிறப்பாக நடந்தது. தொழிலாளர்கள் அனைவரும் இக்கூட்டத்திற்குத் திரண்டு வந்து ஆதரவளித்து, தொழிற்சங்கத் தரகர்களின் முகத்தில் கரி பூசினார்கள். நிதியுதவி அளித்து ஊக்கப்படுத்தியுள்ளார்கள். தொழிலாளர்களிடம் நம்பிக்கையையும் ஆதரவையும் பெற்றுள்ள பு.மா.இ.மு. அடுத்த கட்டப் போராட்டத்திற்கான பிரச்சாரப் பணிகளை முனைப்புடன் செய்து வருகிறது.

— புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி,
கரூர்.


படிப்பகம்

# உழவர் சந்தை அல்ல ஒட்டுப் பொறுக்கும் சந்தை

''இடைத்தரகு கொள்ளையரிடமிருந்து விவசாயிகளுக்கு விடுதலை! உற்பத்தி செய்த விவசாயியே தன்பொருளுக்கு விலையைத் தீர்மானிக்கும் உரிமை! பொதுமக்களுக்கோ மலிவு விலையில் பசுமை மாறாத காய்கறிகள்'' - என்ற பகட்டு விளம்பரத்துடன் தமிழக அரசு மாநிலம் முழுக்க உழவர் சந்தைகளை தொடங்கி வருகிறது. 100 சமத்துவபுரம் போல 100 உழவர் சந்தை என்ற இலக்கில் இதுவரை 28 உழவர் சந்தைகளைத் திறந்து வைத்துள்ளார் முதல்வர் கருணாநிதி!

விவசாயிகளுக்கு அடையாள அட்டை, சந்தைக்கு தனி பேருந்து, அதில் சுமைக்கட்டணம் கிடையாது! சந்தைக்குள் இலவச கடை, தராசு, நுழைவுவரி, கமிசன் எதுவுமில்லை! சில்லறைத் தட்டுப்பாட்டை குறைக்க, வருமானத்தைச் சேமிக்கத் தனி வங்கி! - எனக் கவர்ச்சிகரமான சலுகைகளைப் பார்த்த விவசாயிகள், ஏதோ ஒரு விடிவு உழவர் சந்தையில் வந்து இறங்கிவிட்டதாக நினைத்து ஓடினார்கள். ஓரிரு நாள் கழித்துதான் அது தோலுரிக்காத வெங்காயம் என்பதைப் புரிந்து கொண்டார்கள். இதோ விவசாயிகளின் நேரடி அனுபவத்தையே கேளுங்கள்!

''காலையில் 7 மணிக்கு காய்கறியுடன் சந்தையில் இருந்தாதான் மதியம் 2 மணிக்குள்ளே விக்கமுடியுது. அதனால முதல்நாள் சாயந்திரமே காய்கறிகளை பறித்து வெச்சாதான் சந்தைக்குப் போக முடியும். இப்படிக் கொண்டாந்தம்னா அடுத்த நாள் 10 மணிக்கெல்லாம் வாடிப் போகும். வாடின காயை யாரு நிர்ணய வெலைக்கு வாங்கு வாங்க?'' என்றார் ஒரு சிறுவிவசாயி.

''ஒருநாள் பூராவும் இங்க உட்காந்துக்கிட்டிருந்தா தோட்டத்து வேலைய யாரு பாப்பாங்க? நேத்து பகல் பூரா இங்க இருந்துபுட்டு ராத்திரி பூரா முழிச்சிருந்து தண்ணி பாய்ச்சினேன். இப்படி வருசம் பூரா இருக்க முடியுமா? இதெல்லாம் நமக்கு ஒத்துவராதுப்பா'' என்றார் ஒரு ஏழை விவசாயி.

''போன வாரம் பச்சப்புள்ள மாதிரி பீன்ஸ் கொண்டு போனேங்க. என்னய மாதிரியே 4 பேரு பீன்ஸ் கொண்டு வந்துட்டாங்க. 5 ரூபாய் கிலோனு விக்கச் சொன்னாங்க. ஆனா ஒருத்தனுக்கு ஒருத்தன் வேகமாக வித்துட்டு போகணும்னு 4, 3ரூபானு விக்க ஆரம்பிச்சிட்டாங்க. நானு வீம்பு பண்ணி 5 ரூபாய்னே வித்தேன். கடைசியில அரை மூட்டைக் காயி வாடிப் போச்சு. வேற வழியில்லாம 2 ரூபானு போட்டுட்டு வீடு வந்து சேர்ந்தேன்! கமிசன்கடையில போட்டிருந்தாலாவது 4 ரூபா விலை கெடச்சிருக்கும்!'' என்று புலம்புகிறார் ஒரு நடுத்தர விவசாயி.

இவ்வாறு விவசாயிகள் கொட்டித் தீர்க்க, இதுபற்றி நாம் நேரடியாக அலசியதில் வேறு பல பிரச்சினைகளும் தெரிய வந்தன.

1. உழவர் சந்தையில் மொத்த வியாபாரம் அனுமதிக்கப்படுவதில்லை. சில்லறை வியாபாரம் மட்டுமே உண்டு. எனவே, விவசாயி தான் விளைய வைத்த பொருள் முழுவதையும் விற்க வாய்ப்பே இல்லை.

உதாரணமாக, ஒரு விவசாயி ஒரு ஏக்கரில் முதல் அறுவடையில் 500 கிலோ பீன்ஸ் எடுக்கிறார் என்றால், சில்லறை வியாபாரத்தில் இதை விற்க 8 நாட்கள் சந்தையில் உட்கார வேண்டும். இதில் சுமார் 50 கிலோ வரை கழிவாக போய்விடும் (கமிசன் கடையில் இந்த சிக்கல் இல்லை. பல ஆயிரம் கிலோ கூட ஒரே நாளில் விற்று விடலாம்).

2. விவசாயிகள் விதையிலிருந்து உரம், பூச்சி மருந்து, அறுவடைக் கூலி வரை, கமிசன் கடைக்காரனிடம் கடன் வாங்கித் தான் விவசாயம் செய்கின்றனர். பிறகு விளைந்ததை அவன் மூலம் விற்றுத்தான் கடனைத் திருப்பிக் கட்டுகிறார்கள். மீண்டும் அடுத்த விவசாயத்துக்கு மீண்டும் கடன் வாங்குவதைத் தவிர வழியில்லை! இவ்வாறு விவசாயமே கமிசன் கடைக்காரன் தயவில்தான் நடக்கிறது. இந்த விசச் சூழலில் சிக்கிய ஒரு விவசாயி எப்படி உழவர் சந்தையில் வந்து சுதந்திரமாக விற்க முடியும்?

மேற்கண்ட காரணங்களால் ஒரு விவசாயி என்பவன் உழவர் சந்தையை முழுமையாகப் பயன்படுத்தவோ, கமிசன் மண்டி கொள்ளையிலிருந்து விடுதலை பெறவோ முடியவே முடியாது! பிறகு எப்படி உழவர் சந்தை நடக்கிறது என்கிறீர்களா? அதுதான் கருணாநிதியின் சாணக்கியத்தனம்!

### வியாபாரிகள் சந்தை

கருணாநிதியின் விளம்பரத்தில் மயங்கி உழவர் சந்தைக்கு ஓடிய விவசாயிகள் ஓரிரு நாளில், 'இது நமக்கு ஒத்து வராது' - என்று ஒதுங்கி விடுகிறார்கள். ஆனால், முதல்வரின் நேரடிக் கவனிப்புத் திட்டம் என்பதால் மாவட்ட ஆட்சியர்கள் நேரடியாகக் களத்தில் குதித்து வேளாண்மைத் துறை அதிகாரிகளை விரட்டுகிறார்கள்! பாவம், அவர்களோ, விவசாயிகளைத் தேடிப் பிடித்து கெஞ்சிப் பார்த்தும் பலனில்லாமல் போகவே, ஆங்காங்கு உள்ள தெருவோர வியாபாரிகள், சந்தை வியாபாரிகள், கமிசன் கடைச் சிப்பந்திகளைப் பிடித்து இழுத்து வருகிறார்கள்! இவர்கள் கொண்டு வரும் காய்கறிகளுக்கு அதிகாரிகளே அதிக விலை நிர்ணயம் செய்து தருகிறார்கள். நாள் முழுவதும் நாயாய் அலைந்து விற்பதற்குப் பதிலாக, நகரத்தில் உட்கார்ந்த இடத்தில் விற்றால் நாலுகாசு கூடுதலாக சம்பாதிக்கலாம்

**உழவர் சந்தையைத் தொடங்கி வைக்கும் கருணாநிதி: விவசாயிகளை ஏய்த்து ஒட்டுப் பொறுக்கும் புதிய உத்தி.**



www.padippakam.com

என்பதால் இவர்களும் உழவர் சந்தைக்கு வருகிறார்கள். ஒரு சில நேரங்களில் மொத்த வியாபாரத்தைவிட சில்லறை வியாபாரத்தில் இலாபம் கிடைக்கும் போது கமிசன் மண்டிக்காரர்களே, சிப்பந்திகள் மூலம் உழவர் சந்தையில் வியாபாரம் செய்கிறார்கள். இவ்வாறு உழவர் சந்தை என்பது படிப்படியாக வியாபாரிகளின் சந்தையாக மாறி விட்டது. இந்த வியாபாரிகளின் தயவில் தான் உழவர் சந்தையே நீடிக்கிறது.

### மலிவு விலையின் மர்மம்!

விவசாயியோ, வியாபாரியோ யார் விற்றால் என்ன? காய்கறி விலை, வெளிச்சந்தையை விட மலிவாகக் கிடைக்கிறது என்று நகரவாசிகள் உள்ளம் குளிர்ந்து போகின்றனர். மலிவு விலை என்பது உண்மைதான். ஆனால், விவசாயிகள் நேரடியாக தங்கள் பொருளை விற்பதால் (கமிசன் தொகை, இடைத்தரகர் இல்லாமல்) விலை குறையவில்லை; மாறாக, வியாபாரிகள், வேளாண்மை அதிகாரிகளின் 'இரகசிய நட்புறவினால்' தான் விலை குறைக்கப்படுகிறது!

வழக்கமாக, விவசாயி தன் விளைபொருட்களை கமிசன் கடை மூலம் விற்கும் போது, வியாபாரிகள் வந்து ஏலத்தில் விலை கேட்டு வாங்குவார்கள். இது பல இடைத்தரகர் கைமாறி நகரத்துக்கு வரும்போது யானை விலைக்குப் போய்விடும். இதனால்தான் கிராமத்தில் ஒரு கிலோ 2 ரூபாய்க்கு வாங்கிய தக்காளி, நகரத்தில் 8 ரூபாய்க்கு விற்கிறது. இம்முறையில் விவசாயிக்கும், நுகர்வோருக்கும் நட்டம்! ஆனால் வியாபாரிகளுக்கு மட்டும் இலாபம்!

இது உழவர் சந்தையில் எப்படி நடக்கிறது? தினசரி கமிசன் கடைகளில் என்ன விலைக்கு ஏலம் போகிறது என்று வேளாண்மை அதிகாரிகள் விசாரிக்கின்றனர். அதைவிட கிலோவுக்கு ஒரு ரூபாய் அல்லது 2 ரூபாய் கூடுதலாக விலையை நிர்ணயிக்கிறார்கள்! (பட்டர் பீன்ஸ், கேரட் போன்ற காய்கறிகளுக்கு மட்டும் வெளிச்சந்தையை விட 1,2 ரூபாய் குறைத்து நிர்ணயிக்கிறார்கள்)

'அதிக இலாபம் வைத்து குறைந்த அளவு பொருளை விற்பதை விட, குறைந்த இலாபம் வைத்து அதிக அளவு பொருளை விற்பதே அதிக வருமானம்' என்பதுதான் சில்லறை சந்தையின் சூத்திரம்! இதனால் தான் உழவர்சந்தை வியாபாரிகள் இதை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்கின்றனர். உழவர் சந்தையின் 'வெற்றி' இரகசியமும் இதுதான்!

### மலிவு விலையால் என்ன பலன்?

எது எப்படியோ, பொது மக்களுக்கு மலிவு விலையில் பச்சைக் காய்கறி கிடைக்கிறதல்லவா? என்று சில உடன்பிறப்புகள் வாதிடலாம். இந்த மலிவு விலைச் சரக்கு எத்தனை பேருக்கு போய்ச் சேருகிறது? ''மதுரையின் மக்கள் தொகை சுமார் 10 லட்சம். நகரத்தின் ஒருநாள் தேவையான காய்கறி சுமார் 350 டன்கள் (1 நபருக்கு 350 கிராம் வீதம்)'' என்று கருணாநிதி கணக்குச் சொல்கிறார். ஆனால், இங்குள்ள உழவர் சந்தையில் ஒருநாள் விற்பனை சராசரி 35-40 டன் தான்! இதுபோல கோவை, சேலத்தின் தினசரி தேவை 500 முதல் 600 டன் காய்கறி! இவ்வளவு தேவைகளையும் உழவர் சந்தை தீர்த்து விடுமா? ஒரு பெரிய நகரத்தின் 10-இல் ஒரு பங்கு மக்களுக்கு கூட உழவர் சந்தையின் மலிவு சரக்கு போய்ச் சேருவதில்லை. ஆனால், தமிழகமே உழவர் சந்தைக் காய்கறிகளால் பரிபூரண ஆரோக்கியத்துடன் செழித்துக் குலுங்குவது போல அரசு விளம்பரம் செய்கிறது!

உழவர் சந்தையினால் இடைத்தரகனிடமிருந்து உழவனை விடுதலை செய்கிறேன் என்று கூறும் கருணாநிதி, மறுபுறம் விவசாயியையும், விவசாயத்தையும் வல்லரசு நாடுகளுக்கு அடகு வைக்கும் திட்டத்தை விளம்பரமில்லாமல் செய்து வருகிறார். பா.ஜ.க. அரசின் தனியார்மயம், தாராளமயம், உலகமயம் என்ற தேசத்துரோக கொள்கையை அச்சுப் பிசகாமல் அமுல்படுத்துகிறார். கடனைச் செலுத்த முடியாத சிறுவிவசாயிகளிடம் கெடுபிடி, பணப்பயிர் ஏற்றுமதிக்கான பயிர்களுக்கு தாராளக் கடனுதவி, சலுகைகள், ஏற்றுமதியாகும் விளைபொருள்களுக்கு சென்னை விமான நிலையத்தில் நவீன குளிரூட்டும் அறை - நீர்பாசனத் திட்டங்களை தனியாரிடம் ஒப்படைப்பது, மின்மோட்டார்களுக்கு கட்டணம் விதிப்பது - என்று படிப்படியாக பலகோடி சிறுவிவசாயிகளைக் கழுத்தறுத்துக் கொண்டிருக்கும் கருணாநிதி அரசு, உழவர் சந்தை நாடகமாடி ஊரையும், உழவர்களையும் ஏய்த்து வருகிறது.

### உழவர் புரட்சியே உழவனை விடுவிக்கும்!

ஒரு ஏக்கர் 2 ஏக்கர் நிலமுள்ள, பொருளாதார வசதியற்ற சிறு விவசாயிகள்தான், காய்கறி பயிர் செய்து வருகின்றனர். இதுவும் கடன் முதலீட்டில் நடப்பதாலும், இடுபொருள் செலவுகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாலும், ஏறி இறங்கும் திடீர் விலை ஏற்றத்தாலும் சிறு விவசாயிகள் போண்டியாகி நிலத்தை விட்டே ஓடி வருகிறார்கள்!

இந்நிலையில், இவர்களை கடன் முதலீட்டிலிருந்து மீட்டு, சொந்தக்காலில் நிற்கச் செய்ய வேண்டும். இதற்குத் தாராளக் கடனுதவி கொடுப்பதோடு, காய்கறி உற்பத்திக்கு முக்கியத்துவமளித்து, மானிய விலையில் விதை, உரம், பூச்சி மருந்துகள் தரவேண்டும். முக்கியமாக, விளைவித்த பொருளுக்கு (உற்பத்திச் செலவுக்கேற்ப) விலையைத் தீர்மானிக்கும் உரிமை விவசாயிகளுக்கு வேண்டும். விவசாயிகள் தீர்மானித்த விலையில் உற்பத்திப் பொருட்கள் மக்களுக்குக் கிடைக்கும் வகையில் அதற்கேற்ற விநியோக முறையும் விவசாயிகளின், உழைக்கும் மக்களின் கையில் இருக்க வேண்டும். இதுதான் விவசாயிகளை இடைத்தரகர்கள், கமிசன் மண்டிக் கொள்ளையரிடமிருந்து மீட்டு, மக்களுக்கு மலிவு விலையில் காய்கறிகளும், உணவு தானியங்களும் கிடைக்கச் செய்யும் ஒரே வழியாகும்.

## உழவர் சந்தை: இன்னுமொரு "டப்பிங்" திரைப்படம்

உழவர் சந்தை என்பது கருணாநிதியின் மூளையில் உதித்த 'அற்புத'த் திட்டமல்ல! ஏற்கனவே பஞ்சாபில் 'அப்னி மண்டி' என்றும், ஆந்திராவில் 'ரஸ்து பஜார்' என்றும் செயல்பட்டு வரும் திட்டத்தின் அச்சுப்பிசகாத காப்பிதான் உழவர் சந்தை!

தமிழ்நாடு தொழில் வர்த்தக சபையின் தலைவர் ரத்தினவேல் என்பவர் தான் ஆந்திராவின் 'ரஸ்து பஜார்' போல தமிழகத்திலும் தொடங்க ஆலோசனை கூறியவர்! (விவசாயிகளுக்கு இலவச மின்சாரத்தை ரத்து செய்ய வேண்டும் என்று மாதம் தவறாமல் அறிக்கை வெளியிடுபவரும் இவர்தான். தமிழக தோட்டக் கலைத்துறை இயக்குனர் விக்ரம் கபூர் என்பவர் ''காபி, ரப்பர் போல காய்கறிகளுக்கும் தனிச் சந்தைப் படுத்தும்'' திட்டத்தை வலியுறுத்தி வந்தார்!

இந்த இருவரின் திரைக்கதை - வசனத்துடன், கருணாநிதியின் இயக்கத்தில் உருவான ''டப்பிங்'' திரைப்படம்தான் உழவர் சந்தை!

விவசாயிகளையும் உழைக்கும் மக்களையும் கொள்ளையடித்து வரும் நிலப்பிரபுக்களும் கமிசன் மண்டிக்காரர்களும், அதிகார வர்க்கத்தினரும் ஓட்டுக் கட்சியினரும் இதை ஒரு போதும் ஏற்க மாட்டார்கள். இது தங்களது சுரண்டலையும் ஆதிக்கத்தையும் வீழ்த்திவிடும் என்பதாலேயே இதற்கான போராட்டங்களை ஒடுக்கி, தமது கவர்ச்சிவாத அரசியல் ஆதாயத்துக்காக உழவர் சந்தைகளைக் காட்டி மாய்மாலம் செய்கிறார்கள். எனவே, விவசாயிகள் சங்கமாக அணிதிரண்டு தமது பகுதிகளில் புரட்சிகர விவசாயக் கமிட்டிகளை நிறுவுவதும், இத்தகைய விவசாயக் கமிட்டிகள் உற்பத்தி - விநியோகம், விலை நிர்ணயம் உள்ளிட்டு அனைத்து அரசியல் அதிகாரங்களையும் பெற, உழைக்கும் மக்களுடன் அணிதிரண்டு போராடுவதுதான் விவசாயிகள் விடுதலையடைவதற்கான ஒரே பாதையாகும்.

- விவசாயிகள் விடுதலை முன்னணி,
உத்தமபாளையம் வட்டம்.


படிப்பகம்

www.padippakam.com



## உயர்சாதி நிலப்பிரபுக்களின் கொலை வெறியாட்டம்

பீகாரின் அவுரங்காபாத் மாவட்டத்திலுள்ள மியாபூர் கிராமத்தில் கடந்த ஜூன் 16-ந் தேதியன்று ரன்வீர் சேனா எனும் சாதி வெறி நிலப்பிரபுக்களின் குண்டர்படை நடத்திய கொலை வெறியாட்டத்தால் அம்மாநிலமே அதிர்ச்சியில் உறைந்து போயுள்ளது.

ஏறத்தாழ 100 பேர் கொண்ட ரன்வீர் சேனா குண்டர்கள் அதிரடிப்படை சீருடையில் துப்பாக்கியுடன் வந்து நள்ளிரவில் மியாபூர் கிராமத்தைச் சுற்றி வளைத்து கண்மூடித்தனமாகத் துப்பாக்கிச் சூடு நடத்தினர். ஒவ்வொரு வீடாக நுழைந்து கண்ணில்பட்டவர்களையெல்லாம் சுட்டுக் கொன்றனர். வீட்டுப் பரணிலும், மாட்டுக் கொட்டகையிலும், நெற்குதிரிலும் பதுங்கியவர்கள் கூடத் தப்ப முடியவில்லை. 14 பெண்கள் 6 குழந்தைகள் உள்ளிட்டு 34 கூலி - ஏழை விவசாயிகளைச் சுட்டுக் கொன்று வெறியாட்டம் போட்ட இக்கும்பல், ''ரன்வீர் சேனா ஓங்குக!'' என்று முழக்கமிட்டுக் கொண்டே வெளியேறியுள்ளது.

உயர்சாதி பூமிகார் நிலப்பிரபுக்களின் குண்டர் படையான ரன்வீர் சேனா, பீகாரில் தடை செய்யப்பட்ட அமைப்பாகும். ஆனாலும், 1994-லிருந்து இன்றுவரை 20-க்கும் மேற்பட்ட பயங்கரவாத கொலை வெறியாட்டங்களை தாழ்த்தப்பட்டோர் மீது நடத்தியுளளது. ஏறத்தாழ 200-க்கும் மேற்பட்ட தாழ்த்தப்பட்ட கூலி விவசாயிகள் கடந்த நான்காண்டுகளில் இக்குண்டர் படையால் கோரமாகக் கொல்லப்பட்டுள்ளனர். ஆனால், முதன்முறையாக இப்போது, மியாபூரில் தாழ்த்தப்பட்டோரோடு பிற்பட்ட யாதவ சாதியினரும் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.



நெற்குதிருக்குள் ஒளிந்து கொண்டவர்களையும் சுட்டுக் கொன்ற கோரம்.

இந்தியாவில் அதிக மக்கள் தொகை கொண்ட இரண்டாவது மாநிலமான பீகாரில், பார்ப்பனர் - பூமிகார் - ராஜபுத்திரர் ஆகிய உயர் சாதி நிலப்பிரபுக்கள், தமது வர்க்க - சாதிய ஆளுமைக்கும் அதிகாரத்துக்கும் எதிராகச் சிறு சலனம் ஏற்பட்டால் கூடக் கொலைவெறித் தாக்குதலைக் கட்டவிழ்த்து விடுவது சர்வ சாதாரணமாக உள்ளது. இத்தகைய கொடுங்கோன்மைக்கு எதிராகத் தாழ்த்தப்பட்டோரையும் கூலி - ஏழை விவசாயிகளையும் பெருமளவில் திரட்டி நிலத்திற்காகவும் அரசியல் உரிமைக்காகவும் போராடி வருவது நக்சல்பாரி அமைப்புகள் மட்டும்தான். பெரும்பான்மையினர் கூலி - ஏழை விவசாயிகளாக உள்ள யாதவ சாதியினர் நக்சல்பாரிகளுடன் சேர்வதைத் தடுக்கவும், மிகக் குறைந்த எண்ணிக்கையில் உள்ள யாதவ சாதி நிலப்பிரபுக்களை தமக்கு ஆதரவாக நிறுத்தவும், உயர்சாதி நிலப்பிரபுக்கள் விடுத்துள்ள எச்சரிக்கைதான் மியாபூர் படுகொலைகள்.

இப்படுகொலைகளைக் காரணம் காட்டி ராப்ரி தேவியின் ஆட்சியைக் கலைக்குமாறு இந்துவெறி கூட்டணிக் கட்சிகள் கடையடைப்புப் போராட்டம் நடத்திக் கூப்பாடு போடுகின்றன. ''ஆட்சியை இழக்க நாங்கள் தயார்; ஆனால், உங்களால் படுகொலைகளை நிறுத்திவிட முடியுமா?'' என்ற ராப்ரி தேவியின் சவாலுக்கு இந்துவெறி கூட்டணி வாய் திறக்கவில்லை.

ஆட்சிக் கலைப்பினால் பீகாரில் தொடரும் நிலப்பிரபுக்களின் சாதிய - வர்க்கக் கொலை வெறியாட்டங்களை ஒருக்காலும் தடுத்து நிறுத்திட முடியாது. ஓட்டுக் கட்சிகளும் பத்திரிகைகளும் சித்தரிப்பதைப் போல இது வெறும் சட்டம் - ஒழுங்கு பிரச்சினை அல்ல; நிலப் பிரச்சினை. நிலத்திற்கும் ஜனநாயக உரிமைகளுக்கும் அரசியல் அதிகாரத்துக்குமான பிரச்சினை. நக்சல்பாரி புரட்சிகர அமைப்புகளுக்கும் நிலப்பிரபுக்களின் கொலைகார குண்டர் படைகளுக்கும் இடையே நடக்கும் சாதிய - வர்க்க மோதலை மூடிமறைத்து விட்டு, இப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண முடியாது. நிலச்சீர்திருத்தத்தையும் அரசியல் - ஜனநாயக உரிமைகளையும் நிலைநாட்டாமல், பீகாரில் ஒருபோதும் அமைதிஎ்ய நிறுவவும் முடியாது.

## கிறித்துவர்கள் மீது இந்து வெறியர்களின் இரண்டாவது சுற்றுத் தாக்குதல்

தேவாலயங்கள் மீது தாக்குதல், பைபிள் எரிப்பு, கன்னிகையர் மீது தாக்குதலும் பாலியல் வன்முறையும், ஒரிசாவில் பாதிரியாருடன் அவரது இரு குழந்தைகளும் உயிரோடு எரித்துப் படுகொலை என நாடெங்கும் வெறிக்கூத்தாடிய இந்துவெறி குண்டர்கள் இப்போது கிறித்துவ சிறுபான்மையினர் மீது இரண்டாவது சுற்றுத் தாக்குதலைக் கட்டவிழ்த்து விட்டுள்ளனர்.

உ.பி.யிலுள்ள மதுரா அருகே நவதா நகரில் கடந்த ஜூன் 7-ந் தேதியன்று புவுலோஸ் பள்ளி ஆசிரியரும் பாதிரியாருமான ஜார்ஜ் குழிகண்டம் குண்டாந்தடியால் அடித்தே கொல்லப்பட்டுள்ளார். அடுத்த சில நாட்களில் மதுராவில் கிறித்துவ கன்னிகையரை இரு சக்கர வாகனங்களில் வந்த இந்து வெறி குண்டர்கள் தாக்கியுள்ளனர். ஜூன் 8-ஆம் நாளன்று ஆந்திராவின் ஒங்கோல் நகரில் பழமை வாய்ந்த தேவாலயத்தில் நடந்த குண்டு வெடிப்பில் கண்ணாடி ஜன்னல்கள் சேதமடைந்து மூவர் படுகாயமடைந்தனர். அதே நாளில் ஆந்திராவின் மேற்கு கோதாவரி மாவட்டத்திலுள்ள தடபெள்ளிகுடம் எனும் சிற்றூரில் கத்தோலிக்க தேவாலயத்தில் நடந்த குண்டு வெடிப்பில் சொற்பொழிவு மேடை சிதைந்தது. இதே ஆந்திர மாநிலத்தில் மே 21-ந் தேதியன்று மசூலிப்பட்டினம் தேவாலயத்தில் நடந்த குண்டு வெடிப்பில் 30 பேர் படுகாயமடைந்தனர்.

ஜூன் 8-ஆம் நாளன்று, கர்நாடக மாநிலத்தின் குல்பர்கா மாவட்டத்திலுள்ள தொழில் நகரமான வாடியிலுள்ள கத்தோலிக்க தேவாலயத்தில் காலை 6 மணிக்கும் பின்னர் 9 மணிக்கும் அடுத்தடுத்து குண்டுகள் வெடித்தன. அதே ஜூன் 8-ஆம் நாளன்று கோவா மாநிலத்தின் வாஸ்கோ நகரில் ஆண்ட்ரு தேவாலயத்தில் குண்டு வெடிப்பு நடந்து இருவர் காயமடைந்துள்ளனர். இவை தவிர, பஞ்சாப் - அரியானா மாநிலங்களிலுள்ள இரு தேவாலயங்கள் மீது கல்லெறித் தாக்குதல்கள் நடந்துள்ளன. இத்தாக்குதல் நடந்த இடங்களில் இந்து வெறியூட்டும் பிரசுரங்களும் கிடந்துள்ளன.

இத்தனைக்கும் பிறகும், இவை இந்து வெறியர்களின் தாக்குதல் அல்ல; சமூக விரோதிகள் - கிரிமினல்கள் - கொள்ளையர்களின் தாக்குதல்தான் என்றும் பாகிஸ்தான் தீவிரவாதிகள் - ஐ.எஸ்.ஐ. உளவாளிகளின் சதிச் செயல் என்றும் ஆளும் பாரதீய ஜனதா கட்சி நாடகமாடுகிறது. விசாரணை அறிக்கைகள் கிடைத்ததும் பாரபட்சமின்றி குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்கிறார் பிரதமர்.

ஆனால், 1998-இல் குஜராத்தில் கிறித்துவர்கள் மீதும் தேவால


படிப்பகம்

www.padippakam.com



யங்கள் மீதும் இந்து வெறியர்கள் நடத்திய தாக்குதல் பற்றி நேரில் விசாரணை நடத்த சிறுபான்மையோர் ஆணையம் முயற்சித்தபோது, வறட்சி நிலைமையைக் காரணம் காட்டி பா.ஜ.க. ஆளும் குஜராத் மாநில அரசு அதைத் தட்டிக் கழித்துவிட்டது. இது ஒருபுறமிருக்க, சிறுபான்மையோர் தேசிய ஆணையம் சமர்ப்பித்த அறிக்கைகளில் ஒன்றைக் கூட பா.ஜ.க. அரசு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை. பாகிஸ்தான் உளவாளிகளின் கைவரிசைதான் இத்தாக்குதல் என்றால், நாட்டின் உளவுத் துறையை முடுக்கிவிட்டு நடவடிக்கை எடுக்காமல் தட்டிக் கழிப்பது ஏன் என்பதற்கு பா.ஜ.க. அரசு இதுவரை எவ்வித விளக்கமும் அளிக்கவில்லை.



ஆந்திர மாநிலம் தடபெள்ளிகுடத்தில் இந்துவெறியர்களால் குண்டுவீசித் தகர்க்கப்பட்ட தேவாலயப் பிரசங்க மேடை.

எல்லாவற்றுக்கும் மேலாக, விசாரணை நாடகமாடி வரும் இந்து வெறியர்கள், மதுராவில் நடந்த பாதிரியார் ஜார்ஜ் படுகொலைக்கு சாட்சியமாக இருந்த அவரது சமையற்காரர் விஜய் ஈக்கா என்பவரை போலீசு கொட்டடியிலேயே கொன்றொழித்துள்ளனர்.

இவையனைத்தும் சிறுபான்மை கிறித்துவர்கள் மீது இந்துவெறி குண்டர்கள் இரண்டாவது சுற்றுத் தாக்குதலைக் கட்டவிழ்த்துவிட்டுள்ளதையும், இவற்றை ஆளும் இந்துவெறி கூட்டணி அரசு மூடிமறைத்து திசை திருப்பி வருவதையும் மெய்ப்பித்துக் காட்டுகின்றன. இவ்வளவுக்கும் பிறகும், தனது பிறந்தநாள் விழாவில் பாதிரியார் எஸ்ரா சற்குணம் அணிவித்த ரஷ்யக் குல்லாயுடன் "பா.ஜ.க. ஆட்சியில் அப்படி என்ன மதவாதக் கொடுமைகள் நடந்துவிட்டது?" என்று கேட்டு, இந்து வெறியர்களுக்குப் பல்லக்கு தூக்கியுள்ளார், தமிழக முதல்வர் மு.க!

## அநியாய மின் கட்டண உயர்வு ஆந்திர மக்களின் போர்க்கோலம்

"ஹைடெக்" முதல்வர், தொழில்நுட்பத் துறையில் நாட்டை அடுத்த நூற்றாண்டுக்கு அழைத்துச் செல்லும் முன்னோடி என்று பத்திரிகைகளால் புகழப்பட்ட ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு மீதான மாயைகளைத் தகர்த்து, மின் கட்டண உயர்வுக்கு எதிராக அம்மாநில மக்கள் பெரும் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

உலக வங்கியின் உத்தரவுப்படி ஆந்திர மாநில மின்வாரியம் அரசின் கட்டுப்பாட்டிலிருந்து பிரிக்கப்பட்டு, சுயேச்சையான வாரியமாக மாற்றப்பட்டுள்ளது. ஆந்திர அரசு இப்புதிய மின்வாரியத்தின் முடிவுகளையும் செயல்பாடுகளையும் தட்டிக் கேட்கவோ, மாற்றியமைக்கவோ முடியாது. அதே சமயம் இம்மின்சார கட்டுப்பாட்டு வாரியம் உலக வங்கியைக் கலந்தாலோசிக்காமல், எந்த முடிவையும் அறிவிக்கவோ செயல்படுத்தவோ முடியாது. உலக வங்கியின் உத்தரவுப்படி ஆந்திர மாநில மின்சாரக் கட்டுப்பாட்டு வாரியம், மின் கட்டணங்களை 55% முதல் 265% வரை அநியாயமாக உயர்த்தியுள்ளது. இதன்படி ஒற்றை மின்விளக்கு கொண்ட குடிசை வீடுகளுக்கான மாதாந்திர சராசரி மின்கட்டணம் ரூ.20-லிருந்து ரூ. 72.50 பைசாவாக உயர்த்தப்பட்டுள்ளது. அதே சமயம் பெருமுதலாளிகளின் தொழிற்கூடங்களுக்கு 55% முதல் 67% வரைதான் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது. சிறு விவசாயிகள் பாசனத்திற்காகப் பயன்படுத்தும் மின்சாரத்திற்கு 100%-க்கும் மேலாகக் கட்டணம் உயர்ந்துள்ளது.

ஏற்கனவே வறட்சி; பூச்சிகளால் பயிர்பாதிப்பு; பருத்தி, கடலை, புகையிலை விலை வீழ்ச்சியால் பெருத்த நட்டம்; கந்து வட்டிக்காரர்களின் தொல்லை ஆகியவற்றால் நொந்து போயுள்ள விவசாயிகளை இந்த அநியாய மின் கட்டண உயர்வு ஆத்திரமடையச் செய்தது. மாநிலமெங்கும் விவசாயிகளும் உழைக்கும் மக்களும் தன்னெழுச்சியாகத் திரண்டு சாலை மறியல், ஆர்ப்பாட்டம், அமைச்சர்களை முற்றுகையிட்டு "கெரோ" செய்து விரட்டுவது எனப் போராட்டங்களில் குதித்தனர்.

விஜயவாடாவில் விவசாய அமைச்சர் தங்கியிருந்த பயணியர் விடுதியை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம் செய்த விவசாயிகள் அமைச்சரை ஓடஓட விரட்டியடித்தனர். அர்மூர் நகரில் தேசிய நெடுஞ்சாலையில் மறியல் செய்த விவசாயிகள் மீது போலீசு தடியடி தாக்குதல் நடத்தியதும், ஆத்திரமடைந்த விவசாயிகள் அரசுப் பேருந்துகளைத் தாக்கி முதல்வரின் கொடும்பாவியை எரித்தனர். ஆந்திராவின் எந்தப் பகுதிக்கும் எந்த அமைச்சர் சென்றாலும், விவசாயிகள் அவர்களை ஊருக்குள் நுழைய முடியாமல் விரட்டியடித்தனர். மைய அமைச்சரான பண்டாரு தாத்தாத்ரேயாவையும் விவசாயிகள் விடவில்லை. அவரைக் "கெரோ" செய்ததும் போலீசார் வந்து மீட்டுச் சென்றனர். பீதியடைந்த ஆந்திர முதல்வர், "கட்டண உயர்வை நாங்கள் அறிவிக்கவில்லை; இது மின் வாரியத்தின் முடிவு; எனினும் கட்டணத்தைக் குறைக்கச் சொல்லி நாங்கள் வலியுறுத்துகிறோம்" என்று நைச்சியமாகப் பேசிப் பார்த்தார். ஆனால், ஆந்திர மக்கள் இந்தப் பசப்பல்களை நம்பத் தயாராக இல்லை.

வாரங்கல் நகரில் ஒரு ஜோதிடர்கள் நடத்திய மாநாட்டில் கலந்து கொள்ளவந்த ஆந்திர மின்சாரக் கட்டுப்பாட்டு வாரியத் தலைவர் ராவ், பொதுமக்களால் முற்றுகையிடப்பட்டார். அவரது வாகனத்தை மறித்த பொதுமக்கள், "கட்டண உயர்வுக்கு உத்தரவிட்டது நீங்களா, உலக வங்கியா அல்லது முதலமைச்சரா?" என்று கேள்வி கேட்டுத் துளைத்தெடுத்தனர். பதில் கூற முடியாமல் விக்கித்து வியர்த்து நின்ற அவரை போலீசார் மீட்டுச் சென்றனர்.

ஆந்திர மக்களின் அதிருப்தியையும் தன்னெழுச்சியான போராட்டங்களையும் சாதகமாக்கிக் கொண்டு எதிர்த்தரப்பான போலி கம்யூனிஸ்டுகளும் காங்கிரசுக் கட்சியினரும் தமது அரசியல் ஆதாயத்திற்காக இப்போராட்டங்களுக்குத் தலைமை கொடுத்துத் தீவிரப்படுத்தி வருகின்றனர். ஆனால், இந்தக் கட்சிகள்தான் தாங்கள் ஆளும் மாநிலங்களில் தனியார்மயக் கொள்கையை விசுவாசமாக ஆதரித்து, உலக வங்கி உத்தரவுப்படி பேருந்து - மின் கட்டண உயர்வுகளைத் திணித்து வருகின்றன. இந்த உண்மைகளை உணரும்போது, ஆந்திர மக்கள் இன்றைய தெலுங்கு தேச ஆட்சியாளர்களோடு இந்தத் துரோகிகளையும் சேர்த்து நிச்சயம் விரட்டியடிப்பார்கள்.

ஜோதிட மாநாட்டில் கலந்து கொள்ள வந்த ஆந்திர மாநில மின் வாரியத் தலைவர் ஜி.பி. ராவைச் சூழ்ந்து கொண்டு மின் கட்டண உயர்வுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் பொதுமக்கள்.



www.padippakam.com

# தாழ்த்தப்பட்டோர் மீது தாக்குதல் பீகாருக்குப் போட்டியாக தமிழகம்

பறை - அது வெறும் இசைக் கருவி அல்ல; தாழ்த்தப்பட்ட சாதியினர் மட்டுமே அதைப் பயன்படுத்த வேண்டும். கோயில் திருவிழாவிலும் மேல் சாதியினரின் சவ ஊர்வலத்திலும் இழவுச் செய்தி அறிவிக்கும் போதும் தாழ்த்தப்பட்டோர் மட்டுமே அதை ஒலிக்க வேண்டும் என்கிற சாதிய அடக்குமுறையின் சின்னமாகவே அது இன்னமும் நீடிக்கிறது. தங்கள் மீது திணிக்கப்படும் இந்தத் தீண்டாமை இழிவை எதிர்த்து, தாழ்த்தப்பட்டோர் தப்படிக்க மறுத்தால் அவர்கள் மீது மேல்சாதிவெறியர்கள் தாக்குதலைக் கட்டவிழ்த்து விடுவார்கள்.

இது ஏதோ ஒரு நூற்றாண்டுக்கு முன்பு நடந்த தீண்டாமை கொடுமை அல்ல; இன்னமும் தமிழகத்தில் தொடரும் கொடுமை! ஆறாண்டுகளுக்கு முன்பு தஞ்சை அருகிலுள்ள குருங்குளம் கிராமத்தில் ம.க.இ.க. தோழர் குருமூர்த்தி இச்சாதிய இழிவுக்கு எதிராகப் போராடியதற்காக கள்ளர் சாதி வெறியர்களால் அவரது கட்டைவிரல் வெட்டியெறியப்பட்ட கொடுமை நடந்தது.

அதே வழியில் செங்கிப்பட்டி அருகே புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள தெம்மாவூரில் தப்படிக்க மறுத்த தாழ்த்தப்பட்டோர் மீது, கடந்த மே மாதத்தில் மேல்சாதி வெறியர்கள் மிருகத்தனமான தாக்குதலை நடத்தியுள்ளனர். இதில் 7 பெண்கள் உட்பட 30-க்கும் மேற்பட்ட தாழ்த்தப்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். அரிவாள் வெட்டு, இரும்புத் தடி தாக்குதலால் பலருக்கு உடலெங்கும் எலும்பு முறிந்துள்ளது. தாழ்த்தப்பட்டோரின் 36 குடிசை வீடுகள் இடித்து நொறுக்கப்பட்டு அவர்களது அற்ப உடமைகளும் மேல்சாதி வெறியர்களால் சூறையாடப்பட்டுள்ளன. இக்கொலைவெறித் தாக்குதலால் உயிருக்கு அஞ்சி தப்பியோடிய தாழ்த்தப்பட்ட மக்களில் பலர் இன்னமும் தெம்மாவூருக்கு திரும்பி வரவேயில்லை.

தெம்மாவூரின் மொத்த மக்கட் தொகையில் ஆறில் ஒரு பங்கினராக தாழ்த்தப்பட்ட சாதியினர் - ஏறத்தாழ 500 பேராக உள்ளனர். இவர்கள் அனைவருமே கூலி விவசாயிகளாவர். தெம்மாவூரிலுள்ள மாரியம்மன் கோயிலிலும், காளியம்மன் கோயிலிலும் ஆண்டுதோறும் திருவிழா நடக்கும். இத்திருவிழாவில் தாழ்த்தப்பட்ட சாதியினர் கட்டாயமாகத் தப்படிக்க வேண்டும் என்பது மேல்சாதியினர் விதித்துள்ள கட்டளை. ஆனால் இச்சாதிய இழிவை எதிர்த்து, கடந்த நான்காண்டுகளாக தப்படிக்க மறுத்து தாழ்த்தப்பட்டோர் போராடி வருகின்றனர். இதனால் ஆத்திரமடைந்து மேல்சாதி வெறியர்கள் தாழ்த்தப்பட்டோருக்கு பல வழிகளிலும் தொல்லைகள் கொடுத்த சம்பவங்கள் ஏராளம். ஒவ்வொரு ஆண்டும் திருவிழா சமயத்தில் இது உக்கிரமடைந்து கைகலப்பும் மோதல்களும் நடப்பதும், பின்னர் போலீசு குவிக்கப்பட்டு பதற்றம் தணிக்கப்படுவதும் ஆண்டுதோறும் வழமையாக நடந்து வருகிறது.

இவ்வாண்டு கோயில் திருவிழாவில் கட்டாயம் தப்படிக்க வேண்டும் என்று மேல்சாதி வெறியர்கள் மிரட்டியதைத் தொடர்ந்து, தாழ்த்தப்பட்டோர் வட்டாட்சியர் மற்றும் போலீசாரிடம் முறையிட்டதன் பேரில் வருவாய்த்துறை அதிகாரி மற்றும் வட்டாட்சியர் முன்னிலையில் கடந்த ஏப்ரல் 15,25 தேதிகளில் 'சமாதான'க் கூட்டம் தெம்மாவூரில் நடந்தது. அதில், திருவிழாவில் தாழ்த்தப்பட்டோரை தப்படிக்கக் கட்டாயப்படுத்தக் கூடாது. திருவிழாப் பணிகளை தாழ்த்தப்பட்டோரும் செய்ய வேண்டும் என்று முடிவாகியது. இதர சாதிய அடக்குமுறை, தொல்லைகள் பற்றி திருவிழா முடிந்த பிறகு பரிசீலிப்பது என தீர்மானிக்கப்பட்டது.

ஆனால் இச்'சமாதான'க் கூட்டம் முடிந்தவுடனேயே "தாழ்த்தப்பட்டோர் தப்படிக்காவிட்டால், திருவிழாவில் அவர்களை அனுமதிக்க மாட்டோம்; திருவிழா முடிந்ததும் அவர்களைக் கவனித்துக் கொள்வோம்" என்று சாதி வெறியர்கள் வெளிப்படையாகவே மிரட்டி வந்தனர். தாழ்த்தப்பட்டோருக்கு ஆதரவாக நின்ற ஒரு மேல்சாதி பெட்டிக்கடைக்காரரை அடித்து, அக்கடையை மூடச் செய்து சாதி வெறியர்கள் எச்சரிக்கை விடுத்தனர்.

இப்பதற்றமான நிலைமையில் கோயில் திருவிழா மே 17-ந் தேதியன்று நடந்தது. தாழ்த்தப்பட்டோருக்குப் பல வழிகளிலும் அச்சுறுத்தல் வந்ததால் அவர்கள் திருவிழாவில் பங்கேற்காமல் புறக்கணித்தனர். திருவிழாவன்று தெம்மாவூரில் போலீசு பாதுகாப்பும் போடப்பட்டது. மாலை 5 மணிக்கு திருவிழா முடிந்து போலீசு வெளியேறியதும், தாழ்த்தப்பட்டோருக்கு ஆதரவாக இருந்த பெட்டிக்கடைக்காரரை இரும்புத் தடியால் தாக்கி வீதியில் வீசியெறிந்த சாதி வெறியர்கள், தாழ்த்தப்பட்டோர் குடியிருப்பு பகுதியில் நுழைந்து கண்ணில்பட்டவர்களையெல்லாம் மிருகத்தனமாகத் தாக்கி வெறியாட்டம் போட்டனர். "பள்ளு பற நாய்ங்களுக்கு திமிரு அதிகமாயிடுச்சு; உங்க திமிர அடக்காம ஓயமாட்டோம்!" என்று முதியோர், பெண்கள், குழந்தைகளைக் கூட அரிவாள், உருட்டுக் கட்டைகளால் கண்மூடித்தனமாகத் தாக்கினர். குடிசைகளை இடித்து கூரைகளைப் பிய்த்தெறிந்தனர். உணவு பண்ட பாத்திரங்களை எட்டி உதைத்து நாசப்படுத்னர். தகரப் பெட்டிகளை உடைத்து துணிமணிகள் முதல் தாலி, மூக்குத்தி முதலான நகை நட்டுக்களை, நெல், கடலை மூட்டைகளையும் சூறையாடியுள்ளனர்.

தப்படிக்க மறுத்த 'குற்ற'த்திற்காகத் தாழ்த்தப்பட்டோர் மீது மேல்சாதி வெறியர்கள் நடத்திய தாக்குதலில் படுகாயமடைந்த முதியவர் சின்னையா மற்றும் ஜோதிமணி.






படிப்பகம்

www.padippakam.com

இச்சாதிவெறித் தாக்குதலை மூடிமறைத்து "இரு கோஷ்டிகளுக்கிடையிலான மோதல்" என்று வழக்கம் போலவே பத்திரிகைகள் சித்தரித்தன. இப்பகுதியின் 'மார்க்சிஸ்ட்' கட்சி புகார் கொடுத்த பிறகு ஒரு சில சாதிவெறி குண்டர்கள் மட்டும் கைது செய்யப்பட்டுள்ளனர். ஆனாலும் சாதிவெறியர்கள் கையில் வெட்டரிவாளோடு வெளிப்படையாகவே ஊரில் அலைந்து கொண்டு அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றனர்.

இதர தென்மாவட்டங்களைப் போலவே புதுக்கோட்டை மாவட்டமும் வறுமை பீடித்த வறண்ட பின்தங்கிய மாவட்டம்தான். இம்மாவட்டத்திலிருந்து பலர் பிழைப்புக்காக பிற மாவட்டப் பெருநகரங்களுக்குச் சென்று விடுகின்றனர். பொங்கல் மற்றும் ஊர்க்கோயில் திருவிழாவின்போது மட்டுமே அவர்கள் ஆண்டுக்கொருமுறை தமது கிராமங்களுக்கு வந்து செல்கின்றனர். கோயில் திருவிழாக்களை உள்ளூர் சாதிவெறியர்கள் தமது பலத்தைக் காட்டி ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்கான சாதனமாகவே பயன்படுத்தி வருகின்றனர். ஆண்டு முழுவதும் கேட்பாரற்றுக் கிடக்கும் கோயிலுக்குத்திருவிழாவை முன்னிட்டு தடபுடலாக ஏற்பாடு செய்வது, பிழைப்புக்காக வெளியூரில் தங்கி, திருவிழாவை முன்னிட்டு ஊருக்கு வரும் புதிய தலைமுறையினரிடம் "நம்ம ஊரு திருவிழா" என்று பல்லாயிரக் கணக்கில் வசூல் வேட்டை நடத்தி ஆடம்பரமாக விழாவை நடத்தி சாதியப் பெருமைகளை நிலைநாட்டுவது, தாழ்த்தப்பட்ட சாதியினரை இன்னும் மூர்க்கமாகவும் கொடூரமாகவும் ஒடுக்குவது, இதற்குத் துணையாக சாதிவெறி சங்கங்களில் அணிதிரண்டு குண்டர்படையோடு சாதியத் தலைவராக வலம் வருவது - என்பதாக சாதிவெறியர்கள் புதிய உத்திகள், புதிய வழிமுறைகளுடன் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டி வருகின்றனர். அதற்கான சாட்சியம்தான் தெம்மாவூரில் தப்படிக்க மறுத்த தாழ்த்தப்பட்டோர் மீது திருவிழாவின் போது சாதிவெறியர்கள் கட்டவிழ்த்து விட்டுள்ள தாக்குதல்.

அடுத்து வரும் தேர்தலைக் குறிவைத்து, தமது சாதிய பலத்தைக் காட்டி ஓட்டுக் கட்சிகளிடம் பேரம் பேசி ஆதாயம் தேட சாதிவெறியர்கள் திட்டமிட்டே இத்தகைய தாக்குதல்களைக் கட்டவிழ்த்து விடுகின்றனர். ஓட்டுக் கட்சிகளும் ஏற்கனவே கொள்கை - லட்சியங்களைக் கைவிட்டு ஓட்டு வங்கிக்களாக சாதிவெறியர்களிடம் சரணடைந்து விட்டன. எனவே ஓட்டுக்கட்சிகளைப் புறக்கணித்து, பறையடிப்பது உள்ளிட்டு அனைத்து தீண்டாமைக் கொடுமைகளுக்கும் எதிராக, தாழ்த்தப்பட்டோருடன் அனைத்து உழைக்கும் மக்களும் ஒன்றிணைந்து போராடுவதும், சாதிவெறியர்களைத் தனிமைப்படுத்தி முறியடிப்பதுமே இன்றைய அவசியமாக உள்ளது.

● முருகன்

*நிலச் சீர்திருத்தப் பிரச்சினை:*

# கருப்பின விவசாயிகள் கற்றுத் தரும் பாடம்

**நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் காகிதச் சட்டங்களால் நிலச்சீர்திருத்தத்தை அமலாக்கிவிட முடியாது என்பதை ஜிம்பாப்வேயின் அனுபவம் மீண்டுமொருமுறை நிரூபித்துவிட்டது.**

ஆப்பிரிக்க கண்டத்தின் தென்பகுதியில் அமைந்துள்ள ஜிம்பாப்வே நாட்டின் ஏழை கறுப்பின விவசாயிகள், காலனிய ஆட்சியைப் பயன்படுத்திக் கொண்டு வெள்ளை இனத்தவர் அபகரித்துக் கொண்ட தங்களது நிலங்களை, அவர்களிடமிருந்து மீளக் கைப்பற்றும் நிலப்பறி இயக்கத்தை நடத்தத் தொடங்கியுள்ளனர். "ஜிம்பாப்வே விடுதலைப் போராட்ட வீரர்கள் சங்கம்" எனும் அமைப்பின் தலைமையில் கடந்த நான்கு மாதங்களாக மிகத் தீவிரமாக நடைபெற்று வரும் இப்போராட்டத்தின் மூலம், கறுப்பின விவசாயிகள் கிட்டதட்ட 1,000 பண்ணைகளை மீளக் கைப்பற்றிக் கொண்டுள்ளனர்.

ஜிம்பாப்வே நாட்டின் ஆளுங் கட்சியான "ஜானு - பி.எஃப்."ம், அக்கட்சியின் தலைவரும், நாட்டின் அதிபருமான ராபர்ட் முகாபேயும் கறுப்பின விவசாயிகள் நடத்தி வரும் நிலப்பறி இயக்கத்தை வெளிப்படையாக ஆதரிக்கின்றனர். அதேசமயம், அந்நாட்டின் நீதிமன்றம் விவசாயிகளின் போராட்டத்தை சட்ட விரோதமானதென்றும், கைப்பற்றப்பட்ட பண்ணைகளை, மீண்டும் வெள்ளை இனத்தைச் சேர்ந்த பண்ணை முதலாளிகளிடம் ஒப்படைத்து விட வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளது. வெள்ளை இனப் பண்ணை அதிபர்களும், அவர்களின் எடுபிடியான "சனநாயக மாற்றத்திற்கான இயக்கம்" எனும் அமைப்பும், நகர்ப்புறத்து கறுப்பினநடுத்தர வர்க்கத்தினரும், கறுப்பினமுதலாளிகளும், நிலத்திற்காக விவசாயிகள் நடத்திவரும் இந்தப் போராட்டத்தை அராஜகம் என்றும் நாட்டில் சட்டம் - ஒழுங்கு கெட்டுக் கிடப்பதன் அறிகுறி என்றும் கூறி, அவதூறு செய்து வருகின்றனர்.

ஜிம்பாப்வே கறுப்பின விவசாயிகளின் போராட்டம், இருபது ஆண்டுகளுக்கு முன்புவரை அந்நாட்டை அடிமைப்படுத்தி ஆண்டு வந்த இங்கிலாந்தின் ஆளுங்கும்பலையும் உலுக்கி எடுத்துள்ளது. இங்கிலாந்தும், ஐரோப்பியக் குழும நாடுகளும், அமெரிக்காவும் இந்த நிலப்பறி இயக்கத்தைக் கண்டித்தும், எச்சரித்தும் வருகின்றன.

ஜிம்பாப்வே நாட்டின்வெள்ளை இனப் பண்ணை அதிபர்கள், விவசாயிகளின் போராட்டத்தை எதிர்ப்பதை நாம் புரிந்து கொள்ள முடியும். ஆனால், 'சுதந்திரமும்', 'சுயாதிபத்தியமும்' உடைய ஜிம்பாப்வே நாட்டின்உள்நாட்டுப் பிரச்சினையில் மேற்குலக நாடுகள் ஏன் தலையிட வேண்டும்? இதன் காரணம், ஏகாதிபத்தியங்களின் வெள்ளை இனப் பாசம் - நிறவெறி மட்டுமல்ல; அவர்களின் மறுகாலனியாதிக்க நோக்கமும் இதில் அடங்கியிருக்கிறது. எனவே, இந்தியா போன்று நிலச்சீர்திருத்தம் அமலாக்கப்படாத, ஏகாதிபத்தியங்களால் மறுகாலனியாக்கப்பட்டு வரும் நாடுகளின் விவசாயிகள், ஜிம்பாப்வே விவசாயிகள் நடத்தி வரும் நிலப்பறி இயக்கப் போராட்டத்தின் நியாயத்தை, அவசியத்தைப் புரிந்து கொள்வதும், ஆதரவளிப்பதும் அவசியமாகிறது.

* * *

பிரிட்டிஷ் காலனியாதிக்கவாதிகள் ஜிம்பாப்வேயை அடிமைப்படுத்தி ஆண்ட வரலாறு, ஏறத்தாழ இந்தியா காலனியாக்கப்பட்டதை ஒத்ததாகவே இருக்கிறது. 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஜிம்பாப்வேயினுள்நுழைந்த சிசில் ரொடிஸ் என்ற ஆங்கிலேயனுக்குச் சொந்தமான பிரிட்டிஷ் - தென் ஆப்பிரிக்க கம்பெனி, ஜிம்பாப்வே நாட்டில் வாழ்ந்து வந்த அனைத்து இனக் குழுக்களின் தலைவனும், அரசனுமான லொபென்குலா என்பவரிடம் 1888-ஆம் ஆண்டில் ஓர் ஒப்பந்தம் போட்டுக் கொண்டு, பெருவாரியான நிலங்களைக் கையகப்படுத்திக் கொண்டது. இந்த நிலங்களில் சுரங்கம் அமைத்து, தங்கத்தைத் தோண்டியெடுப்பது தான் சிசில் ரொடிசின் நோக்கமாக இருந்தது.

ஆனால், அவன் எதிர்பார்த்த அளவிற்குத் தங்கம் கிடைக்காததால், கருப்பின மக்களுக்குச் சொந்தமான நிலத்தை, வெள்ளையர்களுக்குக் கூறுபோட்டு விற்கத் தொடங்கினான். ஒரு ஏக்கர் வளமான நிலம் வெறும் மூன்று ஷில்லிங்களுக்கும், (கிட்டதட்ட 36 பைசா என்று கொள்ளலாம்) ஒரு ஏக்கர் வளம் குறைந்த நிலம் எட்டரை பென்சுக்கும் (கிட்டதட்ட எட்டரை பைசா என்று கொள்ளலாம்) விற்கப்பட்டன. 1896-98 ஆம் ஆண்டு வாக்கில், 15 இலட்சம் ஏக்கர் நிலத்தை கருப்பின மக்களிடமிருந்து வெள்ளையர்கள் அபகரித்துக் கொண்டனர்.

1922 வரை ஜிம்பாப்வே நாட்டின் ஆட்சியதிகாரம் பிரிட்டிஷ் - தெற்கு ஆப்பிரிக்கா கம்பெனியின் கைகளில்தான் இருந்

www.padippakam.com

தது. இதன் காரணமாக, காலனிய ஆட்சிக் காலத்தில் ஜிம்பாப்வே, பிரிட்டிஷ் - தெற்கு ஆப்பிரிக்கா கம்பெனியின் முதலாளி சிசில் ரொடிஸின் பெயரால், ''ரொடிசியா'' என்றழைக்கப்பட்டது. 1922-க்குப் பிறகு, இந்நாட்டில் குடியேறிய வெள்ளையர்களின் தலைமையில், ஜிம்பாப்வேயில் காலனிய - நிறவெறி ஆட்சி அமைக்கப்பட்டது.




இரண்டாம் உலகப் போரின் முடிவில், கிட்டதட்ட 2,05,000 வெள்ளையர்கள் ஜிம்பாப்வேயில் குடியேறியிருந்தனர். அந்நாட்டின் மொத்த விளை நிலத்தில் 46.7 சதவீத விளைநிலங்கள் (இவையனைத்தும் பாசனவசதி கொண்ட வளமான நிலங்கள்) குடியேறிய வெள்ளையர்களிடம் இருந்தன; மீதமிருந்த வளமற்ற, சாகுபடிக்கு இலாயக்கற்ற நிலங்கள் கருப்பின மக்களின் தலையில் கட்டப்பட்டன.

ஜிம்பாப்வே நாட்டு மக்களின் காலனிய எதிர்ப்புப் போராட்டம், பிரிட்டிஷ் தென் ஆப்பிரிக்க கம்பெனி ஜிம்பாப்வேயினுள் நுழைந்தவுடனேயே தொடங்கிவிட்டது. 1970-களின் பின், ஜிம்பாப்வே கருப்பின மக்கள், காலனிய - நிறவெறி ஆட்சியை எதிர்த்து, ஆயுதப் போராட்டத்தைத் தொடுத்தனர்.

கிட்டதட்ட எட்டு ஆண்டுகளாக நடைபெற்ற ஆயுதப் போராட்டம், ஆங்கில ஏகாதிபத்தியத்தின் நேரடி காலனி - நிறவெறி ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்தது. ஜிம்பாப்வே கருப்பின மக்களின் ஆயுதப் போராட்டத்தை தலைமை தாங்கி நடத்திய தேசபக்தி முன்னணிக்கும், பிரிட்டன் ஏகாதிபத்தியத்துக்கும் இடையே உருவான லாங்கேஸ்டர் ஒப்பந்தத்தின்படி, 1980, ஏப்ரல் 18-இல் ஜிம்பாப்வே 'சுதந்திரம்' அடைந்தது.

காலனிய ஆட்சிக் காலத்தின் பொழுது, நடைமுறையில் இருந்த அரசியல் சாசன சட்டம் தான், 'சுதந்திர' ஜிம்பாப்வேயின் அரசியல் சாசன சட்டமாக இன்று வரையிலும் நடைமுறையில் இருந்து வருகிறது. அரசியல் சாசன சட்டத்தில் திருத்தங்கள் செய்வதையும், வெள்ளை இனப் பண்ணை முதலாளிகளிடம் இருந்து நிலங்களைப் பறிமுதல் செய்வதையும் தடுக்கும் விதிகள் சுதந்திரத்திற்கான ஒப்பந்தத்திலேயே சேர்க்கப்பட்டிருந்தன. சுதந்திர 'ஜிம்பாப்வே' அரசு, ஜிம்பாப்வேயில் நிரந்தரமாகக் குடியேறிவிட்ட வெள்ளை இனப் பண்ணை முதலாளிகளின் மீதே கை வைக்க முடியாதென்றால், ஜிம்பாப்வேயின் கனிமச் சுரங்கங்களைக் கட்டுப்படுத்தும் பன்னாட்டு நிறுவனங்களை எதிர்த்து விரல் நுனியைக் கூட அசைக்க முடியாது என்பதைச் சொல்லத் தேவையில்லை. மேலும், ஜிம்பாப்வேயின் நாடாளுமன்றத்தில் இருபது இடங்கள் வெள்ளை இனத்தவருக்கு ஒதுக்கப்பட்டிருந்தன. 1987-இல், ஜிம்பாப்வேயில் நாடாளுமன்ற ஆட்சி முறை ஒழிக்கப்பட்டு, அதிபர் ஆட்சி முறை கொண்டுவரப்பட்ட பொழுதுதான், இந்த இட ஒதுக்கீடு அரசியல் சாசன சட்டத் திருத்தத்தின் மூலம் ரத்து செய்யப்பட்டது.

இவையனைத்தும், ஜிம்பாப்வே அடைந்த சுதந்திரம் பெயரளவிலானது, 1947-இல், இந்தியாவில் காங்கிரசின் கைகளில் அதிகாரம் மாற்றித் தரப்பட்டதைப் போல, ஜிம்பாப்வேயில், ராபர்ட் முகாபே தலைமையில் இருந்த தேசபக்த முன்னணிக்கு அதிகாரம் மாற்றித் தரப்பட்டது என்பதைத்தான் எடுத்துக் காட்டுகின்றன.

காலனி - அரைக்காலனி நாடுகளின் விடுதலை மற்றும் சனநாயகத்திற்கான போராட்டங்களின் அடிப்படையாக இருப்பதே நிலப் பிரச்சினைதான். ''ஒரு நிலம் - ஒரு பசு'' என்பதுதான் ஆங்கில ஏகாதிபத்தியவாதிகளை எதிர்த்த ஜிம்பாப்வே கருப்பின மக்களின் ஆயுதப் போராட்டத்தின் மைய முழக்கமாக இருந்தது. ஆனால், ஆயுதப் போராட்டத்திற்குத் தலைமை தாங்கிய தேசபக்த முன்னணி ஏகாதிபத்தியவாதிகளோடு சமரசம் செய்து கொண்டதால், அந்த அமைப்பு நாட்டின் அதிகாரத்தைக் கைப்பற்றிய பின்னும் நிலச் சீர்திருத்தத்தை அமல்படுத்த முடியவில்லை. அதே சமயம், நாட்டின் விடுதலைக்காக உயிரைக் கொடுத்துப் போராடிய கருப்பின விவசாயிகளை ஏமாற்றும் நோக்கத்தோடு, ''தாமாகவே முன்வந்து தமது பண்ணைகளை விற்க வரும் வெள்ளை இனப் பண்ணை அதிபர்களுக்கு நஷ்ட ஈடு கொடுத்து நிலங்களை வாங்கி, விவசாயிகளுக்குப் பிரித்துக் கொடுப்பது; அதற்கு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் நிதியுதவி அளிப்பது'' என்ற ஒப்பந்த விதியை உருவாக்கி வைத்துக் கொண்டனர்.

தேசபக்த முன்னனியின் தலைவர் ராபர்ட் முகாபே, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திடமிருந்து அதிகாரத்தைப் பெற்றுக் கொண்ட பொழுது, ''இன்னும் ஐந்து வருடங்களுக்குள் (1985-க்குள்) முதல் கட்டமாக, 1,62,000 கருப்பினக் குடும்பங்களுக்கு நிலம் பகிர்ந்தளிக்கப்படும்'' என அறிவித்தார். ஜிம்பாப்வே சுதந்திரம் அடைந்து இருபது வருடங்கள் ஓடிவிட்டன. இந்த இருபது வருடமும் ராபர்ட் முகாபேயும், அவரது கட்சியும்தான் அதிகாரத்தில் இருந்து வருகின்றன. இந்த இருபது வருட காலத்தில் 52,000 கருப்பினக் குடும்பங்களுக்குத்தான் 27 இலட்சம் ஹெக்டேர் நிலங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. இந்த நிலங்கள் கூட முழுமையாக வெள்ளை இனப் பண்ணை அதிபர்கள் மனம் விரும்பி அரசிடம் விற்றதல்ல. தரிசாகக் கிடந்த அரசு நிலங்கள்தான், நிலச் சீர்திருத்தம் என்ற பெயரில் கருப்பின மக்களின் தலையில் கட்டப்படுகின்றன.

**நிலப்பறி இயக்கத்தில் பங்கெடுத்துக் கொண்ட கருப்பின விவசாயப் போராளிகள்.**



ஜிம்பாப்வே நாட்டின் மொத்த மக்கட் தொகை கிட்டதட்ட 1 கோடியே இருபது லட்சம். இதில், வெள்ளையர்களின் எண்ணிக்கை எழுபதாயிரம்தான். இவர்களின் கைகளில்தான் அந்நாட்டின் வளமான 1 கோடியே 10 லட்சம் ஹெக்டேர் விளைநிலங்கள் உள்ளன. ஜிம்பாப்வே நாட்டின் வளமான நிலங்களில் 20.7 சதவீதமும், எஸ்டேட்டுகளில் 70 சதவீதமும் ஒரு சில வெள்ளை இனக் குடும்பங்களுக்குச் சொந்தமானது என்கிறது ஒரு புள்ளி விவரம்.

'சுதந்திர' ஜிம்பாப்வேயில் கூட, ''மயிலே, மயிலே இறகு போடு என்றால் போடாது'' எனப் புரிந்து கொண்ட பின்னர்தான், கருப்பின விவசாயிகள் நிலப்பறி இயக்

www.padippakam.com

கத்தைத் தொடங்கினர். ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக, பரம்பரை பரம்பரையாகத் தங்களுக்குச் சொந்தமாக இருந்த நிலத்தை கருப்பின மக்கள் மீளக் கைப்பற்றுவதை "அராஜகம்" என முத்திரை குத்துகிறது ஏகாதிபத்திய உலகம். இது அராஜகம் என்றால், வெள்ளையர்கள் கருப்பின மக்களிடம் அடித்த கொள்ளையையும், திருட்டையும் என்னவென்பது? அந்த ஈனத்தனத்தை, அவர்கள் நாகரிகம் என மெச்சிக் கொள்ளுகிறார்கள்.

ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நடந்த ஆயுதப் போராட்டத்திற்குத் தலைமை தாங்கியதால், ராபர்ட் முகாபே, ஆயுதப் போராட்டம் நடந்த பொழுதும், ஜிம்பாப்வே 'சுதந்திரம்' அடைந்த பின்னரும், கருப்பின மக்களால் தேசிய நாயகனாகக் கொண்டாடப்பட்டார். ஆனால், வெற்று வாய்ச்சவடால் அரசியலைக் காட்டி எத்தனை நாள் மக்களை ஏய்க்க முடியும்? தனியார்மயம் - தாராளமயத்தால் ஜிம்பாப்வேயின் பொருளாதாரம் இன்று திவாலாகிக் கிடப்பதாலும் முகாபேயின் ஊழல் நிறைந்த சுயநல அரசியல் வெறியாட்டம் காரணமாகவும் அவரது அரசியல் செல்வாக்கு செல்லாக்காசாகி விட்டது. கிராமப்புற ஏழை கருப்பின விவசாயிகள் மத்தியில் தான் பழைய நம்பிக்கையின் அடிப்படையில், முகாபேவுக்கு ஓரளவு ஆதரவு இருக்கிறது. தேசிய அளவில் சரிந்து விட்ட தனது அரசியல் செல்வாக்கைத் தூக்கி நிறுத்தவும், நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெறவும் முகாபேவுக்கு கவர்ச்சி நிறைந்த, புரட்சிகரமான வாய்ச் சவடால் தேவைப்பட்டது. முகாபே கறுப்பின விவசாயிகளின் நிலப்பறி இயக்கத்துக்கு ஆதரவு கொடுத்து வருவதன் பின்னணி இதுதான்.

இதன் அடிப்படையில் ராபர்ட் முகாபே, 'தனது அதிபர் பதவி காலத்தை மேலும் பன்னிரண்டு ஆண்டுகள் நீட்டித்துக் கொள்ளுவதற்கும், வெள்ளை இனப் பண்ணை அதிபர்களின் நிலங்களை நட்டஈடின்றிப் பறிமுதல் செய்வதற்கும்'' தேவையான சட்டத் திருத்தங்களை முன் வைத்து, பொது ஜனவாக்கெடுப்பு ஒன்றினை கடந்த பிப்ரவரி மாதம் நடத்தினார். இந்தப் பொது ஜனவாக்கெடுப்பு தோல்வியில் முடிந்தது.

கிராமப்புற கருப்பின விவசாயிகள் இந்தத் திருத்தங்களுக்கு ஆதரவாக வாக்களித்திருந்த போதிலும், நகர்ப்புற நடுத்தர வர்க்கத்தினர், தொழிலாளர்கள் இதற்கு எதிராகவே வாக்களித்தனர். ஒரு நியாயமான பிரச்சினையை, இன்னும் சொல்லப் போனால் ஜிம்பாப்வேயின் மையமான நிலப் பிரச்சனையை முகாபே தனது சுயநல பதவி அரசியலுக்குப் பயன்படுத்திக் கொள்ள முயன்றதுதான் பொதுஜனவாக்கெடுப்பின் தோல்விக்குக் காரணமாக அமைந்தது. பொதுஜன வாக்கெடுப்பின் தோல்விக்குப் பின்னர்தான், முகாபேவின் ஆதரவோடு, கருப்பின விவசாயிகளின் நிலப்பறி இயக்கம் ஆரம்பமானது.

ஏகாதிபத்தியவாதிகளும், வெள்ளை இனப் பண்ணை அதிபர்களும், ராபர்ட் முகாபேயின் இந்த சுயநல அரசியலை முதன்மைப்படுத்தி, அதன்மூலம் விவசாயிகளின் நிலப்பறி இயக்கத்திற்கு ஏனைய கருப்பின 'உழைக்கும்' மக்கள் ஆதரவு அளித்துவிடாமல் தடுத்து வருகின்றனர். கருப்பினவிவசாயிகளுக்கும், நகர்ப்புறத்து நடுத்தர வர்க்கத்தினர் - தொழிலாளர் இடையே பிளவு ஏற்படுத்துவதன் மூலம், நிலப்பறி இயக்கத்தைத் தோல்வியுறச் செய்வதோடு, நாடாளுமன்றத் தேர்தலில் முகாபேயையும் தோற்கடித்து, வெள்ளை இனப் பண்ணை அதிபர்களின் அடிவருடியான "எம்.டி.சி." கட்சியை ஆட்சியில் அமர்த்தி விட ஏகாதிபத்தியங்கள் முயலுகின்றன; இன்னொரு புறம், தங்களோடு முரண்டு பிடித்துக் கொண்டிருக்கும் முகாபேயை வழிக்குக் கொண்டு வர, ஜிம்பாப்வேக்கு அளிக்க வேண்டிய நிதியுதவிகளை நிறுத்தி, பொருளாதார நெருக்கடியைத் தீவிரப்படுத்தி வருகின்றன.



**அரசியல் இலாபம் கருதி விவசாயிகளின் போராட்டத்திற்கு ஆதரவு கொடுத்து வரும் ஜிம்பாப்வே அதிபர் ராபர்ட் முகாபே.**

ஜிம்பாப்வேயில் நடைபெற்று வரும் விவசாயிகளின் போராட்டம், அதன் அண்டை நாடுகளின் விவசாயிகளின் ஆதரவை பெறத் தொடங்கியிருப்பதைக் கண்டுதான் ஏகாதிபத்தியவாதிகள் கிலி கொண்டுள்ளனர். அண்டை நாடுகளிலும் - குறிப்பாக தென் ஆப்பிரிக்காவிலும் கருப்பின விவசாயிகள் வெள்ளை இனப் பண்ணை அதிபர்களுக்கு எதிராகத் தன்னெழுச்சியாகப் போராடத் துவங்கி விட்டால், ஏகாதிபத்தியங்களின் மறுகாலனியாதிக்க வேகம் அரசியல் கொந்தளிப்புகளால் தடைப்பட்டுப் போகும். எனவே, ஜிம்பாப்வே கறுப்பின விவசாயிகளின் நிலப்பறி இயக்கப் போராட்டத்தை முளையிலேயே கிள்ளி எறிந்துவிட மேற்குலக ஏகாதிபத்தியங்கள் முயலுகின்றன.

ஏகாதிபத்தியத்துக்கு எதிராக நடைபெறும் தேசிய விடுதலைப் போராட்டங்கள், காலனிய அரசு இயந்திரத்தைத் தூக்கியெறியாமல் அதை அப்படியே வரித்துக் கொண்டால் ஏகாதிபத்திய முதலாளிகளின், அவர்கள் உள்நாட்டு அடிவருடிகளின் சொத்துக்களைப் பறிமுதல் செய்யாமல், அவர்களோடு சமரசம் செய்து கொண்டால் நாட்டின் விடுதலையைச் சாதிக்க முடியாது; தேசிய விடுதலைப் போராட்டத்தை இறுதி வரை நடத்திச் செல்லாமல், ஏகாதிபத்தியங்களோடு சமரசம் செய்து கொள்ளும் தேசிய முதலாளிகள்தான், பின்னர் தரகு முதலாளிகளாகச் சீரழிந்து போகிறார்கள்; காலனி - அரைக்காலனி நாடுகளின் நாடாளுமன்றத்தில் இயற்றப்படும் சட்டங்கள் மூலமாக நிலச் சீர்திருத்தத்தை அமல்படுத்திவிட முடியாது என்பதைதான் ஜிம்பாப்வேயின் அனுபவம் மீண்டும் எடுத்துக் காட்டியுள்ளது.

எனவே, கருப்பின விவசாயிகளின் போராட்டத்தின் வெற்றியானது, ராபர்ட் முகாபேயையோ, அவரது கட்சியையோ, ஜிம்பாப்வே அரசையோ சார்ந்திருக்க முடியாது; மாறாக, ஏகாதிபத்தியங்களுக்கு எதிரான வர்க்க ஒற்றுமையை - தொழிலாளர்கள் - விவசாயிகள் - நடுத்தர வர்க்கத்தினரின் ஒற்றுமையைக் கட்டியமைப்பதில்தான் இருக்கிறது.

ஜிம்பாப்வேயின் கருப்பின விவசாயிகளைப் போலவே, நிலமற்ற இந்திய விவசாயக் கூலிகளும் ஏமாற்றப்பட்டவர்கள் தானே! இந்தியப் பண்ணையார்களிடம் குவிந்திருக்கும் நிலங்களைக் கைப்பற்ற அரசு கொண்டு வந்த நில உச்சவரம்புச் சட்டமும் பண்ணையார்களின் கருணை வேண்டி அரசின் ஆதரவோடு வினோபா பாவே நடத்திய பூதான இயக்கமும் சாதித்துக் கிழித்ததென்ன என நாம் அறிய மாட்டோமா?

ஜிம்பாப்வே கருப்பின மக்களின் நிலப்பறி இயக்கத்தை அராஜகம் என அவதூறு செய்யும் வாய்கள்தான், இந்தியாவில் - தெலுங்கானாவிலும், பீகாரிலும், நக்சல்பாரிகள் தலைமையில் நடைபெற்று வரும் உழவர் போராட்டங்களை, தீவிரவாதம், பயங்கரவாதம் என முத்திரை குத்துகின்றன. தமிழகத்தில் இறால் பண்ணை அதிபர்களும், தேக்குப் பண்ணை முதலாளிகளும் அபகரித்துக் கொண்ட நிலங்களை மீட்க புரட்சியாளர்கள் தலைமையில் விவசாயிகள் போராடிய பொழுது, அந்தப் போராட்டங்களை சட்டம் - ஒழுங்கு பிரச்சினையாக முத்திரை குத்தின. இத்தகைய 'சட்ட விரோத'ப் போராட்டங்கள் மூலம்தான் அபகரித்துக் கொள்ளப்பட்ட நிலங்களை விவசாயிகள் மீட்டெடுக்க முடியும் எனும்பொழுது, இந்தப் போராட்டங்களை ஆதரிப்பதைத் தவிர வேறு என்ன வழி இருக்கிறது!

* * *

● செல்வம்

www.padippakam.com

# நாலுகால் பாய்ச்சலில் தனியார்மயம்

"நாங்கள் நிதானமின்றி, அவசர கதியில் தாராளமயமாக்கலை நடைமுறைப் படுத்த மாட்டோம்" — இது, நிதியமைச்சர் யஷ்வந்த் சின்கா சமீபத்தில் அளித்துள்ள வாக்குறுதி. அதே சமயம் உள்துறை அமைச்சர் அத்வானி, "நமது நாட்டில் தாரா ளமயமாக்கம் கொள்கை அளவில்தான் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது; இன்னும் முழுமையாக செயலுக்கு வரவில்லை" என்று குறைபட்டுக் கொண்டார். அத்வானி குறைபட்டுக் கொண்ட இடம், ஆர்.எஸ்.எஸ்.ஐச் சேர்ந்த சுதேசி விழிப்பு ணர்வு இயக்கம் நடத்திய "சுதேசி மேளா"வில் என்பதை வாசகர்களுக்குச் சொல்லி வைப்போம்.

அத்வானி குறைபட்டுக் கொண்டதும், சின்காவின் வாக்குறுதியும் ஒருவிதத்தில் ஒன்றுக்கொன்று முரண்பட்டதாகத் தெரியலாம். ஆனால், பா.ஜ.க. கூட்டணி அரசு கடந்த இரு மாதங்களில் அந்நிய மூலதனத்திற்குக் காட்டியிருக்கும் சலுகைகளையும், பொதுத்துறை நிறுவனங்களைத் தனியார் முதலாளிகளிடம் விற்று விட முடிவெடுத்திருப்பதையும் பார்த்தாலே, சின்காவின் வாக்குறுதியும், அத்வானியின் அழுகாச்சியும் எவ்வளவு மோசடியானது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

✱ தொலைபேசித் துறையில் பன்னாட்டு நிறுவனங்கள் 49 சதவீதம் வரை மூலதனம் போடலாம் என்று ராவ் அரசு காட்டியிருந்த சலுகையை விஞ்சும் வண்ணம், பா.ஜ.க. கூட்டணி அரசு அந்நிய நிறுவனங்கள் 100 சதவீதம் மூலதனமிட அனுமதி அளித்துள்ளது. உலக வர்த்தகக் கழக விதிகளின்படியே, அந்நிய நிறுவனங்கள் தொலைபேசித் துறையில் 25 சதவீதம் மூலதனமிட அனுமதி அளித்தால் போதும். ஆனால், பா.ஜ.க. கூட்டணி அரசோ தனது ஏகாதிபத்திய விசுவாசத்தைக் காட்டுவதற்காகவே 100 சதவீதம் மூலதனமிட அனுமதி அளித்துள்ளது.


✱ வைரம் உள்ளிட்ட சில அரியவகைக் கற்களை வெட்டியெடுப்பது, சுத்தப்படுத்துவது போன்ற தொழில்களில் 74% வரை பன்னாட்டு நிறுவனங்கள் மூலதனமிடச் சலுகை வழங்கப்பட்டுள்ளது. இந்த அரிய உலோகங்கள் தவிர, பிற உலோகங்களை வெட்டியெடுக்கும் சுரங்கத் தொழில்களில் 100 சதவீதம் அந்நிய முதலீட்டிற்கு அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது.

✱ காபி, டீ, ரப்பர் எஸ்டேட்டுகளில் பன்னாட்டு நிறுவனங்களில் 74 சதவீதம் வரை இனி மூலதனமிடலாம்.

✱ இந்திய முதலாளிகளின், மாநில மின்வாரியங்களின் கூட்டின்றிப் பன்னாட்டு நிறுவனங்களே 100 சதவீதம் மூலதனமிட்டு மின் நிலையங்களை அமைத்துக் கொள்ளும்படிக்கு விதிகள் தளர்த்தப்பட்டுள்ளன. 1500 கோடி ரூபாய்க்கு மேல் மூலதனம் தேவைப்படும் மின் திட்டங்கள், மைய அமைச்சரவையின் கட்டாய ஒப்புதலைப் பெற வேண்டிய அவசியம் இனி கிடையாது. அந்நிய முதலீட்டு நிறுவனங்கள் மின் திட்டங்களில் 100 சதவீதம் வரை பங்குகளை வாங்கலாம்.

✱ ஏற்றுமதி வர்த்தகத்தை நோக்கமாகக் கொண்டு அமைக்கப்படும் சிறப்புப் பொருளாதார மையங்களில் பன்னாட்டு நிறுவனங்கள், இந்திய முதலாளிகளின் கூட்டின்றி 100 சதவீதம் மூலதனமிட்டுத் தொழில் நிலையங்களை அமைத்துக் கொள்ளலாம்.

✱ குறிப்பிட்ட 22 விதமான அழகு சாதனப் பொருட்களைத் தயாரிக்கும் தொழில்களில் மூலதனமிட்டுள்ள பன்னாட்டு நிறுவனங்கள், தங்களுக்குக் கிடைக்கும் இலாபத்தை இந்தியாவில் இருந்து (டாலராக) எடுத்துச் செல்ல விரும்பினால், அதற்கு ஈடாக, இந்தியாவில் இருந்து எடுத்துச் செல்லும் தொகை அளவிற்கு, அந்நியச் செலாவணி ஈட்டியிருக்க வேண்டும். இந்த நிபந்தனையை பா.ஜ.க. கூட்டணி அரசு விலக்கிக் கொண்டு விட்டது.



சுதேசி விழிப்புணர்வு இயக்கம் ஆக்ராவில் நடத்திய "சுதேசி மேளா": மோசடி நாடகம்.

✱ மின்னணு வர்த்தகத்திலும், கச்சா எண்ணெய் சுத்திகரிப்பு தொழிலிலும் 100 சதவீதம் அந்நிய மூலதனம் பாய அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

✱ "ஃபாக்ட்" உரத் தொழிற்சாலை, ஏர்-இந்தியா, அரசு வர்த்தகக் கழகம் உள்ளிட்ட 16 பொதுத் துறை நிறுவனங்களைத் தனியார் முதலாளிகளுக்கு விற்றுவிடவும், ஆறு பொதுத்துறை நிறுவனங்களை மூடிவிடவும் மைய அமைச்சரவை முடிவெடுத்துள்ளது.

— இவையனைத்தும் தாராளமயம் - தனியார்மயத்தை நடைமுறைபடுத்துவதில் பா.ஜ.க. அரசு தறிகெட்ட வேகத்தில் போய்க் கொண்டிருக்கிறது என்பதைத்தான் எடுத்துக் காட்டுகின்றன. ஆனால், இந்த வேகம்கூட பத்தாது என்றுதான் அத்வானியும், வேறு சிலரும் பொறுமிக் கொண்டிருக்கின்றனர். முன்பு இந்தியாவை கிழக்கிந்திய கம்பெனி நேரடியாக அடிமைப்படுத்தி ஆண்டதைப் போல, இப்பொழுது பன்னாட்டு நிறுவனங்களின் முதலாளிகளும், நிர்வாகிகளும் ஆள வேண்டும் என்பதுதான் இவர்களின் விருப்பம் போலும்!

"கொழுத்த இலாபம் சம்பாதித்துக் கொண்டிருக்கும் மாருதி கார் நிறுவனம், (மும்பய், தில்லி நகரங்களில் தொலைபேசி இணைப்புகளை வழங்கும்) எம்.டி.என்.எல். நிறுவனம், (அந்நிய நாடுகளுடன் தொலை தொடர்பு / இண்டர் நெட் தொடர்பு கொள்ளுவதை நிர்வகிக்கும்) வீ.எஸ்.என்.எல்., மற்றும் பெட்ரோலிய எண்ணெய் நிறுவனங்களைத் தனியார்மயமாக்காமல் ஏமாற்றி விட்டீர்களே" என டைம்ஸ் ஆஃப் இந்தியா, இந்து நாளேடுகள் தலையங்கம் எழுதுகின்றன. "பொதுத்துறை நிறுவனங்களைத் தனியார்மயமாக்குவதால் தொழிலாளர்கள் தானே பாதிக்கப்படுவார்கள்; பிறகு, என்ன தயக்கம்?" என்று இவை கேள்வி எழுப்புகின்றன.

முதலாளித்துவப் பத்திரிகைகள் மட்டுமல்ல, பொதுத்துறை நிறுவனங்களைத் தனியாரிடம் விற்கப்படுவதைப் பொதுமக்களில் பலர் கூட ஆதரிக்கின்றனர். பொதுத்துறை ஊழியர்களிடம் இலஞ்சம், அதிகாரத் திமிர், திறமையின்மை, வேலை ஒழுங்கீனம் எல்லாம் தலைவிரித்தாடுகிறது. இந்த

www.padippakam.com

கொட்டத்தை ஒடுக்க, பொதுத்துறை நிறுவனங்களைத் தனியாரிடம் விற்பதுதான் நல்ல முடிவு எனப் பலர் கருதுகின்றனர்.



ஃபாக்ட் உரத் தொழிற்சாலை தனியாருக்கு விற்கப்படுவதைக் கண்டித்து உர ஆலைத் தொழிலாளர்கள் நடத்திய ஆர்ப்பாட்டப் பேரணி.

பொதுத்துறை ஊழியர்களிடம் தலைவிரித்தாடுவதையெல்லாம் ஒழிக்க, அந்த நிறுவனங்களைத் தனியாரிடம் விற்கத்தான் வேண்டுமா? இது, மூட்டைப் பூச்சிக்குப் பயந்து வீட்டைக் கொளுத்துவது போலாகாதா? மேலும், தனியார் துறையிடம் இலஞ்சம், திறமையின்மை, வேலை ஒழுங்கீனம் - இவையெல்லாம் இல்லையா? என்ற கேள்விகள் ஒருபுறமிருக்கட்டும். பொதுத்துறை நிறுவனங்களைத் தனியார்மயமாக்குவதால், அந்நிறுவனத் தொழிலாளர்கள் பாதிக்கப்படலாமே ஒழிய பிறருக்கோ / அரசுக்கோ எவ்விதப் பாதிப்பா / நட்டமோ ஏற்படாது எனப் பத்திரிகைகள் நியாயப்படுத்தி வருவது எந்தளவிற்கு உண்மை என்பதைப் பார்ப்போம்.

ஆந்திர மாநில அரசு மின்துறையைத் தனியார்மயமாக்கும் முதல் கட்டமாக, மின்சார விநியோகத்தை மின் துறையிடம் இருந்து தனியாகப் பிரித்து, அதனை, "ஏ.பி. டிரான்ஸ்கோ" என்ற அரசு கழகத்திடம் ஒப்படைத்தது. மின்துறை இரண்டாகப் பிரிக்கப்பட்ட பொழுது எதிர்க்காத பொது மக்கள், இன்று, அந்தக் கழகம் ஆந்திர மக்களின் மீது சுமத்தியுள்ள வரலாறு காணாத மின் கட்டண உயர்வை எதிர்த்துப் போராடுகிறார்கள்.

பருத்தி விவசாயிகளையடுத்து இப்பொழுது ஆந்திராவில் புகையிலை விவசாயிகள் கடன் சுமையால் தற்கொலை செய்து கொள்ளுகின்றனர். இந்தத் தற்கொலைச் சாவுகளைத் தடுப்பதற்காக, மிதமிஞ்சி விளைந்திருக்கும் புகையிலையை அரசு வர்த்தகக் கழகம் வாங்கிக் கொள்ள வேண்டும் எனக் கோரி அவர்கள் போராடுகின்றனர்.

இன்று இந்த நிறுவனத்தின் நிர்வாகம் அரசின் கையில் இருப்பதால், தார்மீகப் பொறுப்புடன் நடந்து கொள்ளுமாறு கோரிப் போராட முடிகிறது. நாளை நிர்வாகம் கைமாறிய பிறகு, தனியார் முதலாளிகளிடம் இந்தப் பொறுப்புணர்வை எதிர்பார்க்க முடியுமா? இன்னும் சொல்லப் போனால், தாராளமயம் - தனியார்மயத்தின் நோக்கம், அந்நிய மூலதனம் எவ்விதத் தடையுமின்றி நாட்டினுள் புக அனுமதிப்பது, பொதுத்துறை நிறுவனங்களைத் தனியாரிடம் விற்று விடுவது மட்டுமல்ல; குடிமக்களின்பால் அரசு கொண்டிருக்க வேண்டிய கடமைகள், தார்மீகப் பொறுப்புகள் அனைத்தையும் கை கழுவி விட வேண்டும் என்பதும் தான்!

சென்னையில் குப்பை அள்ளுவது சிங்கப்பூர் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டு வருவதை எதிர்த்து நகரச் சுத்தித் தொழிலாளர்களின் போராட்டம்.



பொதுத்துறை நிறுவனங்களைத் தனியாரிடம் விற்பதனை நியாயப்படுத்துவதற்கு அரசும் பத்திரிகைகளும் "அவை நட்டத்தில் இயங்குகின்றன" என்று கணக்கு காட்டுகிறார்கள். நட்டத்தில் இயங்கும் பொதுத்துறை நிறுவனங்கள் கூட தனியாரின் கைகளுக்குப் போனால், இலாபத்தில் இயங்கத் தொடங்கி விடும் என்ற மாயையை இவர்கள் மக்கள் மத்தியில் பரப்பி வருகிறார்கள்.

எத்தனையோ தனியார் நிறுவனங்கள், - பன்னாட்டு நிறுவனங்களும் கூடத் திறமையின்மையாலும், முதலாளிகளின் குறுக்குப் புத்தியாலும் நட்டமடைந்து மூடப்பட்டுள்ளன. உதாரணத்திற்குச் சொல்லப் போனால், இன்று தேசியப் பஞ்சாலைக் கழகத்தின் கீழ் இயங்கி வரும் பல பஞ்சாலைகள், முன்பு தனியாரிடம் இருந்த போது நட்டத்தில் இயங்கியவைகள்தான். இதையெல்லாம் மூடி மறைத்து விட்டு, பொதுத்துறை நிறுவனங்களின் சொத்துக்களை அபகரித்துக் கொள்ளும் நோக்கத்திற்காகவே, "பொதுத்துறை நிறுவனங்கள் என்றாலே திறமையின்மை, நட்டம் தான்; தனியார் நிறுவனங்கள் என்றாலே இலாபம் தான்" என்று பத்திரிகைகளும், தாராளமய ஆதரவாளர்களும் ஒருதலைப் பட்சமான மோசடிப் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

444 கோடி ரூபாய் நட்டத்தில் இயங்குவதாகக் கூறப்படும் ஏர்-இந்தியா நிறுவனத்தைக் கைப்பற்றிக் கொள்ள கிட்டதட்ட 10 நிறுவனங்கள் போட்டியில் குதித்துள்ளன. நட்டத்தில் இயங்கும் நிறுவனத்தை வாங்க இத்தனை போட்டி ஏன்? "எங்கள் திறமையைக் காட்டி, ஏர் - இந்தியா நிறுவனத்தை இலாபத்தில் நடத்திக் காட்டுகிறோம்" என்று சபதம் போட்டுக் கொண்டு யாரும் போட்டியில் குதிக்கவில்லை. மாறாக, நட்டத்தைக் காட்டி ஏர்-இந்தியாவின் பல்லாயிரம் கோடி சொத்துக்களை அடிமாட்டு விலைக்கு அபகரித்துக்

www.padippakam.com

கொள்ளும் போட்டியிது.

அரசு பொதுத்துறை நிறுவனங்களை விற்பதற்கு நட்டமா / இலாபமா என்பதெல்லாம் அளவுகோல் இல்லை. தாராளமயம் - தனியார்மயக் கொள்கையின்படி அரசு தொழில்களை நடத்தவும் கூடாது / முதலீடும் செய்யக் கூடாது. பட்ஜெட்டில் விழும் பற்றாக்குறையை வேறெங்கும் கடன் வாங்கிச் சமாளிக்காமல், தனது சொத்துக்களை - பொதுத்துறை நிறுவனங்களை விற்று ஈடுகட்ட வேண்டும்.

இந்த உலகவங்கி உத்தரவின்படி தான், அரசு, நட்டத்தில் இயங்கினாலும் கொழுத்த சொத்துள்ள நிறுவனங்களையும் இலாபத்தில் இயங்கும் நிறுவனங்களையும் இந்தியத் தரகு முதலாளிகளுக்கும், பன்னாட்டு நிறுவனங்களுக்கும் விற்று வருகிறது. சந்தையில் விலை போகாத நிறுவனங்கள் இழுத்து மூடப்படுகின்றன. இதை மூடி மறைத்து விட்டு, பொதுத்துறை நிறுவனங்களை விற்றுக் கிடைக்கும் பணத்தை, மக்கள் நலத் திட்டங்களுக்குப் பயன்படுத்தப் போவதாகப் புளுகி வருகிறது.

கடந்த பத்தாண்டுகளில் ரயில் கட்டணம் உயர்த்தப்படாத ஆண்டு ஒன்றாவது உண்டா? இந்தப் பத்தாண்டுகளில் பேருந்து கட்டணமும் மின் கட்டணமும் எத்தனை முறை, எத்தனை மடங்கு உயர்த்தப்பட்டிருக்கும்? இன்னும் சொல்லப் போனால், சேவைத் துறைகள் அனைத்திலும் படிப்படியாகத் தனியார்மயம் புகுத்தப்படும் பொழுது, மக்கள் நலத்திற்காகப் பொதுத்துறை நிறுவனங்களை விற்கிறோம் என்பதே மோசடித்தனமானது!

பற்றாக்குறையை ஈடுகட்ட பொதுத்துறை நிறுவனங்கள் விற்கப்படுகின்றன; அரிசிக்கும், கோதுமைக்கும், உரத்திற்கும், மண்ணெண்ணெய்க்கும் வழங்கப்பட்டு வந்த மானியங்கள் வெட்டப்படுகின்றன. ஆனாலும், பற்றாக்குறை குறையவில்லை; ஒவ்வொரு பட்ஜெட்டின் போதும் வீங்கிக் கொண்டே செல்லுகிறது. இந்த வீக்கத்துக்குக் காரணமே இந்தியத் தரகு முதலாளிகளுக்கும், பன்னாட்டு நிறுவங்களுக்கும் இந்திய அரசு அளித்துள்ள வரிச் சலுகைகள் தான். பற்றாக்குறையை சமாளிக்க 2,000 கோடி ரூபாய் அளவிற்கு மானியங்கள் வெட்டப்பட்ட இந்த ஆண்டில், அந்நிய நிதி முதலீட்டாளர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள வரிச் சலுகை மட்டும் 8,000 கோடி ரூபாய்.

அரிசி, கோதுமைக்குக் கூட மானியம் தரக்கூடாது; ஏழையாய் இருந்தாலும் சந்தை விலைக்கு வாங்கித்தான் வயிற்றைக் கழுவிக் கொள்ள வேண்டும். விவசாயமோ, நெசவோ, சிறுதொழிலோ எந்தவொரு இந்தியத் தொழிலுக்கும் இந்திய அரசு பாதுகாப்போ, மானியமோ, சலுகையையோ காட்டக் கூடாது. எல்லாவற்றையும் சந்தைதான் தீர்மானிக்க வேண்டும். இதுதான் தாராளமயம் என்று தாராளமயத்தின் ஆதரவாளர்கள் உபதேசிக்கிறார்கள். ஆனால், அவர்கள் மட்டும் சந்தையின் சூதாட்டத்தில் சிக்கிக் கொள்ளாமல், அரசிடமிருந்து வரிச் சலுகைகளையும் இலாப உத்தரவாதத்தையும் பெற்று, அரசின் பாதுகாப்போடு தப்பித்துக் கொள்கிறார்கள்.

வாக்குரிமையைக் காட்டிதான், அரசு எல்லோருக்கும் பொதுவானது என்ற மாயையை ஆளுங் கும்பல் மக்களிடம் திணித்துள்ளது. மக்களிடம் ஓட்டு வாங்கி ஆட்சியைப் பிடிக்கும் ஓட்டுக் கட்சிகள், அந்நிய மூலதனத்திற்குக் காட்டும் சலுகைகளும், பொதுத்துறையைத் தனியார்மயமாக்கும் வேகமும் அரசின் வர்க்கத் தன்மையைத் தோலுரித்துக் காட்டி விடுகின்றன. மிகவும் வெளிப்படையாகவே, பொது மக்களுக்கு விரோதமாக, முதலாளிகளுக்கு ஆதரவாக நடந்து கொள்ளும் அரசு, எப்படி எல்லோருக்கும் பொதுவானதாக இருக்க முடியும்? மக்களின் நலனைப் பற்றிச் சிறிதும் அக்கறை கொள்ளாதவர்களுக்கு, மக்களை ஆளும் உரிமை மட்டும் எதற்கு?

தனியாரின் கைகளில் இருந்த வங்கியையும், காப்பீடு துறையையும், அந்நிய நிறுவனங்களின் பிடியில் இருந்த பெட்ரோலியத் துறையையும், இன்னமும் இது போன்ற பல்வேறு தொழில்களையும் 'தேசிய'மயமாக்கியதற்கும், பொதுத்துறை நிறுவனமாக மாற்றியதற்கும், இத்தனியார் மற்றும் அந்நிய முதலாளிகள் மக்களின் சேமிப்பையும், நாட்டின் செல்வ வளங்களையும் வரைமுறையின்றிச் சூதாடி வந்ததும் ஒரு காரணம்.

இப்பொழுது மீண்டும் அந்நிய முதலாளிகளை 100 சதவீத மூலதனமிட அழைப்பதும், நாட்டின் உயிராதாரமான தொழில்களை தரகு முதலாளிகளின் / அந்நிய முதலாளிகளின் கைகளில் ஒப்படைப்பதும், மீண்டும் அவர்கள் தங்கள் கொள்ளையைத் தொடங்குவதற்கும், நாட்டை மறுகாலனியாக்குவதற்கும் தரப்படும் ஒப்புதலாகத் தான் இருக்க முடியும்.

● ரஹீம்

## "எம்.ஜி.ஆர். ஒரு புரட்சித் தலைவர்! மூப்பனார் ஒரு மனிதாபிமானி!" – திருமாவளவனின் கண்டுபிடிப்பு!

தின்பது வாழைப்பழமாக இருந்தாலும் வெளியே வரும் போது மலமாகத்தான் இருக்கும் என்று உதாரணம் காட்டி தேர்தல் பாதையைக் கடுமையாகச் சாடிவந்த திருமாவளவன், இப்போது தேர்தல் சாக்கடையில் குதித்துக் கைதேர்ந்த ஓட்டுப் பொறுக்கித் தலைவராக உயர்ந்து விட்டார். கடந்த ஜூன் 8-ந் தேதியன்று வேதாரண்யத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் திருமாவளவன் ஆற்றிய உரையே அவரது ஓட்டுப் பொறுக்கும் பிழைப்புவாதத்தை நிரூபித்துக் காட்டி விட்டது. திருமாவளவன் தனது பரப்புரையில் உதிர்த்த 'புரட்சி' முத்துக்கள் இவை:

* மாவட்டத்துக்கு இரண்டு, மூன்று நபர்கள் மட்டும் இருந்தால் புரட்சி பேசிக் கொண்டு இருக்கலாம். இலட்சக்கணக்கில் மக்கள் திரளும்போது, மக்களின் விருப்பங்களைத்தான் நிறைவேற்ற முடியும். பெரும்பான்மையான மக்கள் தேர்தலில் பங்கெடுப்பதை விரும்புவதாலேயே நாமும் பங்கேற்கிறோம்.

* ஒரு இயக்கம் புரட்சிகரமானதா, இல்லையா என்று தீர்மானிக்க தேர்தல் முறை அளவுகோல் அல்ல. ஆர்.எஸ்.எஸ். தேர்தலைப் பயன்படுத்தாத அமைப்பு; தேர்தலில் அவ்வமைப்பின் சார்பாக யாரும் போட்டியிடுவதுமில்லை. அப்படியானால் ஆர்.எஸ்.எஸ். புரட்சிகர இயக்கமா?

* தேர்தலைப் பயன்படுத்துவது என்புது, மக்கள் விரோதிகளை நாடாளுமன்ற - சட்டமன்றங்களுக்குள் நுழைய விடாமல் தடுப்பதற்கான ஒரு வழிமுறையாகும்.

* இருக்கின்ற அரசியல் தலைவர்களிலேயே மூப்பனார் ஒரு மனிதாபிமானி. தாழ்த்தப்பட்ட மக்களின் போராட்டங்களை நியாயம் என்று ஒப்புக் கொள்பவர்.

* தமிழகத்தை ஆண்ட முதல்வர்களை ஒப்பிடும்போது, எம்.ஜி.ஆர். மிகவும் சிறந்தவர். அவரைப் புரட்சித் தலைவர் என்று சொல்வதற்குப் பொருத்தமானவர். உண்மையிலேயே அவர் புரட்சித் தலைவர்!

– இப்படி தமது சந்தர்ப்பவாத கொள்கைகளுக்கு வினோதமான விளக்கமளிப்பதிலிருந்து கூட்டணித் தலைவர்களுக்குத் துதிபாடுவது வரை ஓட்டுப் பொறுக்கி கழிசடைகளின் அடியொற்றி திருமாவளவனும் சிறுத்தைகளும் நாலு கால் பாய்ச்சலில் முன்னேறி வருகின்றனர். தேர்தல் அரசியலில் இவர் கள் வெற்றி பெறுகிறார்களோ, இல்லையோ; அதற்கு முன்பாகவே இத்தகைய இயக்கங்களை நிறுவனமயமாக்கி, தமக்குச் சாதகமாக்கிக் கொள்வதில் ஆளும் வர்க்கங்களும் ஆதிக்க சாதிகளும் அரசியல் வெற்றியைச் சாதித்து விட்டன என்பதையே இது மீண்டும் நிரூபித்துக் காட்டுகிறது.

— தகவல்:
விவசாயிகள் விடுதலை முன்னணி,
வேதாரண்யம் வட்டம்.


படிப்பகம்

www.padippakam.com

# சியரா லியோனில் இந்திய இராணுவம்

# அமைதிப் படையா? கூலிப் படையா?

சியரா லியோன் - ஆப்பிரிக்க கண்டத்தின் மேற்குப் பகுதியிலுள்ள சின்னஞ்சிறு நாடு. அந்நாட்டில் தொடரும் உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டு வந்து, அமைதியையும் ஜனநாயகத்தையும் நிலைநாட்டுவது என்ற பெயரில் ஐ.நா. மன்றத்தின் மூலம் பன்னாட்டு 'அமைதிப் படை' அனுப்பப்பட்டுள்ளது. இந்த 'அமைதி'ப் படையில் நைஜீரியா, கென்யா, ஜோர்டன், ஜாம்பியா முதலான நாடுகளுடன் இந்தியப் படைகளும் பங்கேற்றுள்ளன. சியரா லியோனில் அமைதியை நிலைநாட்டச் சென்ற இந்தியப் படை வீரர்களில் 90 பேர் இதுவரை அந்நாட்டின் எதிர்த்தரப்புப் படையினரால் கொல்லப்பட்டுள்ளனர். பிறநாட்டுப் படையினருடன் இந்தியப் படைவீரர்களும் சேர்த்து ஏறத்தாழ 250 பேர் எதிர்த்தரப்புப் படையினரால் பிணைக் கைதிகளாகப் பிடித்து வைக்கப்பட்டுள்ளனர்.

கார்கில் போரில் இறந்த இராணுவச் சிப்பாய்களுக்கு நிவாரணம் - நினைவுச் சின்னம் என்று நாடெங்கும் போர்வெறியூட்டிய இந்துவெறி ஆட்சியாளர்கள், சியரா லியோனில் செத்தவனைப் பற்றி இதுவரை வாயே திறக்கவில்லை. 'தேசிய' பத்திரிகைகளோ சியரா லியோன் சாவுகள் பற்றிய செய்திகளைக் கூட முழுமையாக வெளியிடவில்லை. ஏனெனில், இது ஏகாதிபத்திய வல்லரசுகளின் மேலாதிக்க நோக்கங்களை நிறைவேற்ற கூலிப் படையாக இராணுவத்தை அனுப்பிய இந்தியாவின் எஜமான விசுவாசம்! அதனால்தான் இந்தியச் சிப்பாய்கள் அமெரிக்க ஆதிக்கத்துக்காக நரபலி கொடுக்கப்பட்டு, இன்னும் பலர் கடந்த இரு மாதங்களாக பிணைக் கைதிகளாகச் சிக்கித் தவித்த போதிலும் இந்திய ஆட்சியாளர்களும் அனைத்து ஓட்டுக் கட்சிகளும் வாய்மூடிக் கிடக்கின்றனர்.

* * *

சியரா லியோன் - ஆப்பிரிக்க கண்டத்தின் மேற்கே அட்லாண்டிக் பெருங்கடலை ஒட்டியுள்ள சின்னஞ்சிறு நாடு. தாது வளமிக்க - குறிப்பாக விலைமதிப்பற்ற வைர வளம் கொண்ட நாடு. ஆனாலும் ஏழை நாடு. அந்நாட்டின் மூன்றில் இரு பங்கு மக்கள் அரைப்பட்டினியால் பரிதவிக்கின்றனர். நாட்டின் வைர வளத்தை பல்வேறு ஏகாதிபத்தியங்களும், உள்நாட்டு ஆளுங்கும்பலும், யுத்தப் பிரபுக்களும் சுரண்டிக் கொழுத்து வருகின்றனர்.

பிரிட்டனின் காலனியாக இருந்து வந்த சியரா லியோன் 1961-இல் பெயரளவிலான சுதந்திரம் பெற்றது. தாது வளத்தையும் வைர வளத்தையும் கைப்பற்றி ஆதிக்கம் செலுத்துவதற்கான போட்டாபோட்டியில் அந்நாட்டில் தொடர்ந்து ஆட்சிக் கவிழ்ப்புகள் நடந்தன. இது மேலும் தீவிரமடைந்து கடந்த பத்தாண்டுகளாக அடுத்தடுத்து ஆட்சிக் கவிழ்ப்புகளும் உள்நாட்டுப் போரும் உக்கிரமாக நடந்து வருகிறது. சாங்கோ என்ற யுத்தப் பிரபுவின் புரட்சிகர ஐக்கிய முன்னணி எனும் பெயரிலான படைகள் ஒருபுறம், அரசு படைகள் மறுபுறம், அவற்றிலே பல்வேறு குழுக்களின் ஆதரவு பெற்ற படைகள் எனப் பிரிந்து இவை மூர்க்கமாக மோதிக் கொள்கின்றன.

சியரா லியோனில் நடப்பது வெறும் உள்நாட்டு யுத்தமல்ல. அது தேசிய எல்லைகளைக் கடந்த ஆதிக்கப் போட்டிக்கான யுத்தம். மேற்கு ஆப்பிரிக்க பகுதியில் இராணுவ மற்றும் பொருளாதார ரீதியாக வலுவாக உள்ள அமெரிக்காவின் எடுபிடி நாடாக உள்ள நைஜீரியா, மேற்கு ஆப்பிரிக்க நாடுகளின் பொருளாதாரக் குழுமம் என்ற அமைப்பின் போர்வையில் சியரா லியோனில் தலையிட்டு வெளிப்படையாகவே ஆட்சிக் கவிழ்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டது. சாங்கோவின் படைகளுக்கு எதிராக அரசு படைகளுக்கு பயிற்சியும் ஆயுத உதவியும் அளித்து வருகிறது. சியரா லியோனின் அண்டை நாடான லைபீரியாவின் அதிபர் சாங்கோவின் படைகளை ஆதரித்து வருகிறார். சியரா லியோனின் வைர வளத்தைச் சுரண்டிக் கொழுத்துவரும் பன்னாட்டு ஏகபோக நிறுவனங்கள், தமது விசுவாசப் படைகளுக்கு மாறி மாறி நிதியுத




வியும் ஆயுத உதவியும் அளிக்கின்றனர். இப்படி கடந்த பத்தாண்டுகளாக எல்லைகளைக் கடந்த நிதியுதவியுடன் சியரா லியோனின் உள்நாட்டுப் போர் தொடர்கிறது. அந்நாட்டு மக்களோ வறுமையிலும் படுகொலைகளிலும் சிக்கிப் பரிதவிக்கின்றனர். வைர வளம் அவர்களது வாழ்வை ஒளிரச் செய்யவில்லை.

கடந்த ஆண்டு ஜூலையில் சியரா லியோனில் தலையிட்ட அமெரிக்கா, அரசு தரப்பு மற்றும் எதிர்த்தரப்பு ஆயுதப் படைகளுடன் பேச்சு வார்த்தை நடத்தி ஒரு 'சமாதான' ஒப்பந்தத்தைத் திணித்தது. "லோம் ஒப்பந்தம்" என்ற இந்தத் திட்டப்படி, அரசு தரப்பும் போட்டிக் குழுக்களும் அதிகாரத்தைப் பகிர்ந்து கொண்டு, பன்னாட்டு ஏகபோக நிறுவனங்கள் வைரக் கொள்ளையைத் தடையின்றி தொடர ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால், சாங்கோ தலைமையிலான படைகள் அதிகாரத்தில் தமக்குக் கூடுதல் பங்குகோரி போரில் இறங்கியதும், தமது ஆதிக்கத்துக்கும் கொள்ளைக்கும் ஏற்பட்ட இடையூறை அகற்ற ஐ.நா. மன்றத்தின் பெயரால் ஏகாதிபத்திய வல்லரசுகள் இவ்வாண்டு தொடக்கத்தில் பன்னாட்டு அமைதிப் படைகளைக் கொண்டு போய் நிறுத்தியுள்ளன. "லோம் ஒப்பந்தத்தை செயல்படுத்துவது, அமைதியையும் ஜனநாயகத்தையும் நிலைநாட்டுவது" என்ற நோக்கத்திற்காகவே பன்னாட்டு அமைதிப் படைகள் அனுப்பப்பட்டுள்ளதாக அவை பாசாங்கு செய்கின்றன.

சுருக்கமாகச் சொன்னால், சியரா லியோனின் தாது வளங்களை - குறிப்பாக வைர வளங்களை யார் கைப்பற்றிக் கொள்வது என்பதற்கான போட்டியின் வெளிப்பாடாகவே அங்கே உக்கிரமாக உள்நாட்டுப் போர் நடக்கிறது. அதைக் கட்டுப்படுத்தி தமது ஆதிக்கச் சுரண்டலை தொடர்வதற்காகவே அங்கே ஏகாதிபத்திய வல்லரசுகள் தலையிட்டு பன்னாட்டு அமைதிப் படைகளைக் குவித்துள்ளன. எஜமானர்களின் இந்த நோக்கத்தை நிறைவேற்றும் அடியாள் வேலையைச் செய்ய, இந்தியாவும் விசுவாசமாக தனது படையினரை அமைதிப் படை என்ற பெயரில் சியரா லியோனுக்கு அனுப்பியுள்ளது.

இந்த உண்மைகளை மூடி மறைத்து சியரா லியோனில் ஊழல் ஆட்சியாளர்களுக்கும் கிளர்ச்சி இராணுவப் படையினருக்குமிடையே மோதல் வெடித்து உள்நாட்டுப் போர் நடப்பதாகவும், நாகரீகமற்ற வர்ண இன பழங்குடி பிரிவினர்களுக்கிடையே பகைமை முற்றி போர் நடப்பதாகவும் முத


படிப்பகம்

www.padippakam.com

வாளித்துவ பத்திரிகைகள் சித்தரித்து வருகின்றன. சியரா லியோன் மட்டுமல்ல; அங்கோலா, மொசொம்பிக், முதலான ஆப்பிரிக்க நாடுகளில் தொடரும் உள்நாட்டு போர்களும் நாட்டின் மூலவளங்களை யார் கைப்பற்றிக் கொள்வது என்பதற்கானதுதான். இப்போர்களை அரசுப் படைகளும் எதிர்த்தரப்பு இராணுவக் குழுக்களும் நடத்தினாலும் உண்மையில், இந்நாடுகளுக்கு வெளியிலுள்ள பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களே அவற்றுக்கு நிதியுதவியும் ஆயுத உதவியும் அளித்து இயக்குகின்றன.

* * *

முன்பு சோவியத் ஒன்றியம் ஒரு வல்லரசாக நீடித்த போது, கம்யூனிச அபாயத்தை முறியடிப்பது என்ற பெயரில் அமெரிக்க வல்லரசு தனது மேலாதிக்க ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை மூடி மறைத்து நியாயப்படுத்தியது. இப்போது ஜனநாயகம், மனித உரிமை மீட்பு, பயங்கரவாத எதிர்ப்பு, போதை மருந்து தடுப்பு, அமைதி - நிவாரணப் பணிகள் என்ற பெயரில் புதிய எதிரிகளைக் காட்டி தனது ஆக்கிரமிப்புகளை நியாயப்படுத்தி வருகிறது.

ஏகாதிபத்தியங்கள் தங்களது ஆக்கிரமிப்பு நோக்கங்களை மூடி மறைக்க, ஏகாதிபத்திய படைகளுடன் ஏழை நாட்டுப் படைகளையும் அவர்கள் சேர்த்துக் கொள்கிறார்கள். அதற்கு "சர்வதேச அமைதிப் படை" என்று பெயர் சூட்டி சாதுவான தோற்றத்தையும் அளிக்கிறார்கள். உலகை மறுபங்கீடு செய்யவும் மேலாதிக்கவும் செலுத்தவும் இந்த அமைதிப் படைகளைக் கொண்டு போய் குவிக்கிறார்கள். இவற்றைக் கொண்டு ஜனநாயகம் - மனித உரிமை மீட்பு என்ற பெயரில் தமது விசுவாசிகளின் பொம்மை அரசை ஏழை நாடுகளில் நிறுவி காலனியாதிக்கத்தைத் தொடர்வதென்பது ஏகாதிபத்தியங்களின் புதிய உத்தியாக உள்ளது.

உலகெங்கும் அமைதியையும் ஜனநாயகத்தையும் நிலைநாட்டப் போவதாகப் பசப்பிக் கொண்டு செல்லும் இப்பன்னாட்டு அமைதிப் படைகள், காந்திய உபதேசம் செய்து கொண்டிருப்பதில்லை. எந்த நாட்டில் அமைதிப் படை நுழைந்தாலும் அது மக்களின் அற்ப உடைமைகளைச் சூறையாடுவதும் பாலியல் வன்முறைகளில் ஈடுபடுவதும்தான் நடந்துள்ளது. 1993-இல் சோமாலியாவுக்கு வந்த பன்னாட்டுப் படைகள், உணவுக்காக வரிசையாக நிற்காத குற்றத்திற்காக பட்டினியில் பரிதவித்த சோமாலிய மக்கள் மீதே துப்பாக்கிச் சூடு நடத்தி வெறியாட்டம் போட்டன. இனவெறியோடு 'நாகரீகமற்ற' கருப்பின சோமாலிய மக்களை அடக்குவதும், எதிர்த்தரப்பு படையினரை ஒடுக்குவது என்ற பெயரில் குடியிருப்பு பகுதிகளின் மீதே குண்டுவீசித் தாக்குவதும் கேள்விமுறையின்றி நடந்தது.



சியரா லியோனில் கொல்லப்பட்ட 'அமைதிப்படை'ச் சிப்பாயின் சவப்பெட்டியை விமானத்தில் இருந்து இறக்கும் இந்திய இராணுவம்: அடியாள் வேலைக்குக் கிடைத்த பரிசு.

சோமாலியாவில் அமைதிப் படையால் மாண்டவர்களின் சவ ஊர்வலம் அரசியல் ஆர்ப்பாட்டங்களாக மாறின. 'அமைதி'யை நிலைநாட்டச் சென்ற பன்னாட்டு அமைதிப் படை, ஆர்ப்பாட்டக்காரர்கள் மீதே துப்பாக்கிச் சூடு நடத்தி வெறியாட்டம் போட்டது. அமைதிப் படை மீதான மக்களின் அதிருப்தியைச் சாதகமாக்கிக் கொண்டு, யுத்தப் பிரபுக்களின் படைகள் அமைதிப் படையினர் மீது எதிர்த் தாக்குதலை நடத்தி, ஏறத்தாழ 20 அமெரிக்க சிப்பாய்களை தெருவிலே எட்டி உதைத்து, சுட்டுக் கொன்று, சிறுநீர் கழித்து அவமானப் படுத்தின.


இதனால் உலக அரங்கில் அம்பலப் பட்டு போய், உள்நாட்டிலும் எதிர்ப்புகள் வரத் தொடங்கியதும் ஜனநாயக நாடக மாடும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் இப்போது புதிய உத்தியைப் பின்பற்றுகின்றனர். தமது ஆதிக்கமும் அட்டூழியமும் அம்பலப்படாதிருக்க, ஏழைநாட்டுப் படையினரை அதிக அளவில் சேர்த்து, அவர்களையே முன்னிறுத்தி அமைதிப் படைகளை இயக்குகின்றனர்.

இந்த வகையில்தான் ஏகாதிபத்திய எஜமானர்களுக்கு அடியாள் வேலை செய்ய இந்தியாவும் அமைதிப் படையை அனுப்புகிறது. அமைதிப் படைவீரர்களுக்கு 4 மடங்கு அதிக சம்பளம் கிடைக்கும்; அதுவும் டாலராக கிடைப்பதால் அந்நியச் செலாவணி இருப்புப் பெருகும் என்று நப்பாசையுடன் கூலிப்படையினரை அனுப்ப நாயாய் அலைகிறது. இத்தகைய விசுவாச சேவையின் மூலம் ஐ.நா. பாதுகாப்புக் கவுன்சிலில் நிரந்தர உறுப்பினர் பதவியைப் பெறவும், தெற்காசிய பிராந்தியத்தில் ஏகாதிபத்திய கட்டளையை நிறைவேற்றும் துணைவல்லரசாக அங்கீகாரம் பெறவும் இந்திய ஆட்சியாளர்கள் துடிக்கின்றனர். அகண்ட பாரதக் கனவுடன் ஈழத்தை ஆக்கிரமித்து மேலாதிக்கம் செலுத்தும் நோக்கத்துடன், அமைதிப் படையை ஏவ தருணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். போரினால் பாதிக்கப்பட்டுள்ள ஈழ மக்களுக்கு நிவாரண உதவி செய்வது என்ற பெயரில் சர்வ கட்சி ஆதரவுடன் அதைச் சாதிக்க முயற்சித்து வருகிறார்கள்.

இந்நிலையில் ஈழம் மட்டுமல்ல; சியரா லியோன் உள்ளிட்டு உலகின் எந்தவொரு நாட்டிலும் தேசத்திலும் அமைதி, ஜனநாயகம், மனிதாபிமான உதவி, மனித உரிமை மீட்பு என்ற பெயரில் ஏகாதிபத்திய வல்லரசுகளும் அவற்றின் விசுவாச அடியாட்களான இந்தியா போன்ற பிராந்திய துணை வல்லரசுகளும் தலையீடு செய்வதையும், அமைதிப் படைகளைக் குவித்து புதிய வடிவில் ஆதிக்கம் செய்யத் துடிப்பதையும் இவற்றை அங்கீகரித்து நியாயப்படுத்தும் ஐ.நா. மன்றத்தையும் ஒடுக்கப்பட்ட நாடுகளும் தேசங்களும் மக்களும் அம்பலப்படுத்தி முறியடிக்க வேண்டும்.

● பாலன்

லெபனானில் வந்திறங்கும் இந்திய 'அமைதிப்படை': வல்லரசுகளின் மேலாதிக்க நடவடிக்கைகளுக்குத் தொண்டூழியம்.




படிப்பகம்




# வாசகர் கடிதம்

★ ஈழம் மலருமா? இழுபறி நீடிக்குமா? என்ற கட்டுரை நடுநிலையான அலசல், நல்ல தொரு தீர்வு, நியாயமான முடிவு. நீதிபதிகள் புனிதர்களா? என்ற கட்டுரையானது கருப்பு அங்கிகளுக்கு கௌரவமான கசையடி. இதிலே முன்னோடி என்ற முறையில் அநீதி பதி சிவப்பாவைப் பற்றியும் சில வரிகள் எழுதியிருக்கலாம். உலகமயமாக்கலின் அடுத்த பலி தேயிலை விவசாயிகள் எனும் கட்டுரை, ஊட்டியின் முகத்தை மட்டுமே பார்த்து ரசித்தவர்களுக்கு, உலகமயம் எனும் இருண்ட மேக மூட்டத்தை விலக்கி, அதன் போராட்ட வயிற்றை வெப்பத்துடன் வெளிப்படுத்தியது. மார்க்சிஸ்ட் கட்சியின் முகத்திரையைக் கிழிக்க புதிய ஜனநாயகத் துக்கு ஒரு வகையில் உதவி செய்த "இந்து" நாளேட்டுக்கு நன்றி சொல்லத்தான் வேண்டும்.

**– தர்மராஜ், திருச்சி**

★ ஜூன் மாத இதழைப் படித்தேன். கல்வி யானது ஏழைகளுக்கு எட்டாக் கனியாகி விட்டது; ஏழைகளுக்கு இனி கல்வி இல்லை என்பதை அறிந்து மிகுந்த வேதனையும், அர சாங்கத்தின் மீது வெறுப்பும் அடைந்தேன். ரவுடிகளை விட போலீசாரே ரவுடித்தனத் திலும் கொலை வெறியாட்டத்திலும் முன்ன ணியில் இருக்கிறார்கள் என்பதை பொன்மலை போலீசு நிலை யத்தில் நடந்த கொலை தெளிவாக்குகிறது.

**– உமர் அலி, திருச்சி**

★ புதிய ஜனநாயகம் சற்றுத் தாமதமாக வந்தாலும் நிறைவாக உள்ளது. ஈழப் பிரச்சினையை விரிவாகவும் ஆழமாகவும் கூர்மை யானவாதங்களுடன் பு.ஜ. மட்டுமே தெள்ளத் தெளிவாக்கியுள்ளது. பு.ஜ.வின் தலையங்கங்கள் மக்களின் செவிட்டில் அறைந்து உரைக் குமாறு கூறுவது அதன் தனிச்சிறப்பு. போராட்டங்களின் நோக்கம் என்ன? கட்டுரை மூலம் சி.பி.எம். கட்சியின் முகத்திரையை கிழித்தி ருப்பது சரியான அடி.

**– முரளி, இராசபாளையம்**

★ தொழிலாளியாகிய நான், புதிய ஜனநாயகம் இதழ் வெளியா னதும், சென்னை பெருநகர ரயில் வண்டியில் தனிநபராகவே விற்பனை செய்து வருகிறேன். சென்ற மாதம் பு.ஜ. இதழை அறிமு கப்படுத்தி பயணிகளிடம் நான் பிரச்சாரம் செய்து கொண்டிருந்த போது, ஒருவர் தொடர்ந்து கிண்டல் - கேலி செய்து தொல்லை கொடுத்துக் கொண்டிருந்தார். அவரது எல்லை மீறிய தொல்லையால் எரிச்சலடைந்த மற்றொரு பயணி, "நாட்டு நிலைமையை விளக்கி மக்களுக்கு ஆதரவா அவர் பேசுறதக் கேட்காம ஏன்டா இப்படி தொந்தரவு செய்யுற?" என்று கேட்டு, தொல்லை கொடுத்தவரை ஓங்கி அறைந்தார். நான் குறுக்கிட்டு "இப்படிச் செய்யாதீர்கள்" என்று தடுத்தபோது, மற்ற பயணிகள் "இப்படிப்பட்டவனை உதைப்ப துதான் சரி; நீங்கள் பத்திரிகை விற்பனை வேலையைப் பாருங்கள்" என்று ஆதரவாகப் பேசினர்.

மற்றொரு நாள் நான் ரயில் வண்டியில் பத்திரிகை விற்பனை செய்து கொண்டிருந்தபோது, அரசு ஊழியர் போல் இருந்த இருவர், "வேலை வெட்டி இல்லாதவன்தான் இப்படி வயிற்றுப் பிழைப்புக் காக இந்த வேலையைச் செய்வான்" என்று கேவலமாகப் பேசினர். உடனே சக பயணிகள் அவ்விருவரையும் சூழ்ந்து கொண்டு, "ஏன்டா இப்படி திமிரா பேசுறீங்க?" என்று கேள்வி மேல் கேள்வி கேட்டு அவர்களைத் துளைத்துக் கொண்டிருந்தனர். உடனே நான் குறுக்கிட்டு, "ஏதோ விபரம் தெரியாமல் பேசிவிட்டார்கள். இதோடு விட்டு 'விடுங்கள்'' என்றபோது, "சார்! நீங்கள் உங்கள் பத்திரிகை விற்பனை வேலையைப் பாருங்கள்! நாங்கள் இவனுங் களைப் பார்த்துக் கொள்கிறோம்!" என்று ரயில் பெட்டியில் இருந்தவர்கள் ஆதர வாகப் பேசினர். கேவலமாகப் பேசியவர்கள் பீதியடைந்து, கூனிக் குறுகிப் போயினர்.

நமது பத்திரிகையின் அரசியல் கருத் துக்கள் சரியானதாக இருப்பதாலும், தொடர்ச்சியாக நாம் ரயில் வண்டியில் பிரச் சாரம் செய்து விற்பனை செய்து வருவ தாலும் மக்களிடம் நம்மீது நம்பிக்கையும் ஆதரவும் உள்ளது. மக்களிடம் நமது பத்திரி கைக்கு எப்போதுமே வரவேற்பு உள்ளதால், நான் தனி நபராக பத்திரிகையைப் பிரச்சாரம் செய்து விற்பனை செய்தாலும், எனக்கு அது எளிமையான பணியாகவே உள்ளது.

**– வேலு, சென்னை**

★ புதிய ஜனநாயகம் இதழின் செய்திகளும் கட்டுரைகளும் உழைக்கும் மக்களுக்கும் ஜனநாயகவாதிகளுக்கும் மிகத் தேவையான கருவூலமாக உள்ளது. குறிப்பாக, பின்னட் டையில் இதுதான் இன்றைய இந்தியா - பட விளக்கம் அருமை. கல்விக் கட்டண உயர்வு பற்றிய கட்டுரை மாணவர்களுக்குத் தேர்ந்த தெளிவுரை. "ஆளுங் கட்சியானால் நியாயப்படுத்து; எதிர்க் கட்சி யானால் போராடு" என்ற விலைவாசி உயர்வு கட்டுரை மூலம் நில வுகின்ற அரசமைப்பிற்குத் தலைமை தாங்கும் போலி சனநாயகவாதி களையும் அவர்களின் அடிபொற்றிச் செல்லும் போலி கம்யூனிச கோணங்கிப் பூசாரிகளையும் தோலுரித்துக் காட்டி விட்டீர்கள்.

**– செம்மலர் மா. நடராசன், அறந்தாங்கி**

★ தருமபுரி மட்டுமல்ல; தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களும் தருமபுரியைப் போல் சிவக்க வேண்டும். அப்பொழுதுதான் உழைக்கும் மக்களுக்கு உண்மையான விடியல் பிறக்கும். அதை நக்சல்பாரி புரட்சியாளர்களால் மட்டுமே சாதிக்க முடியும்.

**– விடியலரசன், சென்னை**

★ நீதிபதிகள் புனிதர்களா? நிச்சயம் கேள்வி பிறக்கும். நீக்கமற நிறைந்திருக்கும் இலஞ்சத்திற்கு நீதிபதிகளும் விலக்கல்ல எனும் பதில் கிடைக்கும். வாசிக்கும் வாசகரை வசப்படுத்தி விட்டார், மாணிக்கவாசகர்!

**– கவிஞர் இரா. சுரா, சென்னை**

★ மே மாத இதழில் கிருஷ்ணசாமி, திருமாவளவன் ஆகியோரின் பிழைப்புவாத அரசியலைத் தோலுரித்துக் காட்டிய விதம் சிறப்பா னது. பத்திரிகையை மக்களிடம் அறிமுகப்படுத்தி விற்பனை செய்த போது வரவேற்று ஆதரவளித்தனர். குறிப்பாக விடுதலைச் சிறுத் தைகள் - புதிய தமிழகம் கட்சியின் அணிகளே தமது தலைமையின் சந்தர்ப்பவாதத்தை நியாயப்படுத்த முடியாமல் பு.ஜ.வின் நிலைப் பாடு சரியானதுதான் என அங்கீகரித்துள்ளனர்.

**–வாசகர் வட்டம், கரூர்**

★ சங்கயா வாஹினி திட்டத்தின் மூலம் இந்தியாவின் இராணுவ இர கசியங்கள்கூட அமெரிக்காவின் காலடியில் வைக்கப்பட உள்ளன என்ற தகவல் பேரதிர்ச்சி அளித்ததோடு, ஆளும் வர்க்கத்தின் சதிக ளையும் வெளிச்சம் போட்டுக் காட்டியது.

**– நிர்மலா, திருச்சி**

Published and Owned by R. SHANMUGARAJ, 25, Arunachalam St., Jothiramalinga Nagar, Chennai - 600 083.
Printed by him at EZHIL PRINTS, 110, IInd Floor, 63, Arcot Rd., Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ.

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM
(TAMIL FORTNIGHTLY)
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPER
FOR INDIA UNDER NO. 42648/85
Regd. No. TN/Chief.PMG- 544 / 2000

# இதுதான் இன்றைய இந்தியா




இந்த இரு படங்களில், ஒன்று, கிரிக்கெட் போட்டி சூதாட்ட விவகாரத்தில் கபில்தேவ் மீது அபாண்டமாகப் பழி சுமத்தப்படுவதாகக் கூறி, கபில்தேவுக்கு ஆதரவாக சர்வமதச் சாமியார்கள் தலைமையில் தில்லியில் நடந்த ஊர்வலம். மற்றொன்று, தென் ஆப்பிரிக்க கிரிக்கெட் வீரர் குரோனியே அசாருதீன்தான் தனக்குக் கிரிக்கெட் சூதாட்டத் தரகர்களை அறிமுகப்படுத்தியதாகத் தெரிவித்தவுடனேயே, கல்கத்தாவைச் சேர்ந்த கிரிக்கெட் ரசிகர்கள் சங்கம், அசாருதீன் படத்துக்குச் செருப்பு மாலை அணிவித்து நடத்திய ஊர்வலம்.

கபில்தேவ், அசாருதீன் - இந்த இருவர் மீதுமே குற்றச் சாட்டுகள் கூறப்பட்டுள்ளன. இந்த இருவரின் கடந்தகால நடத்தையைப் பற்றி மையப் புலனாய்வுத் துறை விசாரித்தும் வருகிறது.

அப்படியிருக்கையில், விசாரணையின் முடிவு தெரிவதற்கு முன்பாகவே, ஆன்மீகத்தைப் பரப்புவதாக கூறிக் கொள்ளும் சாமியார்கள், கபில்தேவ் குற்றமற்றவர், அப்பாவி என்ற கருத்தைப் பரப்பிக் கொண்டு திரிகிறார்கள். கல்கத்தா ரசிகர்களுக்கு கபில்தேவின் மீதான குற்றச் சாட்டுகள் பெரிதாகத் தெரியவில்லை.

அசாருதீன், "நான் முசுலீம்; அதனால்தான் என்மீது குற்றம் சுமத்துகிறார்கள்" எனத் தன்னை நியாயப்படுத்திக் கொள்ள முயன்றபொழுது, வானத்துக்கும் பூமிக்கும் எம்பிக் குதித்தவர்கள், கபில்தேவுக்கு ஆதரவாக சர்வமதத் தலைவர்கள் நடத்திய ஊர்வலத்தைக் கேள்விக்குள்ளாக்கவில்லை.

"அவுட்லுக்" என்ற ஆங்கில வார இதழ் கபில்தேவ் மீது கூறப்பட்டுள்ள குற்றச் சாட்டுகள் பற்றி ஓர் ஆய்வு நடத்தி, "63 சதவீத பொதுமக்கள் கபில்தேவைக் குற்றமற்றவராகக் கருதுவதாக"ச் செய்தி வெளியிட்டது. அதே இதழ் அசாருதீன் மீதான குற்றச்சாட்டுகள் பற்றி செய்தி வெளியிட்டபொழுது, "அசாருதீன் 101 சதவீதம் சூதாட்டத்தில் ஈடுபட்டிருப்பார்" என்று மும்பையைச் சேர்ந்த உயர் போலீசு அதிகாரி சொன்னதைக் கொட்டை எழுத்துக்களில் போட்டது.

பத்திரிகைகளுக்குக் கடிதம் எழுதும் பெரும்பாலான (இந்து) கிரிக்கெட் ரசிகர்கள், "கபில்தேவ் உலகக் கோப்பையை இந்தியாவிற்கு வாங்கித் தந்தவர்; அப்படிப்பட்டவர் மீது குற்றஞ் சுமத்துவது அபாண்டம்" என்றவாறு கடிதம் எழுதுகிறார்கள்.

அசாருதீனும் சிறந்த கிரிக்கெட் வீரர்தான்; இந்திய அணியின் வெற்றிகளுக்கு அவரது திறமையும்தான் பயன்பட்டிருக்கிறது. என்றாலும், கிரிக்கெட் ரசிகர்கள் கபிலுக்கு வழங்கும் சலுகையை, அசாருதீனுக்குக் காட்டுவதில்லை.

ஏன் இந்த ஓரவஞ்சனை? "கபில், இந்து; அசாருதீன் முசுலீம்" என்ற காமாலைப் பார்வைதானே இதற்குக் காரணமாக இருக்க முடியும். இது ஒன்றும் அபாண்டமான குற்றச்சாட்டல்ல.

முசுலீம் தீவிரவாதிகளை பயங்கரவாதிகள், தேச விரோதிகள் என்று சாடும் தேசியப் பத்திரிகைகள், இந்து மதவெறி அமைப்புகளை தேச விரோதிகளாகக் காட்டுவதில்லை. மும்பையிலும், கோவையிலும் குண்டு வெடிப்புகளை நடத்தி அப்பாவிகளைக் கொன்ற முசுலீம் பயங்கரவாதிகள் சிறையில் இருக்கும் பொழுது, இரத யாத்திரையின் பொழுதும், மும்பய்க் கலவரத்தின் பொழுதும் ஆயிரக்கணக்கான முசுலீம்களைக் கொன்ற இந்து மதவெறி பயங்கரவாதிகள் எப்படி மைய அமைச்சர்களாகச் சுற்றி வர முடிகிறது என்று பெரும்பாலான 'இந்துக்கள்' சிந்திப்பதில்லை.




அசாருதீன் மீதும், கபில் தேவின் மீதும் சுமத்தப்பட்டுள்ள ஒரே மாதிரியான குற்றச் சாட்டுக்களை ஒருதலைப்பட்சமாக அணுகுவதை இதனின் தொடர்ச்சியாகத்தான் பார்க்க முடியும். பெரும்பாலான இந்துக்களிடமும் காணப்படும் இந்த ஒருதலைப்பட்சமான பார்வையை, இந்து மதவெறி அரசியலை ஒழித்துக் காட்டாமல், இந்து மதவெறி அமைப்புகளை முறியடித்துவிட முடியுமா?